[illegible]

[illegible]

[illegible]

T. D. R. C. 34

R. R. [illegible] 38. 4. 1913

5:851
N13
116999

786

ஞான

விநோத அஷ்டமாசித்

தென்னும்

# மெஸ்மெரிஸம்

# MESMERISM

வத்தலக்குண்டு

மஸ்தான்சாமியாரென்ற

P. K. மைதீன் பாக்ஷா

அவர்களால்

சென்னை

கல்விப்பிரகாசம் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது

முதற்பதிப்பு காப்பி-1000

1913

All Rights Reserved.

விலை புக்கு 1க்கு ரூபா 2—0—0

V. P. சார்ஜ் பிரத்தியேகம்.

116991

S:851
N13

786

மெய்ப்பிணியைத்தீர்க்க மேதினியில் மெஸ்மெரிஸம்
செய்ப்பிக்கும் சித்தசுகசித்,

மெஸ்மெரிஸம்

# முகவுரை

## கல்வியிற்சிறந்த நன்பர்காள்!

எந்த ஒன்று எல்லாமாயும் எல்லாத்தையுமறிவிக்கத் தக்கதாகியு முள்ளதோ அந்த ஒன்றையே யாமறியவேண்டிய தவசியம், லவ சியம் இப்புவியின் கண் மெஸ்மரேஸ ஹிப்னாடிஸமெனிய விஷயமா யுள்ள புத்தகங்கள் இங்கிலீஸ் உருது தமிழ்பாஷைகளில் சில வெளிவந்தாலாவதினும் அப்புத்தகங்களிற் சிலது கதைப்போங் காகவும் மெஸ்மரேஸ மகிமையே வற்ணித்துக் கூறியதாகவும் அப்பியாசமுறைகளும் வைத்தியபாகங்களும் நன்குறப்புலப்படா மையும் சுகமின்மையுமாயிருப்பதைக் கண்ணுற்ற போடிநாயக் கனூர் ஆத்மஞான ஸபையோர்களும் வத்தலக்குண்டுஸோஹ ஸன் மார்க்க ஸமரஸ வேதாந்த ஸபையோர்களும் தத்தமது ஸபை யின் மெம்பர்களுக்காகவும் மற்றநேயர்களுக்காகவும் வழுத்தர் அஜாயிபுல் ஆலம் நறக்கீகத்தால் இன்சான் அல்முருல் வாகிதி யத்தென்னும் பரிசுத்தக்கலிமாவின் விளக்கம் முதலிய சிறந்த கர்த்தாவும் ஆத்மஞானலெக்சரும் மெஞ்ஞான சொரூபருமாகிய மகான் பசாமிஹைது A முகம்மத்தா ஷிர்ஷாக்காதிரியவர் அவர்களி டம்தமிழில் படத்துடன் மெஸ்மரிஸ புக் தயார் செய்து தரும் படியன் முறையும் வேண்டிக் கொண்ட நிமித்தம், அம்மகான் ளாகிப்பவர்கள் (3) பாகம் தயார்செய்து தமிழ்பாஷையில் 1 வதுபாகம் ஞானவிநோத அஷ்டமாசித்தென்னும் மெஸ்மெரி ஸம் என்று பெயறமைத்த இப்புத்தகம் படத்துடனெமதிடம் தந்தருள யான்வாங்கி மிகுந்த பிரயாஸையுடன் அச்சிற்பதிப் பித்து வெளிப்படுத்தி இருக்குறேன்.

இப்புத்தகம் முதலாவது பதிப்பாகையால் சிற்சிலஎழுத் துப்பிழைசொற்குற்றம் அச்சுப்பிழையிருக்கின் நேயர்கள் எம்

மீது குறை கூறியிருக்குக அடுத்த 2ம் பதிப்பில் யாதொருவழுவு மில்லாது சுத்தப்பதிப்பாகப் பதிப்பிப்பதுடன் 2ம் பாகமாகிய ஞானவிநோத ஹெப்னடிஸமும் (3)ம்பாகமாகிய இஸ்பிரீசுவலி சமும் சீக்கிரமாகப்பதிப்பிக்கப்படும்.

## முக்கியவிசேஷம்.

போடிநாயக்கனூர் ஆத்மஞான ஸபையின் பொக்கிஷதாரும் எமதுநேயரும் பருத்தி இலவம்பஞ்சுபலசரக்கு மளிகை சொந்த வியாபாரமும் கமிஷன்ஏஜன்ஸுமாகிய செளவித்தார்த்த ஸ்ரீநா. பெ. பழனியப்பன்செட்டியாரவர்களின் பொருளுதவியும் அடிக்கடி ஆண்டுதோறுமில்லாவிடின் இப்புத்தகம் சீக்கிரத்தில் அச்சிட்டு முன்வருதல் கஷ்டமென்பதையுணர்ந்த யான் ஸெட்டியார் செய்த நன்றிக்காக பலதடவையும் கடவுளிடம் நா. பெ. பழ வுக்கு ஆத்மஞானப்பதவியும், தக்க தனபாக்கியமும் புகழும் பெற்றுவாழ்ந்த அருளையுடைய பிரார்த்தித்தாசி கூறுகின்றனன்

இப்புத்தகம்மெடிகல் ஆபீஸர் ஸ்ரீனி தமிழ் வைத்தியர்களுக்கு மிக்க உபயோகமானதாக விருக்கின்றன

இப்புத்தகம் வேண்டியவர்கள் மதுரை திருவல்லிக்கேணி ஐரோட் 113/114 நெம்பர் வீடு ஆபீஸ்கத்திப்புசெய்த சேக் தாயபு அவர்களிடமும்

போடிநாயக்கனூர் மளிகை நா. பெ. பழனியப்பன் செட்டியாரவர்களிடமும்,

போடிநாயக்கனூர் யுனானிடிஸ்பென்ஸரியம் P. K. மஸ்தான் சாமியார் என்ற முகைய்யதீன்பாஷா விடமும். V. P. யிலும் நேரிலும்பெற்றுக்கொள்ளலாம்

சுபம்

இங்ஙனம்

போடி ஆத்மஞானஸபையின்பிரசிடெண்டும் வத்தலக்குண்டு ஸ ஸன்மார்க்கசமரஸவேதாந்தஸபையின் ஸெக்ரடேரியமாகிய மஸ்தா ன்சாமியாரென்ற P. K. மைதீன் பாஷா யுனானிடிஸ்பென்ஸரி ம் வத்தலக்குண்டு



Sart Guru. A. Mohammed Tagir Sahib.
(VALTHOOR)

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.

# மெஸ்மெரிஸம்.

OFFICE OF ... REGISTRAR OF ... 2 - OCT 1913 MADRAS

அதாவது,

இல்மெதலஸ்ஜாவென்னும் சித்தத்தோர்மை, கவர்ச்சி ஞானம் அல்லது தல்ஸம் ஓர் வசியசித்தியென்று சொல்லப்படும். இது கவர்ச்சிக்கு மூலகாரணம் கவரப்படுபொருள் கவர்ச்சித்தத்துவமிவைகளையும்; இவைகளின் பண்பினாலுண்டாகும் பயனையும் விபரிக்கப்பெற்றது. இதைக்குறித்து வேதங்கள் தீர்க்கதரிசனங்கள் முதலான முக்கியப்பிரமாணங்களில், விபரிக்கப்பட்டிருக்கிற வாக்கியங்களை தங்களின் பரிசுத்த மெய்ஞ்ஞான அருளினாலும், பரிபூரணக் கடாட்சானுக்கிரகத்தினாலும் விளங்கியறிந்த, காட்சிஞானப்பிரகாச வேதாந்திகளின் அபிப்பிராயத்துக்கு சில பண்பில் கிஞ்சித்து பேதமாயும்; அரஸ்தாத்தாலிஸ்ஜாலினூஸ் முதலான யூனானி ஹொக்குமாக்களாகிய தத்துவஞானிகளின் கருத்துகளுக்குப் பல பண்பில் ஒருவாறு ஒற்றுமையாயும் தங்களனுபவத்தில் விளங்கியறிந்துகொண்டபடி மெஸ்மெரிஸஞானிகள் சொல்வதாவது:— ஒப்புவமையில்லாதபடி சர்வவியாபகமாயுள்ள ஒரு மூலசத்து நடுமையமென்னும் பாதாளமாகிய தஹ்த்ததராவிலிருந்து அண்டத்திலுள்ள சுரையா வென்னும் கார்த்திகை நக்ஷத்திரம்வரையில் நிறைந்துள்ள, சிருஷ்டிப்பொருள்களுக்கு மூல அசலாய் நின்று, கவர்ச்சித்தத்துவத்தைக்கொடுத்துக்கொண்டிருக்கிறது:— பார்வையினும், பார்க்கப்படுவதினும், இக்கவர்ச்சி தத்துவம் காணப்படுவதாயும், வேறு தத்துவங்களின் விளைவுஸ்தலமாயும், ஒவ்வொரு ஆதார அணுக்களுக்கு மூலகாரணமாயுமிருக்கின்றது. சூரியனும் சந்திரனும் இதனெதிரில் பிரகாசமற்ற ஒரணுவுக்கொப்பானவைகள் இதுவோ தனது மெய்ப்பிரகாசத்தினால் எங்கும் வியாபித்து, இரகசியம், பரகசியம், அந்தரங்கம், பகிரங்கமுதலிய எவையும், விளங்கிக்கொள்ளக்கூடியதாயிருக்கின்றது. ஆகையாலிக்கவர்ச்சி தத்துவத்தை யறிந்த, பிரியமாகிய நேயர்களே? தங்களுக்குள் இதைக்கட்டுப்

படுத்திக்கொண்டிருப்பின், சிருஷ்டிகளே! இன்பப்படுத்துதலுக்கும், துன்பப்படுத்துதலுக்கும் இதில் நிறைந்தக்காரணங்களைத் தெரிந்து திறமைபெற்றுக்கொள்வீர்கள். ஆகவே எந்தப்படைக்கப்படுபொருள்களுக்கும், விசேஷமாய் மனிதருக்கும், துன்பங்கொடாதீர்கள். துன்பிக்குதல் தன்னைத்தானே துன்பிக்குதலாயிருக்கும். சிருஷ்டிப்பொருள்களிலுண்டாயிருக்கின்ற இக்கவர்ச்சித்தத்துவத்தின் உதவியால், சிருஷ்டிக்கருத்தாவின் வல்லமைகள், காணவும்; அறியவும்படுகின்றன. இத்தத்துவப்பரிமாற்றம் யாவருக்கும் சாத்தியப்படாமல், மற்றப்படி விசேஷ அப்பியாசிகளுக்குமாத்திரம் கூடுமாயின்றது. ஒழுங்காய் இதைக்குறித்து விபரிக்கப்படுகிற அறிவு ஆத்மஞானமாகிய இல்மெஸ்றூஹானியென்று சொல்லப்படும், இத்தத்துவப்பரிமாற்றம், அப்பியாசத்தாலுண்டாகின்றது. பூரணவிருப்பமுடையோரெவருமிடைவிடாது, அப்பியசித்தல்வேண்டும். ஆகவே இது மட்டுப்படுத்தமுடியாத மகா! கண்ணியத்தையுடையது. அனேகர்களிதையறிய அதிஷ்டவினர்களாயிருக்கிறார்கள். இதனால் தாழ்மையுள்ளநான், சிலதோழர்களுக்குக் கற்றுக்கொடுக்க; வாக்குத்தத்தஞ்செய்திருக்கிறேன்.

மனிதனாகிய இன்சானுடைய சரீரம், இந்த ஒளிநகர்கிற ஒரு மெஷினாயிருக்கும். ஆகையால் இந்த ஒளியிந்த மெஷினுடைய உதவியால், அசைவில் வருகின்றது. அதின்விபரமாவது இந்த ஒளி, கைவிரல்கள், கண்கள், மூக்கு, இவைகளினுதவியால் இந்த மெஷினிலிருந்தும்; வெளிப்படுகின்றது. இதை அப்பியாசிக்கிறதால் மனிதர்கள், தங்களல்லாததை: அதாவது மற்றவைகளை சமயோசிதமாய் தங்களுக்கு; வழிப்படக்கொண்டுவருகிறார்கள்: அதாவது கைதி உரிமைவிடப்படுதலும், புலன்கள் விருப்பத்துக்கு வசப்படுதலும்; (முதர்ரிக்) ஞானமென்னும் யாவையும் எத்திக்கொள்ளும் தத்துவமும்; நினைவு, எண்ணம்வகைறாக்களும்;, உறம்புதலும், ஒடுங்குதலும் உட்காருதல் எழுந்திரிக்கலும், துக்கமும், சந்தோஷமும், இதனால் எப்படி அதீனப்படுத்திக்கொள்கிறனென்றால்: சமயோசிதமாய்த் தான் தன் அவய



வங்களை அதீனப்படுத்திக்கொள்வதுபோலேயாம். இதினுதவியால் செய்கிறவனாகிய ஆமில், செய்யப்படுகிறவனாகிய மாமூலில், ஒரு சக்தியையெப்படி உண்டாக்குகிறனென்றால்:- வசப்பட்டவன் நன்று வெளிப்பார்வையன்றியே சமீபம், தூரம், வெளிப்படை, உட்படை, இருள், ஒளிவகைராக்களிலும்; இரகசியம், பரசியங்களிலும் பார்த்துப் பரிசோதிக்கக்கூடியவனுயும்;, மனிதர்களின்புத்தி இதில் வியக்கத்தக்கவிதமாயுங் கண்டறிகிறன். சுவர்க்க நரக சூட்சுமலோகங்களில் மரித்துப்போனவர்களுடைய ஆவியுடன் பேசுதலும், திருடனைப்பிடித்தலும், புதைக்கப்பட்டதைக்காட்டுதலும், அவனுடைய வேலையாயிருக்கின்றது. இன்னம் ஒவ்வொருவரையும் தனது இஷ்டத்திற்கு வசப்படுத்தலும், ஒவ்வொருபிணியையும் நீக்குதலும், இதினுட்பவேலைகளாயிருக்கின்றன. ஆகையால் அறிவீனர்களுடைய வார்த்தைகளில் செல்லவேண்டாம். இதை பசாசாகிய ஷைத்தானுடைய அறிவென்று சொல்லவேண்டாம். துக்கத்துக்குக்காரணமென்றெண்ணவேண்டாம். எவைசெய்தபோதிலும் செய்பவனாகிய ஆமில் தனது செய்கையாகிய அமலைக்கொண்டே செய்வான். இது மாந்திரியமுமல்ல, ஆகையால் இதோ இதிலுள்ள எந்தவேலையும் மாந்திரவாதிகாட்டமாட்டான். மற்றப்படி ஆரம்பமும், இதின் முடிவும், கடவுளாகிய அல்லாவுடைய உதவியைக்கொண்டாயிருக்கும்.

## ஒளியுடைய பிரிவுகள்.

---

மேலான அவ்வொளி உடன்பாடாகிய (இதுபாத) என்றும் எதிர்மறையாகிய (மன்பி( என்றும் இருவகைப்படும். உலகத்தின் வடபாகம் மனிதர்களுடைய வலதுபுறம், தலைப்புறம், முன்புறம். இவைகளில உடன்பாடாகிய ஒளியும்; உலகத்தின் தென்பாகம் மனிதர்களின் கால்புறம், இடதுபுறம், பின்புறம், இவைகளில எதிர்மறையாகி ஒளியுமிருக்கின்றன. உடன்பாடாகிய ஒளியின் நிறம் சிவப்பு. எதிர்மறையாகிய ஒளியின் நிறம் கறுப்பு நீலவருணம். உடன்பாடாகிய ஒளியின்குணம் குளிர்ச்சி

எதிர்மறையாகிய ஒளியின்குணம் உஷ்ணம். இவைகளினுதவியால் பிணிகளடங்கலும், சொஸ்தமாக்கப்படுகின்றன. உடன்பாடாகிய ஒளியின் ஸ்தலத்தில் எதிர்மறையாகிய ஒளியாவது, எதிர்மறையாகிய ஒளியின் ஸ்தலத்தில் உடன்பாடாகிய ஒளியையாவது; புகுதவைக்கப்பட்டதானால் பிணியாகிறது நீங்கும். பிணிகுளிர்ச்சியாலுண்டாயிருந்ததானால் அதை உடன்பாடாகிய ஒளியின் அதிகத்தாலுண்டாயிருக்கிறதாக அறிந்து, அப்பொழுது எதிர்மறையாகிய ஒளியைப் புகுதவைக்கவும். உஷ்ணப்பிணி உண்டாகில் அதை எதிர்மறையாகிய ஒளியினதிகத்தாலுண்டாயிருக்கிறதாக அறிந்து, உடன்பாடாகிய ஒளியைப் புகுதவைக்கவும். அதன் வழியாவது:- (தவஜ்ஜா) கூர்மையான சிந்தனையாலாவது, பார்வையாலாவது, கைகளின் சைகையாகிய பாசுகளாலாவது, எது நேர்பட்டபோதிலுஞ்சரி அவசியமான ஒளியை புகுத்துகிறதாக நாடிக்கொள்ளவும். (நோட்) தங்கம், செம்பு, வைரம், முத்து, காந்தக்கல், மின்னற் கல், இவைகளில் காந்தசக்தி அளவைக்காண அதிகமாக இருக்கின்றது.

## செயலாகிய அமல்களின் பதவிகள்.

இதனால் முதல் முதல் (ஆமில்) செய்கிறவன், (மகுமூல்) செய்யப்படுகிறவனுடைய அறிவைக் கீழ்ப்படுத்தி (அமல்) வேலைகளுடைய பதவிகளைக்காட்டுகிறான். ஏனென்றால் செய்யப்படுகிறவனாகிய தமது மகுமூல், எந்த (தராஜா) பதவியாயிருக்கிறான் என்பதை செய்கிறவனாகிய ஆமில், அறிகிறதற்காகவேயாம். செய்கிறவனின் குணபாடு சற்று செய்யப்படுகிறவன்பேரிலுண்டாயிருக்கிறதா அல்லவா? எந்தவேளையில் எவ்வித வினாக்கள் வினவவேண்டுமென்பதற்காகவேயாம்.

1-வது பதவி. விழித்திருத்தல்.
2-வது பதவி. தூக்கம்.
3-வது பதவி. ஆழ்ந்த தூக்கம்.
4-வது பதவி. தூக்கத்தில் விழித்திருத்தல்.



5-வது பதவி. அந்தரங்க திருஷ்டி, அல்லது உட்பார்வை.
6-வது பதவி. தூரதிருஷ்டி, அல்லது வெளிப்பார்வை
7-வது பதவி. முறுக்கபா, அல்லது சமாதி, ஆகவேழு பதவிகளாகும்.

1-வது பதவி. விழித்திருத்தல்:— இந்த நிலைமையில், செய்யப்படுகிறவனுடைய உணர்வும், ஐயறிவும், தரிபட்டிருக்கும். மற்றப்படி அவன் கண்கள் கனமாயிருக்கும், தவிர வெளிப்படையாய் வேறு எவ்வித குணமும் தெரியவராது. அவன் கண்கள் மிருதமாய் மூடப்பட்டிருக்குதலை விரும்புவான், இன்னும் தலைகனத்திருக்கும். எங்கிலும் செய்யப்படுகிறவன் தானே தான் கண்களை விழித்துக்கொள்ளக்கூடுமாவான். இதைக்காண அதிகமாகச் செய்யப்படுகிறவன்பேரிலுண்டாகாது.

2-வது பதவி. தூக்கம், அலலது அரை நித்திரை:— இந்நிலைமையில் செய்யப்படுகிறவனுடைய கண்கள், மூடப்பட்டிருக்கும். செய்கிறவனுத்தரவன்றியே விழிக்கச்சக்திபெறான். செய்கிறவன் கூப்பிடுகிறத்தினால் விழித்துக்கொள்ளவுங்கூடுமாவான்.

3-வது பதவி. ஆழ்ந்த தூக்கம்:— இந்நிலைமையில் செய்யப்படுகிறவன் நல்லமாதிரியாய்த் தூங்குவான். தனது சரீரமுணர்வு அசைவையிராது, கூப்பிடப்பட்டானென்றாலும், ஜவாபுகொடான். பேசுதலை விரும்பான். அவன் திரேகத்தில் எந்தபாகங்களையும், எந்நிலைமையில் வைக்கப்பட்டாலும்; அந்நிலைமையிலேயே இருக்கும். அவன் திரேகம் உணர்வற்றிருக்கும். (குளோரோபாரம்) என்னும், மருந்தன்றியே அவயவங்களைத் துண்டிக்கும் தொழில் முதலானதை நடத்தலாம். அவனுக்கு அறவே வருத்தத்தின் உணர்விராது. சமீபத்தில் பீரங்கி, முதலானது சுட்டாலும் அறியான்.

4-வது பதவி தூக்கத்தில் விழித்திருத்தல்:— இந்நிலைமையில் செய்யப்படுகிறவன், சமீபத்திலுள்ள வஸ்துக்களை கண்திறக்கா

மலே நன்ருய்ப்பார்க்கக்கூடுமாகின்ருன். அப்போது செய்கிறவனுடைய வார்த்தையைமட்டுங்கேள்பான். எங்கேயாவது அவனைப்போகும்படி உத்திரவு கொடுக்கப்பட்டால், போகப்பிரியப்படமாட்டான். அவனுடைய கண்கள் திறக்கப்பட்டிருந்தால், இப்போது ஆழ்ந்ததூக்கத்திலிருக்கிருனு? அல்லது தூக்கத்தில் விழித்திருக்கிருனு? என்றறிகிறதற்காக அவனுக்குக் கசப்புவஸ்துவைக்கொடுத்து, தித்திப்புடைய உருசியைக்கொண்டு (எக்கீன்) உறுதியுடன் (தசவ்வுர்) சிந்தனைசெய்தாலும், அல்லது தித்திப்பை உமது சிந்தனையினுதவியால் கசப்பாய்க்காட்டினுலும், அதன்படி, அதற்கிசைய அவன் உத்திரஞ்சொன்னுல், அவன் 3-வது பதவி. ஆழ்ந்ததூக்கத்திலிருக்கிருன், என்றறியவும்.

5-வது பதவி அந்தரங்கதிருஷ்டி; அல்லது உட்பார்வை:— இந்நிலைமையில் செய்யப்படுகிறவன் செய்கிறவனுடைய உத்திரவுப்பிரகாரம் தன்னுடையவும், மற்றவர்களுடையவும், சொஸ்தமாயிருக்கல்:- அல்லது பிணியாயிருக்கல், இவற்றின்நிலைமையை அந்தரங்க திருஷ்டியால் பார்க்கக்கூடுமாகிருன். உள்படையாகிய பிணிகளடங்கலையும் சொல்லக்கூடவுமாகிருன். பிணியாளி அல்லது செய்யப்படுகிறவன் தனது பிணிகளை, நன்ருக்கிக்கொள்ளக்கூடுமாகிருன். அதாவது, தானறிந்து அதற்கு இன்னவழியாகச் செய்தால் அதின் சொஸ்தங்கிடைக்குமென்றறிந்து, தன்னை நன்ருக்கிக்கொள்கிருன். சொஸ்தத்துக்காக அவிழ்தத்தை யோசித்துச்சொல்லக்கூடுமாவான். அல்லது மரணம் உண்டாயிருந்தபோதிலும், உடனே அறிவித்துவிடுவான்.

6-வது பதவி. தூரதிருஷ்டி, அல்லது வெளிப்பார்வை:— இந்நிலைமையில் செய்யப்படுகிறவன், சமீபதூரமான ஒவ்வொருவஸ்துக்களையும் பார்க்கிருன். ஒவ்வொருவினவுடைய விடைகளையும் அளிக்கிருன். எங்குபோகச்சொன்னபோதிலும் போகிருன். அப்படிப் போவது எதுவானுல்? சூட்சுமமாகிய ஆத்மாவென்னும் நிராகாரியேயாம். அவனுடையஸ்தூலமோ அங்கேயேயிருக்கும். போகக்கற்பித்தஸ்தலம்வரையில் அது எவ்வளவுதூரமாயிருந்தபோதிலும், எவ்வளவு கூடுமாகாததாயிருந்தாலும்;



செய்கிறவனுத்தரவளித்தவுடனே செய்யப்படுகிறவன் செல்கிருன். எந்தவஸ்துவை நாம் யோசனையால் சிந்தனைசெய்துகாட்டுவோமோ அந்தவஸ்து அவன்முன்னிலையில் வருகின்றது. அவன் திரிகாலமுணர்ந்த ஞானியாவான் எக்காலமும் எப்படிப்பட்டகடல், மலை, முதலிய தூரங்களும் அவனைத்தடைசெய்யாது. எந்த வஸ்துவைசெய்கிறவன் உத்தரவளிக்கிருனே, அதுவே அவன் முன்னிலையில்வரும். கண்மூடி விழிக்குமுன் அண்டசராசரங்களடங்கலையும், சுற்றக்கூடும். இந்நிலைமையில் செய்யப்படுகிறவனை திடீரென ஒளியினுல் நிறைக்கப்படுகிருன். ஆகையால் மெஸ்மெரிஸமென்னும் வித்தையின் புதுச்சட்டமாகிய மாயாவி[illegible]ன மாஜிக் யோகத்தினுல் விசேஷவழிகளையும், செய்கிறவனுடைய சூட்சுமங்களையும்; காட்டுவான். சூட்சும லோகங்களிற்சென்று சம்பாஷிக்கக்கூடுமாவான். செய்கிறவனுடைய உத்திரவுப்பிரகாரம் கிரிகைகள் செய்வான்.

7-வது பதவி. முராக்கபா, அல்லது சமாதி:— இந்நிலைமையினுல் செய்கிறவனும், செய்யப்படுகிறவனும், ஒருவருக்கொருவர் தேள்வையரல்லர். செய்யப்படுகிறவன், செய்கிறவனன்றியே ஒவ்வொருவிஷயத்தையுந் தானேயறியக்கூடுமாவான். செய்கிறவனுல் இருதய நாட்டப்பிரகாரம் வேலைவாங்கக்கூடுமாவான். இந்நிலைமைக்கு யோக அப்பியாச இணக்கம்வேண்டும்:- அல்லது செய்கிறவன் சித்திபெற்றவனுயிருக்கவேண்டும். எந்தமனிதனையும் செய்கிறதன்றியே வசப்படுத்தலாம், இப்பதவியே மேலானது. இப்பதவி செய்கிறவன், செய்யப்படுகிறவனுக்கு கிடைக்கிறது, வெகுவருத்தம். ஏனெனில் அது செய்கிறவன் செய்யப்படுகிறவனுடைய வேறுபாடேயாம். ஏனெனில் பூலோகத்தின் கவலையுள்ளவர்கள் பெருமையுடையவர்கள்:- அல்லது செய்கிறவனைக்கொஞ்சமும் பாராட்டாதவர்கள். இப்படிப்பட்டவர்களின் தன்மையால் மேல்படி பதவியை எத்தாமலிருக்கிருர்கள்.

## செய்ப்படுகிறவனுடைய இலட்சணங்கள்.

தன்மேல் மெஸ்மெரிஸஞ்செய்வதற்குத் தடைமறுதளிக்காமல் ஒப்புக்கொள்ளல், சித்தசுத்தம், நற்குணம், மிருதுவானதேகம், நன்னடக்கை, நல்ல இலட்சணம், சிகப்பு நிறம், மெலியல் உரோமம், வேலைப்போலொத்தக் கண், முதலிய தன்மையுள்ள சிறுவன், அல்லது சிறுமி, (8) வயதிற்குக்கீழ்ப்படாமலும், (18) வயதுக்கு மேல்படாத பாலியன், அல்லது பாலியள், முதலானவர்களும் செய்யப்படுவதற்குத் தகுதியானவர்கள். தன் சிறுவன் அல்லது சிறுமியாயிருந்தாலும், அவ்வாறேயாம். எங்கிலும் இவர்கள் செய்கிறவனைக்காண முரடர்களாகவாவது:- அல்லது செய்கிறவனுக்கு முன்னிலையில் மரியாதைபற்றவர்களாகவாவது இருக்கக்கூடாது. அன்னியர்களாயின் எளிதில் சம்பந்தமுண்டாகாது. விகடப்பிரசங்கி, மற்ற இதர, சிரிப்புமுதலிய கேலிகளுடையவர்களிடையிலிருக்கக்கூடாது. செய்யப்படுகிறவனை நல்ல இலட்சணமுடையவனாகத்தேடியெடுக்க வேண்டும் அவன் இந்தச்செய்கைகளில் விசேஷத் தகுதியுடையவனாவான், இந்த இலட்சணங்களுடையவன் கிடைக்காவிடில், இலட்சணக்குறைவுள்ளவே பாதலிகளையெத்துகிறத்திலுந் தாமதமாகும். செய்கிறவனுக்கும் மிகுந்த நேரஞ்சிலவாகும்.

## சிந்தனையாகிய (தசவ்வுர்) இருதயதத்துவமிவைகளால் ஜடப்பிணிகளை சொஸ்தமாக்கும் வழிகள்.

1-வது புத்திசாலிகளாகிய பிணியற்றஸ்திரீ, புருடர்கள், எவர்களும், இந்தமறைவான கடாட்சத்தைக்கொண்டு அப்பியாசத்தினுதவியால்; ஜடத்தின்பிணிகளை சொஸ்தமாக்கக்கூடுமானவர்களெனினும்,; அப்பியாசிக்குதலும், சித்தத் தத்துவத்தை கெட்டிபாக்குதலும், மனோதத்துவத்தையதிகப்படுத்தலும், ஆசானுகிய (உஸ்தாது) உடைய சட்டங்களுக்குக் கட்டுப்படுதலும், அவசியமாகும்.



2-வது இந்த மறைவான கடாட்சமுண்டாவதற்காக, இந்த வித்தையில் நம்பிக்கையும், உறுதியும், நன்றாயிருக்கவேண்டும். பொதுவான கிருபையாலே அழைக்கவேண்டுவதுடன் திரேகத்துப்பரவும்; திரேகத்தில் பரவும் ஜடத்தின் தத்துவமும், செய்கிறவனிலுண்டாயிருக்கவேண்டும். சுத்தமான இருதயமும், சித்தத் தத்துவகெட்டியுமுள்ளவன் இந்தவித்தையின் கடாட்சத்தைவிட்டும், அதிஷ்டமறுன்.

3-வது செப்படிவித்தைக்காரனுக்கும், மனப்போக்குப்படி நடப்பவனுக்கும், இவ்வித்தையைக்கற்றுக்கொடுத்தல் அறிவின்மையாகும். அவர்கள் கற்றுக்கொள்ளுதலும் அறிவின்மையேயாம். பிணியாளிக்கும், அப்படியேயாகும். இந்தவித்தையின் பேரில் (அல்லாகுத்தஆலா) வாகியக்கடவுளை மறுதலிக்கிறவனுடையமுடிவுகெடுதி என்பதுபோல், உறுதிகொண்டவர்களேவரும் பிரயோஜனமடைவார்கள். மறுதலிக்கிறவர்களுக்குப் பிரயோஜனங்கொடாது.

4-வது பிணியாளி சிந்திக்கப்படும்போது வீண்பேச்சுப் பேசுதல் முதலாவது கூடாது. தனது சுகவின்மையை வெளிப்படுத்துகிறதற்காக:- அதாவது தனது வருத்தத்தைமுன்னிட்டு முணங்கவும், சப்திக்கவுங்கூடாது. மற்றப்படி பிணியாளிசிந்தனை பெற்றுக்கொள்வதற்காக, தயாராயிருக்கவேண்டும். ஏனெனில் சொஸ்தத்தின் மிகுதபாகம், பிணியாளியின் நல்லசுபாவத்தில் தரிபட்டதாயிருக்கும்.

5-வது அனேகப்பிணிகள் சுபாவத்தினுல் உண்டாகின்றன, இன்னும் அனேகம் இருதய எண்ணத்தினுல் மாறுகின்றது. அவ்வாறே மாறிமாறி வருகின்றது. பிணியாளிகளை உணர்வின்மையாக்கி சொஸ்தப்படுத்துதல் சொஸதத்துக்கு அவசியமில்லை மற்றப்படி வசப்படுத்தல் மட்டும் போதுமாகும். சிந்திக்குதலுக்காக இன்னிலமை அவசியமாகும்.

6-வது பிணியாளி திரேகத்தைத் தளர்த்திவிடவேண்டும். தன்னை செய்கிறவனிடத்தில் ஒப்புக்கொடுத்து, சும்மாயிருக்க

வேண்டும். இவ்வண்ணம் செய்கிறவன் பிணியை அப்புறப்படுத்து கிறவனாயும், இருக்கவேண்டும்.

7-வது பெலவீனமுள்ள பிணியாளியின்பேரில் சீக்கிரம் சிக்கிறப்படும் பிணியாளியின்பேரில், முதலிலேயே வசப்படும் நிலைமைக்காணப்பட்டதானால், அதைப் பரீட்சிக்கவேண்டும்.

## பரீட்சையின் வழிகள்.

புயங்களிலிருந்து(Pass)பாஸ், அல்லது கைசிகிட்சைசெய்து விரல்கள் வரையில் கொண்டுவரவும் (10) (15) பாஸுக்குப் பின்பு பிணியாளிக்கு உஷ்ணம், அல்லது குளிர்ச்சி, அல்லது புல்லரிப்பு, அல்லது கைகால் தாங்குகிறதின் விதந்தெரியும்: அப்படியானால் குணத்தை யேற்றுக்கொள்ளும் நிலைமை காணப்படுகிறதாயிருக்கும், ஒரு நிமிஷத்திற்கு (2) (3) பாஸ்தான் செய்யலாம்,

## மனிதன் தேகத்தைக் குறித்து, அவசியமான காந்த ஒளியின் தன்மைகள்.

காந்தத்தைப்போலவே மனிதன் தேகத்திலும், இரண்டு தத்துவங்களிருக்கின்றன. வலது புறமும், முன்புறமும், தலைப்புறமும், (முதுபித்து) உடன்பாடென்னுந் தத்துவமும், இடது புறமும், கால்புறமும், (மன்பி) எதிர்மறையென்னுந் தத்துவமுமிருக்கின்றன. சர்வவல்லமையுள்ள (அல்லா) வென்னுந் தெய்வமில் விதமாய்ப்படைத்திருக்கிறதைப் பரீட்சித்து அறியப்படுகின்றன. படத்தைப் பார்க்கவும்.

ஒரு (மார்க்கஸ்) என்னும், நடுமையத்திலின்று, இரண்டு (முக்கீத்) தென்னுஞ் சுற்றுப்புறங்களுக்குச் செல்லுகின்ற ஒளியை (இதபாத்) (Positive) உடன்பாடென்னுந் தத்துவமென்று சொல்லப்படுகின்றது. சுற்றுப்புறங்களில் நின்று நடுமையத்

-15-



துக்குச் செல்லுகின்ற ஒளியை, (மன்பி) (Negative) எதிர்மறையென்று சொல்லப்படுகிறது. இவைகளைக்கொண்டு என்னப் படுகிறதாவது; உடன்பாடென்னும் ஒளியானது, நடுமையத்தில் நின்றும் வெளிப்பட்டு; சுற்றுப்புறங்களில் வியாபிக்கும்பொழுது, உடன்பாடென்றும்; இதுவே சுற்றுப்புறங்களில் நின்றும் நடுமையத்துக்குச் செல்லும் பொழுது; எதிர்மறையென்றும், அழைக்கப்படுகிறது. விளங்கிக்கொள்வதியாதெனில்: அவ்வொளிசெல்லுதல் ஒரு வட்ட வளயம்போலிருக்கின்றது. வட்டந் துண்டிக்கப்பட்டால், இதுவும் துண்டிக்கப்பட்டுப் போகின்றது: சேர்க்கிறதினால் சேரப்பட்டு தனது குணத்தைக் காட்டுகின்றது. வலது உள்ளங்கை அதின் விரல்களிலிருந்து வெளிப்படுகிற ஒளிக்கு, உடன்பாடென்று பெயர். இதன் குணம் குளிர்ச்சியும், சொஸ்தமுண்டாக்குதலுமாம். அவ்வாறே இடது உள்ளங்கை அதின் விரல்களிலிருந்து வெளிப்படுகிற ஒளிக்கு, எதிர்மறை யென்றுபெயர். இதன் குணம் உஷ்ணமும் உடன்பாடென்னும் ஒளியைத் தன்னிடமிழுக்கிறதுமாம். வலது கையை மனிதன் தேகத்தில் வைக்கிறதினால், ஒளி உட்புகும். இடதுகையை வைப்பதினால், உளளிருந்து ஒளியை வெளியிலிழுக்கும். அதுவுங் கீழ்காணும் விதியை யனுசரித்தேயாம். அதாவது உடன்பாடாகிய ஒளி, உடன்பாடொளியையும், எதிர்மறையாகிய ஒளி, எதிர்மறை யொளியையும், விலக்கும். உடன்பாடானது, எதிர்மறையையும், எதிர்மறையானது உடன்பாட்டையும், இழுக்குமென்பதேயாம்.

எதிர்மறையொளியும், உடன்பாட்டொளியும், சரிசமானமாய் ஒத்திருத்தலே சொஸ்தம். இவைகளில் எதுவும், எங்கேயாவது கூடக்குறை யிருக்கில் பிணியுண்டாகும். ஆகையால் எந்த இடத்திற்கு, எந்த ஒளி அவசியமோ: அந்த இடத்திற்கு அந்த ஒளியை, உட்புகுத்த நேரிட்டாலுஞ் சரி, அப்புறப்படுத்த நேரிட்டாலுஞ்சரி, பின்தள்ள நேரிட்டாலுஞ்சரி, அதுவுபோல் செய்வதில் சொஸ்தமுண்டாகின்றது. உதாரணமாக, உடன்பாட்டொளியின் மிகுதியால் தலைநோய் உண்டென்று வைத்துக்கொள்வோம், அல்லது சிரசின் முன்பக்கில்மட்டு மிருந்த

தெனில், தமது வலதுகையைப் பிணியாளியின் நெற்றியின்மேலில்வைத்து, அந்தக் கையிலுள்ள உடன்பாட்டொளியினால், பிணியாளியின் உடன்பாட்டொளியைப் பின்தள்ளி, அப்பொழுதுபின் தலைப் பிடரிப்புறத்தில், தமது இடதுகையை வைத்து, அதினால் உடன்பாட்டொளியினதிகத்தை வெளியே யிழுத்துக்கொள்ளப்படுவதென்பதேயாம். ஆகவே இதனால் பிணியின்ன ஒளியினதிகத்தாலென்றும், அதற்காக அவ்வொளியைப் பின்தள்ளுகிறவித மின்னதென்றும், பின்பு அதை இழுத்துக் கொள்ளச் செய்கிறவித மின்னதென்றுஞ் சொஸ்தம்பண்ணும் விதிகள், சமயோசிதமாய்ச் செய்யவேண்டியதின்னதென்றும்; நமக்குக் கற்பிக்கப்படுவதை யறியலாம். ஆகவே நாமும் பரீட்சிப்போம். எதிர்மறையொளியின் மிகுதியால், பிணியாளிக்கு ஓர் ஸ்தலம் உணர்வற்றோ குளிர்ந்தோ, கெட்டியாகவோ, இருந்ததென்று வைத்துக்கொள்வோம். அவ்வாறிருந்தால், இடதுகையை அந்தஸ்தலத்தில் வைத்து, அக்கையினொளியினால் அந்தஸ்தலத்தின், எதிர்மறையொளியை, பின்னே தள்ளி மறுபாகம் வலதுகையினால் அந்த ஒளியை யிழுத்துக்கொள்ளப்படுகிறது என்பதேயாம். இப்படிச் செய்வதினால் இரு ஒளிகளுஞ் சரிசமானப்பட்டுச் சொஸ்தமுண்டாகும்.

### உடன்பாட்டொளியின் மிகுதியாலுண்டாகும்
### வியாதிகளினடையாளங்களாவன

பஞ்சேந்திரியங்களின் உணர்வு அதிகப்படல், மிருதுவலி வேதனை, உஷ்ணம், எரிச்சல், சுபாவமின்மை, சாந்தகுணமின்மை, இரத்தவிருத்தி முதலியனவாம்.

### எதிர்மறையொளியின் திகத்தாலுண்டாகும்
### வியாதிகளினடையாளங்களாவன:

பஞ்சேந்திரியங்களின் உணர்வின்மை, மறமறத்தப்போரு



தல், கண்குத்தல், பெலவீன்மை, சோம்பல், இரத்தக்குறைவு முதலியனவாம்.

### மனிதன் தேகத்தில் இந்த வித்தையோடு சம்பந்தமான ஸ்தலங்களை விபரிக்கப்படுகிறதாவது.

தலையோ அதினுள் மூளையோ அவ்வாபிசுக்குரியது அங்கிருந்து அனேகத் தந்திகள், பலவிதமாக ஆயிரக்கணக்கான ஸ்தலங்களுக்குச் சென்றிருக்கின்றன. சகல தத்துவங்களுக்கும், கஜானாவாயிருப்பது தலைமூளையே. சித்தத் தத்துவத்தின் ஸ்தலம் இருபுருவத்துக்கிடையில் தலைமூளைக்குள்ளிருக்கிறது பொதுஜனங்கள் சித்தத்துவத்தின் ஸ்தலமாயிருக்கிற, இருதயத்தைக் குறித்துக் கருதிக் கொள்வது, தாமரைக் காயையே. ஆனால் அதுவோ ஒரு இறச்சித்துண்டு, எங்கிலும் இருதய ஸ்தலத்தில் நின்று ஒரு தந்தி அங்கு சென்றிருக்கின்றது. ஆகையால் இருதயத்தின் பிரதிபிம்பம் அதில் படுகின்றது. இதினாலேயே பொது ஜனங்கள், அதை இருதயஸ்தலமென்று சொல்கிறார்கள். ஆனால் சித்தத்தத்துவத்தின் அசல் ஸ்தலம், முன் சொல்லப்பட்ட ஸ்தலமே. தலைமூளையின் பல பங்குகள், பலயூற்றமான பலதத்துவங்களை உடைய மையமாயிருக்கின்றன. அதாவது மனிதனுடைய ஒவ்வொரு செய்லும், தலை மூளையின் விதர்ப்பமான பல பங்குகளில் சம்மந்தப்பட்டிருக்கின்றன இதற்காகப் படத்தைப்பார்க்கவும்.

மூளையானது பார்வைக்கு விநோதமாயிருக்கிற பல கோச கோசப்புானவைகளால் சேர்ந்ததாயிருக்கும்; அதன் உருண்டை பாகம், மேலும் சப்பட்டை பாகம், கீழுமாயிருக்கும். மூளையின்படத்தில் அவசியமானவைகள் யாவையுங் காட்டப்பட்டிருக்கிறது. மூளையின் ஒவ்வொரு பங்கின் பெயர்களும், நரம்புகளுக்குந் தலைமூளைக்கும், நடுமையமான மூலஸ்தலங்களையுங் காட்டப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நரம்புகளின்பெயர்களும், அவசி

யமானவைகளை யெழுதப்பட்டிருக்கிறது. தலைமூளையின் எந்தப் பங்குகளிலும், செயலோ, தத்துவமோ, விருப்பமோ, அவயவமோ, சம்மந்தப்பட்ட யாவும் விவரிக்கப்பட்டிருக்கிறது. இன்னின்ன பாகங்களில் இன்னின்ன நினைவுகள் உண்டாகும் என்பதையும், விவரிக்கப்பட்டிருக்கிறது. சரீரப்படத்தில் நரம்புகள் வெளிப்படும் நடுமையமான மூலஸ்தலங்களையும், தலைமூளைக்கு குறுக்குமூளை யிவைகளில் சம்மந்தமானவையாவும், காட்டப்பட்டிருக்கிறது.

நரம்புகள் உணர்வு சம்மந்தம், அசைவு சம்மந்தம், என இருவகைப்படும். அவ்விரண்டுமே சேர்ந்து பலபாகங்களுக்குச் சென்று, அவயவங்களுக்கு உணர்வும், அசைவுங் கொடுக்கின்றன. அவைகள் சரிசமானமாகும்பொழுது, சௌக்கியமும், கூடக்குறைய ஆகும்பொழுது பிணியுமுண்டாகின்றன. நரம்புகள் நடுமையமென்னும் மர்க்கலிலிருந்து வெளிப்படுகின்றன. இவை புருவமத்தியில் (12) ஜோடிகளிருக்கின்றன. அதிலிருந்து (12) ஜோடிகளாக ஆரம்பித்து, முதுகின் குறுக்கெலும்பு மூளையில் (31) ஜோடி நரம்புகள் முளைக்கின்றன. அந்தக் குறுக்குமூளை (5) பாகமாக்கப்படுகின்றது.

(1)வது கழுத்து: அதிலிருந்து (8) ஜோடி நரம்புகள் வெளிப்படுகின்றன.

(2)வது. நடுமுதுகு அதிலிருந்து (12) ஜோடி வெளியாகின்றன.

(3)வது. இடுப்பு: அதிலிருந்து (5) ஜோடி வெளிப்படுகின்றன.

(4)வது. ஆசனப்பிரிவான பாகத்தின், பின் துவாரத்துக்குமேலும், இடுப்புக்கு கீழும், (5) ஜோடி வெளிப்படுகின்றன.

(5)வது. பின்துவாரத்தின் பின் (1) ஜோடி வெளிப்படுகின்றன. இந்தக் கணக்குப்படி (31) ஜோடி நரம்புகள் பிரப்ப



மாகின்றன. இவைகளில் ஒவ்வொரு ஜோடிகளிலும்; வலது புறம் ஒரு நரம்பும், இடது புறம் ஒரு நரம்பும், வலதுபுறமுள்ளது இடது புறமாயும், இடதுபுறமுள்ளது வலதுபுறமாயும், மாறி மாறிப்போய், தேகத்தின் பலபாகங்களுக்கு உணர்வும், அசைவுங் கொடுக்கின்றன.

இவைகளைக் குறித்து சமஸ்கிருதத்தில் ஸ்திரப்படுத்திய பங்குகளாவது,

(1)வது. ஆக்ஞை, இது இருதயஸ்தலமாகிய மூக்கினுடைய, அடியாயிருக்கும், இதுவே மூளையுடைய மையமாயுமிருக்கும். இதில் அனேக அவயவங்கள் சம்மந்தப்பட்டிருந்தபோதிலுங் கண், காது, மூக்கு, நாவு, முதலியன விசேஷமாக சம்மந்தப்பட்டிருக்கின்றன.

(2)வது. கண்டம்; இது கழுத்தின் பள்ளத்துக்குச் சரியாக முதுகுப்புறத்திலிருக்கின்றது. இதில் கொளுகப்பட்டவைகளாவன. காற்றுப்பை, தாமரைக்காய், இரைப்பை முதலியன. தங்கள் தங்கள் இரைகளுடனே நெஞ்சுக்கும் வயிற்றுக்குமிடையிலிருக்கிற சுவாசத்துக்குதவியான திரையுடனே இருக்கின்றன.

(3)வது. இருதயம்; இது நெஞ்சமத்தியின் பின்புறம் நேர்பாகத்திலிருக்கின்றது. இந்த பாகத்திலிருந்து செல்லும் நரம்புகளில் கொளுகப்பட்டிருக்கிற அவயவங்களாவன. இரைப்பை, குலைக்காய், ஈரல், மண்ணீரல், நுரையீரல், முதலியன.

(4)வது. நாபி: இது கொப்பூழுக்குப் பின்புறம், நேர்பாகத்திலிருக்கின்றது. இதிலிருந்து செல்லும் நரம்புகளில் கொளுகப்பட்டிருக்கும், அவயவங்களாவன. பிருக்கம், கால், முட்டு, பெண்குறி, நீர்ப்பை, சிறுகுடல் முதலியன.

(5)வது. சுவாதிஷ்டானம்: இது பெண்குறியின், அல்லது ஆண்குறியின்மேலுள்ள சிறு பள்ளத்துக்கு நேராகப் பின்னுள்

ளது- இதில் கொளுத்தப்பட்டது பித்தட்டு.

(6)வது இதில் கொளுத்தப்பட்டது: பெண்குறி.

(Note) இந்த நரம்புகளடங்கலுக்கும், சக்திகுறுக்கெலும்! மூளையிலிருந்தே உண்டாகின்றன. இப்போது தெரியவந்தது என்னவென்றால் (31) ஜோடி நரம்புகள் குறுக்கு மூளையிலிருந்து வெளிப்பட்டு விதர்ப்புமான பல பாகங்களுக்குச் சென்று, அவற்றின் செயலுக்கு முடிவைக் கொடுக்கின்றன. (31 ஜோடி நரம்புகளும், ஒரே கவராக முதுகந்தண்டில்சேருகின்றது) உள்ளங்கைப்புறமாய், விரல்களுக்கு இருநரம்புகள் வருகின்றன. ஒன்றுக்கு (மீடியன்) என்றும், மற்றொன்றுக்கு (அல்நேர்வு) என்றுஞ் சொல்லப்படும். பெருவிரல் நுனியிலிருந்து (3½) அங்குலதூரத்தில் மீடியனும், (1½) அங்குலதூரத்தில் அல்னெர்வுமிருக்கின்றன. இந்த இரண்டையுந் தவிர (3)வது தொடர்ச்சி நரம்பொன்று இருக்கின்றன. அதற்கு (ஹைப் போகிளாஸல்நேர்வு) என்று பெயர். இத்தொடர்ச்சியினுதவியால், தலைமூளை, குறுக்கு மூளை வகையறாக்களிலிருந்து, வெளிப்படுகிற நரம்புகளடங்கலும், ஒன்றோடொன்று சேருகின்றன. இந்நரம்பை, (நூர்) ஒளியினுடைய ஸ்தலம்: அதற்கு ஜோதாக்ஷமா என்று சமஸ்கிருதத்தில் சொல்லப்படும்.

படத்தில், அந்தரங்க அவயவங்களடங்கலும் உதாரணமாக தாமரைக்காய், காற்றுப்பை, ஈரல், இரைப்பை, சிறுகுடல், மண்ணீரல், நீர்ப்பை, முதலியனக் காட்டப்பட்டிருக்கிறது மேற்சொன்னவைகளில் எந்த அவயவங்களிலாவது, இடைஞ்சலுண்டாகுமானால் குறுக்குமூளையிலுண்டாயிருக்கும், அதின் பாகங்களின் மூலமாகிய நடுமையத்தில் கையைவைத்து, அதாவது உடன்பாட்டொளியோ, எதிர்மறையொளியோவென்று அடையாளங்களறிந்து, அதன் பிரகாரம் பிணியாளியின் வலது, இடது புறங்களில் கையினால் முன்னும், பின்னும், வைத்து ஒளியைப் புகுத்த முயற்சிசெய்து, நரம்பின் மூலஸ்தலத்துக்கு அசைவுங் கொடுக்க சொஸ்தமாகும்.



தலைப்பிணிகளை யெங்கு சொஸ்தப்படுத்த வேண்டுமோ அது, கீழ்க்காட்டப்பட்டிருக்கிறது. (பேஷியல் நேர்வு) இது முகத்தின் பெருநரம்பு இதற்குப் பெருங்கிளைகள் மூன்றிருக்கின்றன. இவைகள் தலையடங்கலும், வியாபித்திருக்கின்றன. இது கபாலத்திலிருந்து காதுக்குக்கீழ் ஒரு பள்ளமிருக்கிறதே? அவ்விடத்தில் வெளியாகின்றது. தலையின் பிணிகளுக்கு அந்த இடத்தில் கையை வைக்கவும். அதாவது முன் சொன்னபடி. உடன்பாட்டொளியோ, எதிர்மறையொளியோ, எதுவுபோல் புகுதவைத்து, சொஸ்தமாக்கவும்.

(Opticnerve) ஆப்டிக்நெர்வு, இந்த நரம்பில் பார்வையின் சம்மந்தமிருக்கிறது. இதற்காகக் கண்பட்டைப், பொட்டு இவைகளில் கைவைக்க குணமாகும்.

(நிமுகஸ்டேக்நெர்வு) இதின் சம்மந்தம், இரைப்பையின் பக்கம் அதனமாயிருக்கும். இது விசேஷமானது (கிகஸ்நெர்வு) என்றுஞ் சொல்லப்படும். நெஞ்சுக்கும், வயிற்றுக்கும், சம்மந்தப்பட்ட அவயவங்களை அடங்கலுமாகிய குலைக்காய், நுரையீரல், இவைகளின் நிரைகள், இரைப்பை, சிறுகுடல், பிருக்கம், மண்ணீரல், ஈரல், பித்து, நீர்ப்பை, கர்ப்பப்பை, இவைகளில் குணஞ் செய்வதற்காக, காதின் கீழ் நுனிக்குந் தாழ்வாய்க் கட்டையின் பக்கநுனிக்குஞ் சமீபத்தில் கழுத்தின் பக்கமாய்த் துடித்துக் கொண்டிருக்கிற இடத்தில், ஒளியைச் செலுத்த குணமுண்டாகும்.

(ஸிபாடிக்நெர்வு) இதனால், கால், முளி, பாகம், முதலியவைகளின், வலி, உணர்வின்மை, காயம், முதலியன சொஸ்தமாக்கப்படும். குணப்படுத்தவேண்டிய இதன் ஸ்தலமாவது, பிணியாளியை நிறுத்திப் பின்தட்டின் பக்கம் வரைக்கு, இடையில் சற்று உள்புறமாய்த் தொடையிலிருக்கின்றது. அதில் வேலை செய்ய சொஸ்தமுண்டாகும்.

## பிணியாளியை சொஸ்தப்படுத்த வேண்டிய பல விதிகள்.

1வது. (Pass) பாஸ்ஸுடைய உதவியால், அதாவது கைவிரல்களினால், ஒளியைப்புகுத்தல், அல்லது இழுத்துக் கீழே வெளிப்படுத்துதல், அல்லது வியாபிக்கச்செய்தல்.

2வது. கண்களினால் கூர்மையாக, முன் அப்பியாசப்படி பார்க்குதல்.

3வது. மூச்சை யடக்கி வாயால் ஊதுதல்.

4வது. மருந்து, அல்லது ஆகாரம், அல்லது உடை, அல்லது தண்ணீர், அல்லது பால், வகையறாக்களில் ஒளியைச் செலுத்தி, பிணியாளிக்குப் பரிமாறுதல்.

5வது. பிணியாளிகளுக்கு, ஏதேனும் ஒரு மந்திரம் அல்லது கடவுளாகிய (அல்லாஜல்லஷானகு) உடைய பரிசுத்த நாமங்களைக் காட்டி சிந்திக்கச் செய்தல்.

6வது. (Dorsal) முதுகின் மையத்துடைய உதவியாலும், அதாவது அதின் ஒளியைப் புகுதவைத்துப் பிணியாளியின் தேகத்தில் தரிப்பிக்குதல், அல்லது அதைப் பார்க்க வைத்தல்.

7வது. பிணியாளியின் சிந்தையை, பிணியைவிட்டு விலக்கி வேறுபக்கம் கொழுகச் செய்தல். முதுகின் மைய உதவியைக் கொண்டு, எல்லா விதத்தாலுஞ் சிறந்த விதமாயிருக்கும். ஆகையால், முதுகின் மையத்தைக் காட்டுவதற்கு வழிகாட்டவும். அதாவது வியாதியின் ஸ்தலம், நெஞ்சுக்குழி, இருதயஸ்தலம், முதலிய இடங்களில், ஒளியை சேகரஞ் செய்து, நோட்டமிடச்செய்யவும்.

8வது. பிணியாளி ஆஜரில்லாமலே அவனுக்கு சித்தத்தத்துவத்தின் உதவியால், ஒளியைச் சேகரஞ் செய்தல்.



9வது. கடிதமல்லது வேறுதூது, முதலான உதவியைக் கொண்டு பிணியாளியின் பேரில் குணஞ்செய்தல்.

10வது. மக்கத்துக்குப்போய் ஹஜ்ஜுசெய், அல்லது காசிக்குப்போய் தீர்த்தஞ்செய், ஏழையல்லது மிஸ்கீன்களுக்கு சாப்பாடு கொடு, அல்லது ஏதாவது நேர்ந்துக்கொள். உனக்கு சவுக்கியமாகுமென்று சொல்லுதல். மேற்கண்ட விதிகளால் சொஸ்தமாகும்.

---

## பிணியாளி குணப்படுத்தலுக் குரிய நிலைமைக்கு வந்தபோது அவனை சொஸ்தஞ் செய்யும் விதிகள்.

1வது. செய்கிறவன் தலைமூளையின் ஒளியை, சரிசமானமாக்குதலின் விதமாவது. தமது வலதுகையை உள்ளங்கைபுறமாய், பிணியாளியின் நெற்றியில் வைத்து, அவ்வாறே இடதுகையைப் பின்தலையில் வைத்து மெள்ள மெள்ள அசைத்து வலதுகையிலிருந்து உடன் பாட்டொளியின் சொஸ்தத்தையருளுவதினால், சுகங்கொடுக்கிற உடன்பாட்டொளி வெளிப்பட்டு நெற்றியின் புறம் புகுதுகின்றது. இன்னம் பின் தலையின் பக்கமாய் அசௌக்கியமும், கெடுதியும், சொஸ்தத்தைக் கெடுக்கிறதுமாகிய ஒளியை, வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறதென்றும், பிணியாளிக்கு இப்பொழுது சொஸ்தத்தையும், சுகத்தையும், அருளிக்கொண்டிருக்கிறதென்றும் சிந்தனைசெய்யவும்.

2வது. வலதுகையை வலதுபுறமும், இடதுகையை யிடதுபுறமும், காதுக்குமேல் வைத்து சற்றுநேரந்தங்கிய பின்பு இருகையையும், பின்புறமாய்க் கொண்டுவரவும். இடதுகையால் பின்தலையையும், கழுத்தையும், பிடரியையும், பெலமாய்த் தேய்க்கவும்: பின்பு இருபுறங்களிலேயும், இரண்டு கையையும் இரண்டு நிமிஷம் வைக்கவும். இவ்வளவுஞ் செய்தபிறகு பிணியிலிடத்துக்

கு எந்த நரம்பில் ஒளியைப் புகுத்தவேண்டுமோ, அப்படிச்செய்து கொள்ளவும். இவ்விதஞ்செய்தாலும் பிணியாளிக்கு சொஸ்தமுண்டாகும்.

3வது. (Note) நோட், தலை மூளையின்பேரில் எந்தச்செய்கைகளும் (5) நிமிஷத்துக்குமேல் செய்யக்கூடாது. எப்பொழுதும் இவ்வளவு வருத்தத்திற்கு அவசியமில்லை. பார்வைமட்டும் செய்த பின்பு சிந்தனையால், இவைகளையாவுஞ் செய்யக்கூடும். ஒளியைப் புகுத்தியிருந்தவேளையில் காலின் புறமாய் இழுத்துக்கொள்ளல் வேண்டும். எனினும் எந்தஸ்தலமாவது ஒளிமிகுதி அல்லது குறைவினால் பலவீனமை, உணர்வின்மை, முதலியன இருந்ததானால் ஒளியைச்சேகரமாக்கி சற்றுநேரம் தாமதித்து விடவும்.

---

## ஞாபகம் வைக்க அவசியமான பொது விதிகள்

ஒவ்வொரு சடத்தின் அவயவங்களது பங்குகளின் கொளுகுதல்; அதற்கேற்பட்ட தலை மூளையிலாயிருக்கும். ஆகையால் ஜடத்தின் அவயவங்கள் கொளுகப்பட்டு அந்தந்தலை மூளையின் பக்கத்தில் மட்டும் விரலைவைத்து சிந்திப்பதாலுண்டாகுங் குணம், அந்த அவயவத்தின் ஜடத்துக்குமட்டுஞ் சேருகின்றது. சம்மந்தத்தின் பாகமாகிறது தலைமூளையிலாயிருக்கும்.

## இதைப்பற்றி தலை மூளையின் படத்தைப் பார்த்துக்கொள்ளவேண்டியது

படத்தில் தலை மூளைக்குச்சம்மந்தப்பட்ட இருதயமொதானத்தைப்பார்க்கவும். இதுவோ. ஜடத்தத்துவம் விளைந்து, பொங்கு



ந்தானமாயிருக்கும். இன்னம் சித்தத்தத்துவத்தின் ஸ்தலமும் ஒளியுடைய ஸ்தலமுமிதுவே. எந்த வஸ்து தலைமூளையின் எந்த பாகத்தில் சம்மந்தமாயிருக்கிறதோ அது, படத்தில் காட்டப்பட்டிருக்கிறது: அறிந்துக் கொள்ளவும். தலைமூளையினால் விளங்கிக் கொள்ளவும் போதும் அதே இடத்தில் கையைவைக்கிறதினாலோ, விரல்கள் வைப்பதினாலோ, ஒளியைப் புகுத்துவதாலோ, எண்ணத்தை யொன்று சேர்க்கிறத்தினாலோ அநேக வியாதிகள் சொஸ்தமாக்கப்படுகின்றன. இன்ன பிணிக்கு இன்னஸ்தலத்தில் வேலை செய்தால் குணப்படுமென்று படத்தில் காட்டப் பட்டிருக்கிறது.

சுவாசகாசம் புத்திசுவாதீனமில்லாமை, (Empima) நீண்டகால க்ஷயகாச முதலியவியாதிகள் மருந்துகளினால், சொஸ்தப்படுகிறது வெகு கஷ்டம்: ஆனால் ஆத்மஞானத்தினுதவியால், வெகு சீக்கிரங் குணமாகின்றன.

தலை முன் மூளையில் ஒளி மிகுதமாய், அதிகப்பட்டபொழுது, குலைக்காய், காற்றுப்பை, இவைகளின் செயல்களிலும், ஜீரணக் கருவிகளிலும், (ஜாதிபா) கிரிகித்தல், (முன்கலிமா) கிரிகித்ததைக் கூறுக்குதல் ( தாபிஆ ) வெளிப்படுத்தல், முதலிய இத்தத்துவங்களிலும், வித்தியாசமுண்டாகும். இதற்காக வலது கையை நெற்றியின் பேரிலும், இடது கையைத் தலையின் பின்புறத்திலும், வைத்துச் சிந்திக்கிறதினால் பிணியாளிக்குச் சொஸ்தமுண்டாகும்.

சீதளம், உஷ்ணம், உணர்வின்மை, நரம்புகளின் துடிப்பு பெலவின்மை, ஆண்மையின்மை, முதலான வியாதிகளுண்டான நேரத்தில், தலை பின் மூளையில் காதின் பின்னாகவும், பிடரியின் இருபக்கமாகவுமுள்ள ஸ்தலங்களில் கையல்லது விரல்வைத்துச் சிந்திப்பதால், மேற்கூறிய வியாதிகள் மாத்திரமல்ல: நிரேகமட்டங்களிலுமுள்ள வியாதிகளும் குணமாகின்றது.

பெலவின்மையால் இடுப்பு வலிக்கும்போது, நாபிக்குப் பின்புற மையத்தில், இடது கையையும் நாபி அல்லது உந்தியில், வலதுகையையும் வைத்துச் சிந்திக்கவும்.

(கருக்கமான கருத்து) எந்தச் சக்கரத்தின் மையத்துக்குச் சம்பந்தப்பட்ட பிணியாயிருந்தாலுஞ்சரி, தமது வலது கையைச் சக்கரத்தினெதிர்ப்புறத்தில், அதற்குச் சரியான இடத்திலும், இடது கையைச் சக்கரத்தின் பக்கத்திலும் வைத்துச் சிந்திக்கக் குணமுண்டாகும்.

நெஞ்சு வயிறுடைய கருவிகள் மிருதுவாய்ப் பெலவின்மையால் தமது ஸ்தலங்களை விட்டுப் பிசகிக்கொள்கிறது. ஆதலால் தங்கள் தங்களுக்குச் சம்பந்தப்பட்ட செயல்களைச் சரிவர நிறைவேற்றுகிறதில்லை. இதற்கு அவிழ்தமாவது, நெஞ்சு வயிறு இவைகளில் எங்கு அவசியமோ; அங்கு முன்புறத்தில் வலது கையையும், பின்புறத்தில் இடது கையையும், வைத்துச் சிந்திக்குதலால் சொஸ்தமாகி, கருவிகள் தத்துவத்தைப் பெற்று தங்கள் தங்கள் ஸ்தலங்களிற் சென்று, செயல்களை நிறைவேற்றுகின்றன.

(Epilepsy) வலிப்பு, அநேகமாயிதற்கு அவிழ்தமில்லை என்கிறார்கள், ஆத்மஞானத்தினுதவியால் சவுக்கியமாகும். இதற்குப் பிணியாளியின் தலைசுற்றும் ஒருவகையான குளிர்ந்த வஸ்து இதற்கு டாக்டர்கள் (Apoplexy) என்று சொல்வார்கள். மேலே வருகிறதாகத் தெரியவரும். இதுவே இனி வருகிற வலிப்பினுடைய அடையாளமாகும். இதற்குப் பிணியாளியினுடைய காலின் ஒருபுறம், தமது கையல்லது விரல்களால் அமுக்கவும்: பின்பு சீக்கிரம் அவ்வாறே மற்றொருபாகமாகிய வலது புறமும் பின்பு சீக்கிரம் இடது புறமும், இடைக்கிடை அமுக்குவதால் உடனே சுற்றுதல் தடைபடும். இந்த சொஸ்தஞ்செய்து கொண்டே பிணியாளிக்குச் செய்யவேண்டிய, சிகிச்சைகளைச் செய்யவேண்டும் இதனாலிந்தப் பிணி சொஸ்தமாகும் பரிட்சித்தது.

(Note) உடனே வியாதி நீங்கக்கூடிய நரம்புகளைத் தொட்டுச் சரி விரல்களை வைப்பதாலும், சிந்தனையாலும், உடனே தாமதமின்றியே குணங்கொடுக்கின்றது.



(உதாரணமாக) 1 வது. கோஹலீ, என்னுமிடத்தில் அதாவது பின் கட்டின் பக்கவரைக்கு இடையில் சற்று உட்புறமாய்த் தொடையிலிருக்கிற (ஸியாடிக்) அல்லது, அரக்குள்ளிசாயென்று பெயர்பெற்ற சந்து நரம்பு, மீடியன், அல்னார்வு, முதலிய நரம்புகளில் கை வைத்து அழுத்திக்கொண்டுச் சுகத்தைப்பற்றிச் சிந்திப்பதால் குணமுண்டாகும்.

2 வது. தலைமுகமிதினுடைய நரம்பின் ஸ்தலம் படத்தில் சொல்லியிருக்கிறது. இந்தஸ்தலத்தில் குளிர்ந்த ஜலத்தை விரலில் நனைத்து, (1) நிமிஷம்வைப்பதினால் பல்வலியின் கடினவருத்தத்தை நீக்கக்கூடும். எனினும் அது வாய்கிறுவில்லாமலிருக்கவேண்டும். இல்லாவிட்டால் அதற்கு ஞானதிருஷ்டியாகிய (தவஜ்ஜா) அதாவது சித்தத்தேர்மையால் செய்யவேண்டும்.

3 வது. எந்த இடத்தில் அமுக்கினால் வலியுண்டாகுமோ: அந்த இடமாகிய கன்பட்டை, பொட்டு, அவிடம் துடிக்கிற நரம்பு முதலியவைகளில் கையல்லது விரல் வைப்பதால், கண்ணின் கடினமானகுத்து, எரிவு, வலி, முதலியவை ஒரு நிமிஷத்தில் குணமுண்டாகும்.

4. கண்ணுடைய வெளி ஓரத்து மூலைக்கும், காதின் துவாரத்துக்கும் நடுவில்; (கோடிட்டக் ஆர்ச்சு) க்குக்கீழுள்ள துடிக்கிற பொட்டு நரம்பில் கைவிரலால் கண்ணீர் தொட்டு வைத்துச்சிந்திப்பதால், செவிட்டுத்தனமும். கீதுவலியும் நீங்கும். அது போலவே, கேள்வி நரம்பாகிய (ஆடிட்டோரிநெர்வு) இதில் வைத்துச்சிந்திப்பதாலுஞ் சொஸ்தமுண்டாகும்.

5வது. முன் சொல்லப்பட்ட நரம்பாகிய (நீமுகஸ்டேக் நெர்வு) இதில் வேலை செய்கிறதால், நெஞ்சு, வயிறுகளின் கருவிகளடங்கலுஞ் சொஸ்தமாகும்.

6வது. எந்தக் கருவியின் தத்துவமழிகப் படக் கருதப்படுகிறதோ; அதே கருவியின் பேரிலேயே, பிணியாளியின் எண்ணத்தை ஒன்று படுத்தச் சொல்ல வேண்டும். விசேஷமாய்க் குணத்தை யேற்றுக் கொள்வதற்குரிய நிலைமை பிணியாளியில் காணப்பட்டப்பொழுது உடனே சொஸ்தமாகின்றது.

7வது. மேற் சொல்லிய சிகிச்சைகளினால், கீழ் விவரிக்கப்படுகிற பிணிகள் சொஸ்தமாகின்றன. அதாவது அஜீரணம், எந்தப்பிணிக்கு வாயால் இரத்தம் வந்து, இரேகத்தில் காந்தல் வருமோ; அது, நடுக்கமுடைய வியாதி, காசம், சுவாசகாசம் கிட்னியுடைய வியாதிகள், மலமிறங்காதிருத்தல், காலரா, நெஞ்சு வயிறுகளின் கருவிகள் ஒவ்வொன்றிலும் உண்டான எரிவு, வயிற்றுவலி, குன்மவலி, கிட்னியுடையவலி, இரைப்பையுடைய வலி, மண்ணீரல் உப்புதல், வாந்தி, இரத்தவாந்தி, இரத்தமுரிச்சல் சம்பந்தப்பட்ட வியாதிகளாகிய (Dropsy) வீக்கமுதலிய வியாதிகள் சொஸ்தமாகின்றன.

---

## வியாதிகளை சொஸ்தப்படுத்தும் விதம்.

முதலாவது சொஸ்தத்தைப்பற்றி நாடுவது, சொஸ்தத்தையருளுவதேயாம். தமதுந்தத்துவம், சுத்தமாயிருக்கவேண்டும். அப்பியாசத்தால் செய்கிறவன் தாம் சொஸ்தப்படுத்தத் தமக்குச் சக்தியிருக்கிறதாக உறுதிகொள்ளல் வேண்டும், பரவாயில்லையென்பதுபோல் கிஞ்சித்துஞ் சந்தேகங்கொள்ளக்கூடாது. சித்தத்துவத்தை, ஆண்டவனுடைய அமிழ்தமென்றறிதல் வேண்டும். பிணியாளிக்கு மரியாதை செய்கிறவனாயிருக்கவேண்டும். ஆகவே தாம், இந்நிலைமைகளில் இம்முறையான உதவிகளால் அநேகமாய்க் குணப்படுத்துவீர்கள். பக்தியற்றவர்களுக்குங் கடவுளை மறுதலிக்கிறவர்களுக்கும், இதிலொன்றுமேபாகாது. பிணியாளி வடபாகமாக முதுகைத்திருப்பியிருக்கவேண்டும். சுவரல்லது தலையணையிவைகளில் சாய்ந்துகொண்டிருக்கவேண்டும். தனதுகாலை நீட்டிக்கொள்ளவேண்டும். நாம் அவனைக்காண சற்றுயரமான தலையணைவைகையறு முதலியயிருப்பிடத்தில் அவனின் இருகாலுக்கிடையில் உட்காரவேண்டும், முழங்கால் மடியிட்டாவது, சம்மணங்கூட்டியாவது உட்கார்ந்து மெதுவாய் அவன் தலையிலிருந்து கால் விரல்களின் வரையில் நீளப்பாஸ் (Longpass)



செய்யவும். பிணியாளியுடைய கைப் பெருவிரலை செய்யப்படுகிறவனுடைய (மாமூலை) ப்பரீட்சித்தமிதல் என்னுமிடத்தில் சொல்லியிருக்கிற விதமாய் பிடிக்கவும். அல்லது பிணியாளியுடைய யிருகைப் பெருவிரலையும் தமது இருகைப் பெருவிரல்களால் பெருவிரலினுட் புறத்து முன்பக்கம் பிணியாளியுடைய பெருவிரலுட்புறமுன் பக்கத்தில் சேர்த்தும், ஆள்காட்டி விரல் அவனுடைய பெருவிரல் நகத்தைப் பூராவாய் மறைத்துமிருக்க வேண்டும். அந்த வகையினால் (மீடியன்கோர்வ்) இதனுதவியால் குணமுண்டாகும். அல்லது தமது பெருவிரலினுட்புறப் பக்கத்தைக் கொண்டு அவனின் சுண்டு விரலும் அதனடுத்த விரலாகியப் பவுத்திர விரலுஞ் சேருகிற அடிவேரினுள்ளங்கைப் புறத்திலும் தமது ஆள்காட்டிவிரல் உட்புறத்தைக் கொண்டு அதற்கு நேராயுள்ள புறங்கை புறத்திலுந் தேய்க்கவும், இந்த வகையினால் (அல்கோர்வு) இதனுதவியைக் கொண்டு குணமுண்டாகும். மேற் சொன்ன ஒவ்வொரு நிலைமைகளிலும் மேற் சொன்னபடியே தேய்த்துக்கொண்டாவது, மெள்ள மெள்ள அழுத்திக் கொண்டாவது இருப்பதால் குணமுண்டாகும். ஆகவே இவ்வாறு பிடித்தபின் பிணியாளியின் இருபுருவ மத்தியில் தமது கண்ணால் இரப்பைகளடிக்காமல் கூர்மையாய் பார்க்க ஆரம்பித்து, பிணியாளியுடைய மூளையில் ஒளியை நிரப்புகிறேனென்று சிந்திக்குதல் வேண்டும். இந்தச் செய்கைகளை (5) (10) நிமிஷம் வரையில் செய்து முடித்தால் பிணியாளியுடைக் கண்களில் ஏதேனுந்தாக்கம் வரக்கூடுமாகும்போது கைகளை விட்டு விட்டுத் தமது உள்ளங்கைகளைப் பிணியாளியின் கண்பட்டைப் பொட்டுகளின் மேலிலும், மற்றும் விரல்கள் தலையின் மேலினுஞ் சற்று நேரம் வைக்கவும், அப்படிவைக்கிறதில், பெருவிரலிரண்டையும், புருவமத்தியிலமுக்காமல் (அ) (5) நிமிஷம் வரையில் வைத்து அவ்வாறே புருவமத்தியில் கூர்ந்து பார்க்கவும். பிணியாளியல்லது, செய்யப்படுபவனைத் தூக்கத்துக்குக்கொண்டுவரச் சிந்திக்கவும். அப்பொழுது கைகளையெடுத்துவிட்டுத் தலையிலிருந்து உந்திவரையில் (பாஸ்) செய்யவும். அப்படிச் செய்வதிலெச்சரிக்கையாய்க் கவனிக்கத் தக்கதாவது பிணியாளியுடையவெத்தப்பாகத்திலுங் கைபடாதி

ருப்பதுவேயாம். இன்னம் பிணியாளியின் தேகத்தில் ஒளியை நிறப்புகிறேனென்று சிந்தனைசெய்யவேண்டும். பின்பு உந்நிலமை யில் வந்தபொழுது, தமது இருகைகளையும் மூடிக்கொண்டு, கையின் செய்கையாலுண்டாகுங் காற்றுக்கூட அவன்பேரில் படாதிருக்குமளவு தூரத்தில் வலது விலாபுறத்தின்நேரே தலைப்புரமாகக்கொண்டுவந்து மறுபாஸ் செய்யவும். அதாவது தலைகீழான (பாஸ்) ஆய்விடாமலிருக்கவும் எச்சரிக்கையாவது (10) (15) நிமிஷம் அல்லது அதைக்காண அதிகம் பிணியாளி தூக்கக்கண்ணுக்கண்களைத்தானே நன்றாய் மூடிக்கொள்ளும்வரையில் பாஸ் செய்யவும். *இந்நிலமைகளில் வித்தியாசமான, உடைகள், அதாவது தளதியான பஞ்சடை, யல்லது மெல்லியபட்டுடை, யல்லது உரோம உடை முதலியன பிணியாளிக்கிருக்கக்கூடாது. இந்நேரத்தில் செய்யப்படுகிறவன் ஏதாவதுஒரு நிலமையில் வருவானேயானால் அப்பொழுது நமக்கும்அவனுக்கும், யாதொருபயம், கலக்கம், திகில், முதலியன இல்லாதிருத்தல் வேண்டும். இன்னும வனையின்னிலமையில் அப்படியே விட்டுவிடவும். விழிப்பிக்கவேண்டாம். இதனால்லவ்வித நஷ்டமும் உண்டாகாது. தாம் நிச்சயப்படுத்திய நேரத்தில் அல்லது தாம் மனதில் நினைத்துக்கொண்டநேரத்தில் தானே விழித்துக்கொண்டு சௌஸ்தப்படுத்தப்பட்ட நிலமையில் வருவான் இந்நிலமையில் ஏதேனுமவனின் ஞாபகத்திலுண்டாக்கினால், அவன் விழித்தபின்னும் அதேஞாபகத்திலிருப்பான் இந்நிலமையிலவன் நமது வினைகளுக்கு, விடையளிப்பான். அவன் நமது உத்திரவினால் பிணியையும், மறக்கக்கூடுமாகின்றான். குறிப்பிட்ட நேரத்துக்குமுன் விழிப்பிக்கவிரும்புவோமானால் கீழ்காணும் விதமாய் விழிப்பிக்கவும். அதாவது முதல் முதல் காலிலிருந்து தலைவரையில் - தலைகீழாய் பாஸ்செய்யவும், (10) (15) பாஸ் போதும். *உணர்வு வரவில்லையானால் இருபெருவிரல்களையும் அவனிரு புருவமத்தியில் வைத்து சற்று அழுக்கியும் தொட்டுத் தடவிக் கொண்டிருக்கவும். கண் பட்டைப் பொட்டுவரையில் கொண்டு வரவும். அல்லது குளிர்ந்த ஜலத்தினால் கண்கள் பேரிலும் நெற்றியின் பேரிலும் பெலமாயடிக்கவும். விழித்துக் கொள்வான்.



(Note*) இந்நேரம் பிணியாளியல்லது. செய்யப்படுகிறவனிடம் வேறு மனிதர்களை விடவாவது கூச்சல் குரல் போடவாவது தாம் பயப்படவாவது, திகைப்படையவாவது வேண்டாம்.

---

## சௌஸ்தத்தின் பொதுவான விதிகள்.

பிணியாளியின் பேரில் குணத்தை யொப்புக் கொள்கிற நிலமையை யுண்டாக்கித் தம்முடன் அவனுடைய ஆத்ம சம்மந்தத்தை யுண்டாக்கவும். பின்பு பாசுடைய உதவியால் கால்களின் புறமாய் ஒளியை யெடுத்துக் கொள்ளவும் அல்லது ஒளியின் குறையினால் அவசியப்படில் அங்கேயே யிருக்கவிடவும். அல்லது பரவவிடவும். ஆகவே தமது ஒளி பிணியை வாங்கிக் கொண்டு வெளிப்படும். ஒளி மிகுந்து சேகரமாயிருந்த தானால் அப்புறப் படுத்தவும். குறைந்திருந்ததே யானால் நிறப்பவும். அவசியமில்லாத ஸ்தலத்தில் சேகரமாயிருந்த தானால் அவசியமான யிடத்தில் கொண்டு போய்ச் சேர்க்கவும் வேண்டும்.

---

## சௌஸ்தப் படுத்த சில அத்தியாவசியமான

## கடாச்ச நேர்வழிகள்.

(Noto) தமது ஒவ்வொரு செய்கைகளையும், தன்னைப்படைத்த ( அல்லாவென்னும் ) கடவுளின் திருநாமத்தாலேயே ஆரம்பிக்குதலும், ஆசிரியரின் உத்தரவை விரோதிக்கா திருத்தலும் வேண்டும்.

முதலாவது வழிபாடு வைதியர்களிடத்தில் எந்தப்பிணிகள் அழிந்த மற்றவைகளாக இருக்கின்றனவோ; அந்தப் பிணிகளை

சொஸ்தம் பண்ணத் தவர்க்கத்திலேயே நாட வேண்டாம்; அதாவது முதல் முதல் அவிழ்த மற்ற வியாதிகள், இன்னுந்தாமதத்தில் சொஸ்தமாகிற வியாதிகள், முந்த அத்தியாயத் தொத்து வியாதிகள் இவைகளின் சொஸ்தத்தை விரும்பவேண்டாம்.

---

## முந்த அத்தியாயத் தொத்து வியாதிகளாவது.

1வது. வாந்தி செய்தல், நீரியில் வெளுப்பாதல். வைசூரி விளைக், சொறி சிரங்கு முதலியன ஆகையால் இப்போது நமக்கு அதிக அப்பியாசமில்லாததால் ஒளியினதிகம் பிணிகளை நீக்குவதற்கில்லாமலிருக்கின்றது. செய்வோமானாலப்பொழுது த்தொத்து வியாதிகள் ஒரு வேளை நமக்கு ஒட்டிக்கொள்ளலாம். ஏனெனில் இப்போது திரப்பமான தத்துவம் நமக்கில்லை. குறைவாயிருக்கின்றது.

2வது வழிபாடு எவ்வித பிணியையுஞ் சொஸ்தப் படுத்தக்கூடுமெனினும்: நமது அப்பியாசமுந் தத்துவமுந் தைரியமும், விடாமுயற்சியும்; ஊக்கமும், ஒளியின் திசுமும், சித்தத் தத்துவமிவைகளிறுமெட்டு அப்பியாச அளவின்படியில் முதல் முதல் சிறு சிறு பிணிகளின் சொஸ்தத்தையுண்டாக்கவும். பின்பு மென்ன அவிழ்தமற்றதும், தொத்துவியாதிகளுடைய சொஸ்தத்தையுஞ் செய்யக்கூடும். பயமுந்திகிலும், அறவேயில்லாத நேரத்தில் சொஸ்தப்படுத்தவும். இன்னம் அவனின் பிணிகட்டிமூண்டாகிவிடுமோ என்ற பயம் அறவே இருசிற்றுமில்லாதிருத்தல் வேண்டும் மற்றப்படி ஒன்றுஞ்செய்யவேண்டாம்.

3வது, வழிபாடு. முதல் முதல் சொஸ்தத்துக்கு ஆரம்பிக்க வேண்டிய பிணிகளாவது. தலைவலி, பல்வலி, வயிற்றுவலி, வெலந்தி அதிகமான காந்தல், (இதன் சொஸ்தம் வியாதியதிகரிக்கு முன் செய்யவேண்டும்) எவ்வித வாய்வுகுத்து, வலிபிடிகல் தலை சுற்ற



ல், ஆரம்பமானகாசம், கண்ணில் பூவிழுதல், கண் வியாதியாகிய மங்கினபார்வை, மாலைக்குருடு, கண்ணில் தூசி விழுந்தாலுண்டாகும் அவஸ்தைகள், எல்லாவித வீக்கம், அவயவமரத்து உணர்ச்சியற்றுப்போதல், தூக்கமின்மை, வலிப்பு, மன்னலிறுப்புதல், சால், மூலை, தாமரைக்காய், நீர்பை, இரைப்பை, இவைகளின் பிணிகள், சுவாசகாசம், மூர்ச்சைப்பிடிப்பு, அஜீரணம், ஸ்திரீகளின் வியாதிகள், வகையறுக்களை யெழுதியிருக்கும் பிரகாரம் முறையே செய்தபின் தொத்துவியாதிகளை சொஸ்தஞ்செய்யவும். அறவேதிஞ்சிற்றும் பயப்படவேண்டாம்.

4வது. வழிபாடு பெலவீனமையான பிணியாளி, சிறுவர் பெண்கள், இவர்களிடத்தில் அதிக அன்புவைத்துச் செய்தல் வேண்டும். ஆண்பிள்ளைகளின் பேரிலும் சித்திக்குதலாகிய (தவ ஜஜாவால்) குணம் விரைவிலுண்டாகும்.

5வது வழிபாடு. கூக்குரல் சப்தங்களில் ஞானதிருஷ்டியாகிய தவஜ்ஜா செய்யவேண்டாம். சிறுவர்களுக்கு தூக்கநிலைமையிலே ஞானதிருஷ்டி செய்யவேண்டும்.

6வது. வழிபாடு. நமது தூக்கம், விசனம், தொந்தரவு களைப்பு, தவிப்பு முதலிய நிலைமைகளிலும், பிணியாளியின் களைப்பு பெலவின்மை முதலிய இந்நிலைமைகளிலும், ஞானதிருஷ்டி செய்யவேண்டாம்.

7வது. வழிபாடு. சொஸ்தப்படுத்த ஆரம்பிக்கும்போது செய்கை வினைதப்படி அதிக நேரம்வரையில் விடாமுயற்சியாய் கவனிக்கவும். சித்திக்கும் ஸ்தலமும், நேரமும், ஆரம்பத்தில் குறிக்கப்பட்டிருக்குதல் அவசியம்.

8வது. வழிபாடு. விசுவாசமற்றவனுக்கு ஞானதிருஷ்டி செய்யவேண்டாம். அவனுக்குக் குணமுண்டாகாது.

9வது. வழிபாடு. சொஸ்தப்படுத்தும்போது பிணியாளியில் ஏதேனும் ஒரு மாற்றமான நிலைமை அதாவது வியர்வை யத

னமாகுதல், அல்லது சிருஷ்டிகம், அல்லது விதளம், அல்லது பிணியதிகப்படுதல், அல்லது வேதனை. ஒரே விதத்தில் அதிகப்படுதலிதுகளிலேதேனும் இருந்தால் பாஸ்பட வேண்டாம். பிணியாளிக்குத் தேருதல் சொல்லவும். வியாதி சீக்கிரஞ் சொஸ்தமாகும்.

10வது. வழிபாடு. நல்ல அவிழ்தமான உடன் பாட்டோரவி போதுமான அளவு கேசரமாயிருத்தல். நமக்கு உறுதியான பொழுதும், அவை அவிழ்தங்களுக்கு இயற்கையான நேர்பாட்டில் சமமாகும்பொழுதும், நிச்சயமான சொஸ்தத்தின் குணம் அருள சுத்தமான ஒளியதனமாயிருக்கிறதாயறியப்பட்டபொழுதும், நாம் ஞானதிருஷ்டி செய்தோமானால், உடனே சொஸ்தமாகுமென்ற எண்ணம் நமக்கு உறுதியானபொழுதும், நமது குணப்படுத்தல் சந்தோஷத்தையுண்டாக்குதலாகுமென்று நமக்கு உறுதியானபொழுதும், மற்றது நம்மள்பேரில் ஏதேனுங் கெடுதியான குணபாடு உண்டாகாதென்ற எண்ணம் நமக்குறுதியான பொழுதும், நாம் யாரையாவது கருணைப்பார்வையாய் ஞானதிருஷ்டி செய்வோமானால், உடனேயாதொரு தாமதமின்றியே சொஸ்தமாகும். எவனுடைய எவ்வித வியாதியும், நமக்குத்தாவாது.

11வது. வழிபாடு. இன்னம் ஞானதிருஷ்டி செய்த பிறகு நமக்குக் களைப்புண்டானதானால், நம்மள் பேரில் பாஸ்செய்து கொள்ள வேண்டிய விதமாவது. முதலாவது நமது இடது கையினால் வலது புயத்திலிருந்து கால் வரையிலும் பின்பு வலது கையினால் இடது புயத்திலிருந்து கால் வரையிலும் பாஸ் செய்து கொள்ளவும். பிறகு இருகையினாலும், நெற்றியிலிருந்து கால் வரையில் 10 15 பாஸ் செய்து முகம், கை, கால்களைக் கழுவி பிறகு நம்மைப்படைத்த வளர்க்கானென்ற (அல்லா) வாலியக் கடவுளின் ஞாபகம் வைத்துக் கையேந்தி அவனிடத்தில் தத்துவத்தை யதுக்கிக்கப் பிரார்த்தித்து கையை முகத்தில் தடவிக் கொள்ளவும், புதியதத்துவமுண்டாகும். பிறகு செய்கை செய்யவும்.



12வது. (Note) சித்தத்தத்துவங் கெட்டியானதானால் நமக்கு ப்பாஸ் முதலியன அவசியமில்லை. அப்போது ஒரு நிமிஷமே பிணியாளியின் பிணியையில்லாமை யாக்கப் போதுமாகின்றன இதன் பின்புநமது ஞானதிருஷ்டியால் எத்தனையோ மயில் தூரமுள்ள பிணியாளியின் பேரிலுங் குணத்தை யுண்டாக்கக் கூடுமாகின்றன.

## பலவஸ்துக்களிலும் ஞானதிருஷ்டியாகிய (நவஜர) வால் குணமுண்டாக்கும் விதம்.

இந்த(Animalmagnetism) ஆனிமெல் மேக்னட்டிஸிமென்னும், ஒளியின் தத்துவக் குணமானது மற்ற வஸ்துவை விட மிகுதமாய்த் தண்ணீரில் சீக்கிரம்பாய்கின்றன. அதிக நேரம் வரையில் சேகரமாயிருக்கின்றன. இதனாலேயே தண்ணீரில் குணமுண்டாக்கும் விதத்தைக் காட்டுகின்றோம்

(Note) எவ்விதமானக் குணத்தைத் தண்ணீரில் உண்டாக்க நாடுகிறோமோ? அதே குணம் அந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கும், உண்டாகும் (உதாரணமாக) பிணியாளிக்குச் சத்திவரவேண்டுமென்று, சிந்தனை செய்து ஒளியைப் புகுத்தினால் அவனுக்குச் சத்திவரும். அவ்வாறே வியர்வையுண்டாக வேண்டுமென்று சிந்தித்தால் வியர்வையுண்டாகும். தடைபடுத்துவதற்காகத் தண்ணீரில் சத்தியல்லது வியர்வைவரக் கூடாதென்று, ஒளியை சிந்தனையினால் புகுத்தவேண்டும் அப்போது தடைபட்டுப்போகும்.

## தண்ணீரில் ஒளியைச்செலுத்தும் வழி.

சுத்தமான தண்ணீரை ஒரு கிளாசிலூற்றித் தமது, இடதுஉள்ளங்கையில் வைக்கவும். அக்கையின் விரல்களால் கிளாசின்

சுற்றுப்புறங்களைப் பிடித்துக்கொள்ளவும். வலதுகையை கிளாஸின் வாயில் வைத்து 23 நிமிஷம் தரிபடுத்தவும். அதாவது தமதுள்ளங்கையின் நடுமையம் கிளாஸின் நடுமையத்திலிருக்கவும். உள்ளங்கையிலிருந்து ஒளி வெளிப்பட்டு தண்ணீரில் புகுகின்றதென்று, அல்லது புகுந வேண்டுமென்று சிந்தனைசெய்யவும். சற்றுநேரத்தில் உள்ளங்கையில் உஷ்ணந்தெரிய வரும், பின்பு கையையெடுத்துவிட்டுப் பார்வையால் ஒளியை நிரப்பவும், (1) (2) நிமிஷம் பார்க்கவும். கருதப்படுகிற குணபாட்டை சிந்தனைசெய்துகொண்டிருக்கவும். இந்தச்செய்கையை யுள்ளங்கையினாலும், பார்வையினாலும், மாற்றி மாற்றி (3) விடுத்தம் செய்யவும். பின்பு கைவிரல்களைத் தண்ணீருக்குச்சமீபத்தில் அரையங்குலம் அளவில் வைக்கவும். பின்பு மூச்சை (1/4) (1/2) நிமிஷம் அடக்கியல்லது தம்செய்து மெதுவாக வாயினால் தண்ணீரிலூதவும். ஆக இவ்வளவுஞ்செய்ய (10) நிமிஷம் செலவுசெய்வதில் குணபாடுண்டாகும். இந்தத்தண்ணீரை பூமியின்பேரில் வைக்காவிடினும், குடிப்பிக்காவிடினும், அதாவது பூமியில்வைக்காமல் பிணியாளிக்குக் குடிப்பிக்காமல் பேணிப்பாக வைத்திருப்போமானால் அதில் (24) மணிநேரம் (பவர்) தரிபட்டிருக்கும். இத்தண்ணீரைக் குடத்தின் எல்லாஜலத்திலுஞ் சேர்த்துக்கொள்ளலாம். அதிலேயும் அக்குணபாடேயுண்டாகும். இத்தண்ணீரை மேற்காட்டப்பிரகாரம், பானமாத்ரஞ்செய்யலாம், தடவலாம், முகத்திலடிக்கலாம், பிணியின் ஸ்தலத்தில் போடலாம் அவ்வாறே இத்தண்ணீரை வெந்தப்பளாஸ்திரியிலுஞ் சேர்க்கிறதினால் காயத்திலுந்தனது நற்குணத்தையுமுண்டாக்கிக் காயத்தை நன்றாக்கக்கூடுமாகின்றது.

## இனி வஸ்துக்களை மூச்சின் செய்கையல்லது மெஸ்மெரிஸஞ் செய்யும் வழி

வலைக்காய், மிட்டாய், ஆகாரம், மிளகு, உப்பு, அல்லது எதில் பவர்செய்யத்தேவையோ: அதை இருகைகளுக்கிடையில் அல்லது இடதுகையிலெடுத்துக் குட்டையில் வைத்துப்பார்வையப்பியாசத்தால் கூர்ந்துபார்க்கவும். சுவாச அப்பியாசத்தால்



மூச்சடக்கியூதவும். இன்னம் சிந்தனையால் சிந்திக்கவும் இந்தசெயலுக்கு (6) (7) நிமிஷம் போதும்.

(Note) இந்த இடத்தில் நாம் தமக்கறிவிக்கிற தென்னவெனில்: நாம் பிணிகளை சொஸ்தப் படுத்துவதன்றி பரிசுத்தமாக இருந்து, செய்யப்படுகிறவனினால் ஒவ்வொருவேலைகளையும் வாங்கக்கூடுமென்பதையும், அவனைக்கொண்டே பிரயோஜனமுண்டாக்கிக் கொள்ளக் கூடுமென்பதையும், அவைகளில் சிலமாதிரிகளை உவமையாகத் தமக்குக் காட்டப்படுகிறது. கஷ்டமான செயல்களையுங் காட்டுவது அவசியமாயிருக்கின்றன.

---

## பிரயோஜனமான செயல்களை விவரிப்பது.

(1)வது. செயல்களினிலமைந்த சேர்படுத்தப்பட்ட ஒவ்வொரு வேலைகளையும், செய்யப்படுகிறவன் செய்யக் கூடுமாகிறான். அல்லது எந்த ஸ்தலத்தையுஞ் செய்கிறவனுடைய உத்தரவுப் பிரகாரம், செய்யப்படுகிறவன் தனது கண்ணால் பார்ப்பான்.

(2)வது. செய்கிறவனிஷ்டப் பிரகாரம்; செய்யப்படுகிறவனின் தேகம் அவயவங்களினால் செய்கிறவன், அவனை வேலை வாங்கக்கூடுமாகிறான்.

(3)வது. செய்யப்படுகிறவனை, எந்தப் பட்டணங்களிலுமனுப்பி எந்தக் குளத்திலாவது, எந்தக் கடலிலாவது, குளிக்கும்படிச் செய்யலாம்.

(4)வது. செய்கிறவனுத்தரவுப்படி செய்யப் படுகிறவன், எந்த வஸ்துவிலும், அல்லது எந்த ஜீவனல்லது விலங்கிலும், நேசமல்லது பகைவைத்தல் முதலிய குணங்களை வெளியாக்கலாம்.

(5)வது. செய்கிறவனுத்தரவுப்படியே சொந்தமானவெந்த மனிதனல்லது வஸ்துவுடைய பெயரையுஞ் செய்யப்படுகிறவனின் வாயினால் வெளிப்படுத்தாதிருக்கச் செய்யலாம்.

(6)வது. செய்யப்படுகிறவனுத்தரவுப்படி எந்த மனிதனிடமும் நேசமல்லது பகைவைக்கச் செய்யலாம்.

(7)வது. செய்கிறவனுத்தரவுப்படி அழகான அல்லது அவலட்சணமான மனிதர்களல்லது வஸ்துக்களை அறிய விரும்பினால் அவைகள் அவனுத்தரவுக்கு மாற்றமாயிருந்தாலுஞ் சரி, அவன் கருதியபடி தெரிவிக்கலாம், அல்லது ஸ்திரியைப் புருஷன் அல்லது புருஷனை ஸ்திரி அறிய விரும்பினாலுஞ் சரி உள்ள உள்ளபடி சித்தனையின் மூலமாக உண்மையை அறிவிக்கலாம்.

(8)வது. செய்கிறவன் செய்யப்படுகிறவனை தமது சப்தத்தையே கேட்க வசப்படுத்துகிறான். மற்றவர்களின் சப்தத்தை கேட்கமாட்டான். செய்கிறவனுடைய விருப்பப்படிக் கூச்சலையாவது, அமைதியையாவது, முறையிடுதலையாவது. அல்லது சுகந்த வாடையை துர்வாடையாகவாவது, துர்வாடையை, சுகந்தவாடையாகவாவது, சித்தனையின் மூலமாகக் காட்டலாம்.

(9)வது. செய்கையுடைய நேரத்தில் செய்கிறவனுத்தரவுப்படி செய்யப்படுகிறவன் தித்திப்பை கசப்பாகவாவது, கசப்பை தித்திப்பாகவாவது, குளிர்ச்சியை உஷ்ணமாகவாவது, உஷ்ணத்தை குளிர்ச்சியாகவாவது, காட்டுதல் அல்லது வியாதியை கன்றுப் பற்றிப்பிடித்துக் கொள்கிற மருந்துகளால் வியாதியை விடவாவது, வியாதிகளை இலகுவாக்குகிற மருந்துகளால் வியாதிகளை கன்றுப் பற்றிப்பிடித்துக் கொள்ளவாவது, செய்தல். (உதாரணமாக) மலத்தைக் கட்டுகிற மருந்துகளைக் கொடுத்து மிருதமாய் மலத்தைப் போக்குதல் அல்லது அதற்கு மாற்றமாகச் செய்தல்.

(10)வது. செய்கிறவனுத்தரவுப்படி பாரமான வஸ்துகளை லேசாக்க, அப்பாரமான வஸ்துக்களை தூக்காமலிருக்கச் செய்தல்.



(11)வது. செய்கிறவனேரிடத்திலும், செய்யப்படுகிறவனேரிடத்திலுமிருந்துகொண்டு செயல்களைச் செய்தல்: அதின்படி. செய்யப்படுகிறவன் நடக்குதல், செய்கிறவன் செய்யப்படுகிறவனை அந்தரத்தில் நிறுத்துதல்.

(12)வது. முன் மரித்துப்போன ஆவிகளுடன் வினவி, செய்யப்படுகிறவன் விடை வாங்குதல்.

(13)வது. செய்கிறவனுத்தரவின்படி ஏற்படுத்தப்பட்ட நேரத்தில் விழித்தல்.

(14)வது. செய்கிறவன் செய்யப்படுகிறவனின், யாதொரு உறுப்பைத் துண்டித்தால், வருத்தமில்லாதிருத்தல்.

(15)வது. நடந்தவைகளிற் சென்ற, அல்லது நடந்துபோன சமாச்சாரங்களை செய்யப்படுகிறவனிடம் விசாரிக்குதல்.

(16)வது. செயல்களினில்லைமைக்குப்பின் ஞாபகிக்கவாவது மறந்துவிடவாவது, உத்தரவு செய்தல்.

(17)வது. செய்கிறவனுடைய நாட்டப்படி செய்யப்படுகிறவனுடைய உடம்பின் எந்தப் பாகத்தையாவது வேலைக்குதவாமல் செய்தல், சமீபத்துக்குப்பின்பு, அந்த பாகத்தை இலகுவாக்கிவிடுதல்.

(18)வது செய்யப்படுகிறவனினுதவியால் மனதை வசப்படுத்தி, திருடனிடத்திலிருந்து திருட்டுப்போன சொத்தைவாபஸ் கொடுக்கச்செய்தல்.

(19)வது. பரிமாற்றஞ் செய்யப்பட்ட அல்லது உபயோகப்படுத்தப்பட்ட உடையினுதவியால், செய்யப்படுகிறவன், அந்த உடையுடைய அன்னியன் நிலைமைகளை யறிந்து, சொல்லுதல்.

(20)வது. செய்யப்படுகிறவன் புதைக்கப்பட்ட ஸ்தலத்துக்குச்சென்று, புதைக்கப்பட்ட பொருளின் நிலைமைகளடங்கலையுங் காட்டக் கூடுமாகுதல்.

(21)வது. செய்கிறவனுஞ் செய்யப்படுகிறவனும், ஒருவன் மற்றொருவனுடைய இருதய நிலைமைகளை யறிந்து கொள்ளக்கூடுமாகிறான். அதாவது இருவரும் ஓரே ஆவிக்குரியவர்களாகிறார்கள்.

22வது. செய்யப்படுகிறவன் மூடப்பட்ட கடிதத்தைப் படிக்கக் கூடுமாகிறான். மறைவாயிருக்கிற இரகசிய வஸ்துக்களை பெட்டி முதலியவைகளிலும் பார்க்கக்கூடுமாகிறான்.

(23)வது. செய்யப்படுகிறவனுக்கு ஒவ்வொரு வஸ்துவினின்றும் வெளிப்படுகிற ஒளியே, அவ்வஸ்துவின் மறைவைக்காட்டிக் கொடுக்கின்றது.

(24)வது. புதிய மனிதனின் நிலைமை முதலியவைகளைக் காட்டக்கூடுமாகிறான்; எனினும் பெயர் சொல்லான்.

(25)வது. ஆன்மலோகங்களிற் சென்று மரித்துப் போனவர்களின் ஆவிகளுடன் சம்பாஷிக்கக்கூடுமாகிறான்.

(26)வது. மதுபான முதலிய துர்வழக்கங்களைக் குறித்து செய்கையுடைய நிலைமையில் செய்யப்படுகிறவனுடன் வாக்குத்தத்தம் வாங்கி விட்டு விடச்செய்விக்கிறான்.

(27)வது. செய்யப்படுகிறவனை அவனுடைய சடத்தின் எந்த அவயவங்களையாவது, இரும்பல்லது சீசா அல்லது கடி முதலியன வென்றெண்ணி வேலைக்குபயோகப் படுத்துவது போல் பாவனை காட்டச் செய்தல்.

(28)வது. (Magnetism) மேக்னட்டிஸ முடைய செயலிலிருக்கிறவர்கள் பயம், திகில் அற்றவர்களாகிறார்கள். இவர்களுக்குப் பேய், பிசாசுப் பிடியாது.

(29)வது. மனிதர்களுடைய தலையின் பலபாகத்தில் பலவித சுபாவங்களிருக்கின்றன. அச்சுபாவங்கள் எந்த தத்துவத்தையாவது, காட்டமல்லது செயல்களை யாவது சம்மந்தப்பட்ட



வைகளாயிருக்கின்றன. ஆகவே செய்கிறவனவைகளை அசைவுக்குக் கொண்டுவரக் கூடுமாகிறான் (உதாரணமாக) காப்பாற்றுதல், புத்தி, உணர்ச்சி, ஞானம், உணர்வின்மை, சேர்க்கை, நீண்டவயது, கணக்கு, ஒழுங்கு, பொருத்தம், எச்சரிக்கை முதலியனவாம்.

(30)வது. செய்கிறவன் செய்யப்படுகிறவனுக்கு ஆன்மாவாகிய (ரூஹானி) வைப்போக இருக்கிற பாதையைக்காட்டி, செய்கிறவனன்றியே செய்யப்படுகிறவன், தன்பேரில் இவ்வித்தையின் செய்கையைச்செய்து கொள்ளச் செய்விக்கிறான், இன்னும் செய்யப்படுகிறவன், ஒவ்வொரு ஸ்தலங்களையும், பார்க்கக் கூடுமாகிறான். சமாதியோகஞ் செய்யக்கூடுமாகிறான் சிரத்தை விஞ்ஞாதிருக்கும்படி இதைக் கெட்ட வேலைகளிற் பிரயோகியாமல், நல்லவேலைகளிலேயே உபயோகப் படுத்தவேண்டும்.

## செயலுடைய நிஷ்டத்தைக் குறித்து கவனிக்கத்தக்கது.

1. செய்கிறவன் செய்கைக்குப்பின்பு வேதனையை முறையிட்டால் அதற்கு சொஸ்தம், இந்த வித்தையினுதவியைக் கொண்டே செய்யவும்.

2. செயலைச்செய்யும் வேளையில் அல்லது கண்ணின் அப்பியாசத்தை யபிவிர்த்திக்குக் கொண்டு வரும்போது, கண்ணை உறுக்கி அல்லது கோபமாய்ப்பார்க்கக் கூடாது.

3. செயலைச்செய்யும் வேளையில் செய்யப்படுகிறவனுடைய கண்ணைப்பார்க்கக் கூடுமான பார்வையே, போதுமாகும். அப்படிக்கில்லையானால் பார்வையில் வித்தியாசமுண்டாவதற்கு ஏதுவுண்டு. ஆதலால் பார்வை பேதகப் படுவதற்குரிய அச்சமுண்டாகின்றது.

4. எது வரையில் செய்யப்படுகிறவன் சரியாய் விடையளிக்கவில்லையோ! அது வரையில் திரும்பத்திரும்ப அதே வினாவையே வினவ வேண்டும். ஏனெனில் அவனுக்குத் தவறுதலின் பழக்கமுண்டாகாதிருக்கவேயாம். இல்லாவிடில் அடிக்கடி தப்பிதஞ்செய்யக் கூடும்.

5. அபிவிர்த்தியின் அளவுப்பிரகாரம், வினாவை வினவ வேண்டும். இல்லாவிடில் தவறானவிடையளித்து செய்கிறவனை அவிசுவாசி யாக்கிவிடுவான் அதனால் அவநம்பிக்கைக்கிடமுண்டாகும்.

6. பிரேதங்களைப் புதைக்கப்பட்ட எந்த ஸ்தலத்துக்கு மனுப்பவேண்டாம். ஏனெனில் அங்கு அவன் பயப்பட்டு விடுவான். மரித்துப்போனவர்களின் ஆன்மாக்களிடத்திலும் அனுப்பவேண்டாம். அங்கும் பயமுண்டாகும். இவ்விடங்களுக்குச் செய்கிறவன் சிறந்த அப்பியாசியாய் விட்ட பொழுதே யனுப்ப வேண்டும்.

7. செய்யப்படுகிறவனுக்குப் பிழையான உத்தரவின் பழக்கம் உண்டாகாதிருக்கும்படி ஆராய்கிறதற்காக சற்று சாவகாசங்கொடுக்க வேண்டும். இடைக்கிடை அவசரித்து வினவக் கூடாது வினாவின் விடைக்காக எதிர் பார்த்திருக்க வேண்டும். நிதானமாகவே அதே வினாவைத் திருப்ப வேண்டும்.

8. மரித்துப் போன ஆன்மாக்கள் சில வேளைகளிலிருந்து பயப்படுத்தி விடுவதினால்; இடுகாடு, சுடுகாடுகளுக்கனுப்பக் கூடாது. பூரண தகுதிக்குப் பின்பு, அனுப்புவதில் விலக்கில்லை.

9. சில வேளைகளில் செய்யப்படுகிறவன் ஆன்மலோகத்துக்குப் போய் வர ஒப்புக்கொள்ளாதவனாக மறுதலிப்பதினால் தமது உத்தரவன்றியே எங்கும் போவதில்லையென்னுமுறுதியை ஸ்திரமாய் யவனிடத்தில் வாங்கிக் கொண்டு, அவனுக்குப் போகுஞ் சக்தியை யளித்துக் கட்டளையிடவும். அன்றி நம்



முடைய உத்தரவின்றி எங்கும் போகக் கூடாதென சமாளிப்பாக, மறுதலிப்பை மாற்றிக் கொண்டு கட்டளையிட வேண்டும்.

10. செய்யப்படுகிறவன் திகில்நிறைந்த எந்த ஸ்தலத்துக்காவது, அனுப்புவோமானால் அவன் பயப்படாதிருக்கும்படி அவனைச் சுற்றிப் பிரகாசத்தினுடைய சக்கரத்தைச் செய்து விடவும்; அதாவது சிந்தனையினால் பிரகாசம், அவனைச் சுற்றியிருக்கிறதாகச் செய்து விடவேண்டும்.

11. பிரகாசத்தின் சக்கரத்தை முதலில் செய்யவில்லையானால், அவனை ஆன்மாக்கள் பிடித்துக் கொள்ளாதபடிக்கு அவனைச் சுற்றிலும் பிரகாசத்தினுடைய சக்கரத்தைப் பின்னாலாவது, உண்டாக்கியனுப்பவேண்டும்.

12 செய்யப்படுகிறவனுக்கும், ஆன்மாக்களுக்குமிடையில் சண்டையுண்டாகுமேயானால் செய்யப்படுகிறவனுக்குப் பிரகாசத்தினுடைய வாளைக்கொடுத்து, ஜெயிக்க தயிரியத்தையும், ஊக்கத்தையுங்கொடுக்கவும். இன்னம் சண்டை செய்யத் திறமையற்றவனானால் தாங்கிவிட உத்தரவளிக்கவும். அல்லது திரும்பிவரக் கட்டளையிடவும்.

13. குளமல்லது கிணற்றில் விழுந்து விடுவானாகில் சிந்தனையுடைய உதவியால், அவனிடத்திற்கு ஓடமல்லது கயிறு அனுப்பி அதைப் பற்றிப் பிடிக்கிறத் தகுதியையுங் கொடுத்து வெளிப்படுத்தவும்.

14. காயமல்லது அடியை முறையிட்டானாகில் அவன் பேரில் சிந்தனையின் பிளாஸ்திரி போடவும்.

15. ஏதேனும் கஷ்டம் முன்னிலை வந்தால் ஆண்டவனிடம் உதவிதேடவும். ஞானதிருஷ்டியை நிலையாய் வைக்கவும். நாட்டப்பிரகாரம் விரல்களால் சைகை செய்து வேலை வாங்கவும்.

16. சில வேளை செய்யப்படுகிறவன் தன்னில் பிணியுண்டாயிருக்கிறதைப் பார்த்துப் பயப்படுவான். அப்பொழுது

அவனிடத்திலேயே அதற்குரியவைகளை விசாரித்து சொஸ்தமாக்கவும். அல்லது சிந்தனையினுதவியால் பிணியைப்புறப்படுத்தவும்.

## செய்யப்படுகிறவனைச் சுற்றிலும் பிரகாசத்தை யுண்டாக்கும் வழி.

ஒரே எண்ணமாயிருதயத்தை யொன்றுபடுத்தி செய்யப்படுகிறவனுடைய தலைபாதமையமாய் யேர்ப்படுத்திக்கொண்டு அதைச்சுற்றிப் பாஸின் உதவியாலும், சிந்தனையினுதவியாலும் ஒளியின் பிரகாசத்தை யுண்டாக்கவும். எந்த ஆன்மா அல்லது வஸ்தாவது அதற்குள் புகுந்து வருத்தத்தை யுண்டாக்கக்கூடாது என்று சிந்தனை செய்யவேண்டும். இவ்வொளி சூரியனொளியைக் காணப்பிரகாசமானது. இன்னம் தடிப்பற்றது இதனால் பிணியாளியாவது, செய்யப்படுகிறவனாவது, சகிக்கமுடியாமல் முறையிடுவார்களானால் அதைப் பாஸ்களினுதவியால், குறைத்துக் கொள்ளவும்.

## மெஸ்மெரிஸஞ் செய்வதற் குரியவிதி.

(Noto) செய்யப்படுகிறவனை நன்றாய்ப் பரீட்சித்து, அவன் பேரில் செயலையாரம்பிக்கவும். ஸ்தலம் சுத்தமாகவும், இடையிலதிகப் பிரகாசமில்லாமலும், மாமூலான காற்றுப் போக்குவரவில்லாமலும், எவ்வித கூச்சலில்லாமலும், இருவரும் சாப்பிட்ட ஆகாரம், ஜீரணமாகியுமிருக்கவும். மற்றவர்கள் ஒருவருமிருக்கக் கூடாது. பிணியாளியினுடை நல்லதாகவும், இருவரும், பரிமளவாடை யணிந்திருக்கவேண்டும். செய்தலுக்குஞ் செய்யப்படுதலுக்கும், இருவரும் பொருத்தமாகவும், இருவருக்

-45-



குஞ் சூரியகலையோடிக் கொண்டிருக்கவேண்டும். அன்றியிருவருங் கைகால் கழுகியல்லது குளித்துச் செயலைச் செய்ய உட்காரவேண்டும். பொதுவாய் பரிசுத்தமான எண்ணத்தைக் கொண்டு செய்ய வேண்டும். ஒருவருக்கும் வஞ்சகமிருக்கக்கூடாது ஒருவருக்கொருவர் நேசமாயிருக்கவேண்டும்.

## தவஜ்ஞராகிய ஞான திருஷ்டி செய்யும் முதல் வழி.

முந்தினவகை செய்யப்படுகிறவன் தனது முதுகுப்புறம் வடபுறமாயும், முகப்புறம் தென்புறமாயும் உட்காரவும். செய்கிறவன் எதிராய் சமுகமான இருப்பிலுட்காரவும். அவனின் வலது கைப்பெருவிரலைத் தமது இடதுகைப் பெருவிரலிலும், அவனிடதுகைப் பெருவிரலைத் தமதுவலதுகைப் பெருவிரலிலும், இருவர் விரலினுட்புறப்பக்கங்கள் ஒன்றுக்கொன்று சேர்ந்துமிருக்கவும். இருவருடைய பெருவிரல் பின்புறம் தங்கள் தங்கள் இடப்பக்கமாயிருக்கவும். தமது இருகை ஆள்காட்டி விரலினுட்புறங்கள் அவனின் பெருவிரல்களின் பின்புறத்தில் ஒத்தி, அடியிலிருக்கவும். தமதுமீதிவிரல்கள் அவனினுள்ளங்கைப்புறமாய் அல்லது அவனின் உள்ளங்கையிலிருக்கவும். இப்பொழுது தாம், சிந்தனையை ஓர்மைப்படுத்திப் பார்வை விதிப்பிரகாரம் பார்த்து, கண்ணினுதவியால் அவனின் மூளையில் ஒளியைச் சேகரமாக்குகிறேனென்றும், பெருவிரலினுதவியால் ஒளி சுற்றுதலாகிக் கொண்டிருக்கிறதெனவும், அதாவது தமது வலது கைப் பெருவிரலிலிருந்து, ஒளி வெளிப்பட்டு அவனுடைய பெருவிரலில், புகுந்து மணிக்கட்டு விலாப்புறங்களின் வழியாய்ச் சென்று, அவனின் வலது விலாப்புறம் மணிக்கட்டுப் பெருவிரல் இவைகளின் வழியாய் செய்கிறவனால் புகுந்து, உடலத்தில் திரும்பி வருகிறதெனவும், அதின் குணம் அவன் பேரில் காந்தத்தாக்கம் ஆகிக்கொண்டிருக்கிறதெனவும், இருவரும் ஒரே எண்ணத்திலிருக்கிறோமெனவும், ஆகிய இவைகளை சிந்தனை செய்

யவும். அவனும் ஒரே நினைவாய் ஒளியைப் பெற்றுக்கொள்ளவுங் காந்தத்தாக்கத்திலிருக்கவும், தயாராயிருப்பதாகவிரும்பவும். அவன் தனக்குக் குணமுண்டான பொழுது, நிமேசத்தைத் தளர்த்திவிடவும். கண்மூடக்கூடுமானால் கண்ணைமூடிக் கொள்ளச் சொல்லவும். விசேஷமாய்த்தானே கண்ணைமூடிக்கொள்ள அவன் விரும்பவேண்டும். சற்றுநேரத்துக்குப்பின், நாம் அவனின் முகத்தில் அதாவது நமது வலதுகைப் பெருவிரலினால் அவனினிடது கண்ணிலிருந்து, ஓரங்குல உயரமாகவும், மற்றும் விரல்கள் புருவத்தின் பேரிலும், அவ்வாறே இடதுகைப் பெருவிரலை அவனின் வலது கண்ணிலிருந்து ஓரங்குல உயரமாகவும், மற்றும் விரல்கள் புருவத்தின் பேரிலும் வைத்து, அவன்பேரில் காந்தத்தாக்கத்தை யுண்டாக்கிக் கொண்டிருக்கிறேனென்றும் ஒளியினாலவனைப் பிரகாசிக்கச் செய்கிறேனென்றும் சிந்தனைசெய்யவும். ஆகவே அவன் சுவாசஞ் சீக்கிரம் சீக்கிரம் வாங்கித் தூங்கிவிட்டானென்றறிபட்ட பொழுது, கைகளை யெடுத்துவிட்டு முகத்தில்(Pass) பாஸ் செய்ய ஆரம்பிக்கவும். 10 15 பாஸுக்குப்பின்பு அவனைப் படுக்கப் போடவும். அதற்குப் பிறகு பாஸ் செய்யவும். சில வேளை நெஞ்சுக்குச் சரியாயுஞ் சில வேளை விலாவுக்குச்சரியாயுஞ் செய்து கொண்டிருக்கவும். எங்ஙனும் எச்சரிக்கையாவது கைகளைக் கீழிருந்து மேல் பாரிசம் மறு பாசுக்காக கொண்டுபோகும்பொழுது, கைவிரல்களைமடக்கி மூடிக்கொண்டு கொஞ்சதூரத்தில் அவன் விலாவுக்குச் சரியாகக் கைகளையிழுத்துக் கொண்டு; அதாவது கையைப்பின் வாங்கிக் கொண்டு காற்றுக்கூட அவன் நிமேசத்தில்படாமல், இன்னம் தலைகீழான (பாஸ்) ஆகிவிடாமல் கைகளைக் கொண்டுவந்து மறுபடியும் மேலிருந்து (பாஸ்) செய்யவும். இந்நிலைமையில் பிணியாளி தூக்கத்தில் விழித்திருத்தல் என்னும் நிலைமையில் நின்றும் சென்று சுத்தமான தூக்கத்தில் மட்டுமே அவன் அல்லது மேல் விவரிக்கப்பட்ட (3)வது. நிலைமையாகிய ஆழ்ந்த தூக்கத்தில் சென்றுவிடுவான். நன்றாய்த் தூங்கிவிட்ட பொழுது மிகவும் மெதுவாய் அவனையழைக்கவும். நன்றாய்த் தூங்குகிறதினால் பேசாதிருந்தானாகில், அவனுடைய விரல்களைத் தமது வாயில்



வைத்து அழைக்கவும். அப்பவும் பேசவில்லையானால் அவனுடைய காதில் தமது உள்ளங்கையை வைத்து ஒளியை செலுத்தி அழைக்கவும். அப்படியும் பேசவில்லையானால் படத்தில் விவரிக்கப்பட்டிருக்கிற பேச்சிலுணர்வுடைய ஸ்தலத்தில் ஒளியைப் புகுத்தவும். இப்படிச் செய்வதில் உடனே விடையளிப்பான். அப்பொழுது அவனை நீ யெங்கிருக்கிறாய் யென்று வினவவும் விடையாக அவன் தானிருக்கும் ஸ்தலத்தைச் சொல்வானாகில் நலமே. மற்றப்படி வேறு ஸ்தலத்தைச் சொல்வானாகில், அவ்விடமிருந்து நாம் இருக்கும் ஸ்தலத்துக்கு வா வென்றழைக்கவும். வந்து தனது ஸ்தலத்தை விவரித்தானேயானால் உனக்குத் தெரிகிற ஒளியானது என்ன நிறமாக இருக்கிறதென்று விசாரிக்கவும். அதற்கவன் பஞ்சபூதக் கிருத்தியங்களில் சம்மந்தப்பட்டப் பிரயோஜன மற்ற நிறங்களை விடையாக அளிப்பானேயானால் (Animal-Magnetism) அனிமேல் மேக்னடிஸமுடைய அசல் நிறமாகிய நீலவருணமான வெண்ணிறத்தை சிந்தனைசெய்து அவ்வொளி உன் மூளையிலிருந்து வெளிப்பட்டு உன் கண்ணின் பக்கமாய் வருகிறதென்று சொல்லியவனை உறுதிக் கொள்ளும்படிச் செய்யவும். இவ்வொளியின் நிலைமையில் அவன் வேலைசெய்யத் தகுதியுடையவனாவான் அவன் இவ்வொளியை விவரித்த பொழுது, இருதயம் பிரகாசத்தின நிலைமைக்கு வந்து ஒவ்வொரு வினைகளுக்கும் விடையளிக்கத் தகுதியுடையவனாவான் (Note) பஞ்சபூதக் கிருத்தியங்களாவன ஆகாயத்தின் ஒளியின் நிலைமையிலவன் கறுப்பு நிறத்தையும், வாயுவின்னொளியின் நிலைமையில் பச்சை நிறத்தையும், தேயுவின் ஒளியின் நிலைமையில் சிகப்பு நிறத்தையும், பிருதிவினொளியின் நிலைமையில் மஞ்சள் நிறத்தையும், அப்புவினொளியின் நிலைமையில் வெள்ளைநிறத்தையும், கண்டு சொல்வான். இந்த ஒளிகளால் அவன் வேலைக்குத் தகுதியாக மாட்டான். நீலநிறமான வெள்ளை ஒளியில் அவன் ஒவ்வொரு வேலையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாவான். இதில் தான் இருதயப்பிரகாச நிலைமைகளுண்டாகின்றது. இப்பிரகாசத்தின் நிலைமைகள் செய்கிறவன் செய்யப்படுகிறவனைப்பியாச அபிவிர்த்திக்குத் தக்கதாயுண்டாகின்றன. இது (6)வது பதவி இதில் கேள்விக

ன் கேள்க்கவும், வெளிவிக்கவுங் கூடும்: இந்நிலைமைக்கு வந்த பொழுது செயலை முன்போல் சரியாக நடத்தாமல் அந்நிலைமையவனை விட்டு நீங்காமலிருப்பதற்கு சற்றுக்குச் சற்றுப்பிரகாசங் கம்மியாகும்போது, பாஸைமட்டுஞ்செய்து வரவும். காந்தம் அளவுக்கு மிஞ்சி அவன் ஆழ்ந்த தூக்கத்திலாக் இருளுண்டாகி விட்டால் அதைத் தலைகீழான பாஸிகளினால் குறைத்துக் கொள்ளவும். காந்தத்தின் குறைவினால் அவனை உரிய நிலைமைக்குப் போகாமல், அவன் இந்திரியங்கள் நமக்கு வசப்படாமல் இருக்கும்போதிருக்கிற பஞ்சபூதங்களுக்குரியங்களான இருளை, சாதாரணப்பாஸிகளினால் காந்தத்தை நிறைத்து நீக்கவும். இந்நிலைமைகளிலவன் பயப்படவாவது, திகிலடைந்து அலறவாவது, வேறு பயங்கரமான அடையாளத்தைக் காட்டவாவது, செய்வானாகில் நாம் அதற்கே பயப்படவேண்டாம். உனது பயத்தையும் திகிலையும் அப்புறப்படுத்துகிறேனென்று அவனுக்கு உறுதி கூறவும்.

---

## வினாக்களின் விதி 1-வது வகை.

நிலத்திரமான வெண்மையின் பிரகாச ஒளியை அவன் விவரிக்கும்பொழுது, முதல் முதல் சிறுவினாக்களை வினவவும். (உதாரணமாக) அவனைச் சூழ்ந்திருக்கும் வஸ்துக்களை விசாரித்தும், பின்பு அவ்விட்டிலிருக்கும் வஸ்துக்களை விசாரிக்கவும். விசாரித்ததின் உண்மைக்காக, அவ்வஸ்துக்களை இடமாற்றி வைத்து வினவி உண்மையை விளங்கவும். மெள்ள மெள்ள அடுத்த அறையிலுள்ளவைகளைக் குறித்தும், பின்பு (2) (3) அறைகளிலுள்ளவைகளைக் குறித்தும், பின்பு தகுதி தகுதியாய்த் தூரமான ஸ்தலங்களிலுள்ளவைகளைக் குறித்தும், பின்பு தூரமான நகர்களிலுள்ளவைகளைக் குறித்தும், பின்பு விகற்பமான காலங்களைக் குறித்தும், அவனை வினவிவரவும். ஆரம்பத்தில் பிழையான உத்தரங் கொடுப்பானேயானாலும் நாமிதில் அவிசுவாசியாகாதிருத்தல் வேண்டும். ஏனெனில் (மேக்னடிஸமு) டைய ஒளி எங்கெங்கு செல்லுகிறதோ அங்கெல்லாம் அவன் பூரணமாயுஞ்



சரியாயும் விடையளிக்க வல்லவனாகிறான். ஆனதால் ஒளி செல்லாத இடங்களுக்கு சிந்தனையின் மூலமாக ஒளியை பரப்பவும். (Note) அன்றி ஒளியின் பிரகாசம மங்கலாய் சுற்றுமிருக்கில் சிந்தனையின் மூலமாய் அதின் பிரகாசத்தை தெளிவாக சுத்தப் படுத்தி விடவும். பின்பு பிரகாசம் உனது மூளையினின்று பரிபூரணமானதாய் உனது கண்களின் பக்கம் வந்து கொண்டிருக்கிறதென்று, அவனுக்கு உறுதி மொழி கூறவும். உத்தரங் கொடுக்காத விஷயத்தில் எதிர்பார்த்திருந்து மறுபடியும் அதே வினாவை வினவவும். துரிதப்படாமல் புத்தியில்படும்படியிடங் கொடுக்கவும். மற்றப்படி வெகு நேரம்வரையில் சம்பாஷிக்காமலிருக்கவேண்டாம். (உதாரணமாக) ஓர் புத்தகம் இந்த அறையிலிருக்கிறது அதை வாசியென்று, நாமவனை வினவினதாக வைத்துக் கொள்வோம் அதற்குப்பிரதியுத்தரம் பிழையாகக் கொடுத்தானாகில், திரும்ப அவ்வினாவையே வினவி அவன் தனது உத்தரத்தைச் சரியாய்ச் சொல்லும்படி எதிர் பார்த்து வினவிக் கொண்டேயிருக்கவும். அவன் தேகத்தையும் பார்க்கும்படிச் சொல்லியேதேனும் வியாதியிருக்கிறதாவென விசாரிக்கவும், அப்படி வியாதியிருந்தால் அதற்குரிய அவிழ்தங்களை, அவனிடத்திலேயே விசாரித்து சொஸ்தஞ் செய்துகொள்ளவும். இந்நிலைமையில் அவன் திரிகால விஷயங்களைக் குறித்து தெரிவிப்பான். பிணிகளை சொஸ்தமாக்குவான். புதைக்கப்பட்டவைகளை, இன்னம் திருட்டுப் போனவைகளைக் காட்டுவான்: மறைவான வஸ்துக்களைக் கொண்டுவந்து கொடுப்பான். ஆன்மலோகத்திற்குச் சென்று ஆன்மாக்களுடன் சந்தித்துப் பேசுவான். ஆரம்பத்தில் கஷ்டமான வினாக்களை வினவாமல் சுலபமான பிரகாரம் அவனை வேலைவாங்கவும். அவனை திடுக்கப்படுத்த வேண்டாம். சுய ஞானமுடைய நிலைமையைக்கொண்டு அவனிடத்தில் நமது உத்தரவின்றியே அவன் எங்கேயாவது செல்லாமல் உத்தரவு பிரகாரமே செல்லவும், யாதொரு காரியத்தைச் செய்யவும் உறுதிமொழி வாங்க வேண்டும். நமதுக் கட்டளைப்படி நடக்கும்படி வாக்கு வாங்கிக் கொண்டு, நீயின்னகாரியத்தை செய்யக்கூடுமாவென வினவவும். ஓமென்றால் செய்து முடிப்பான் இல்லாவிடின், இதோ உனக்கு

அதைச் செய்யுந் தத்துவத்தை அளிக்கப்படுகிறது, நீசெய்து முடிப்பாயெனச் சொல்லி மனதிலும் உன்னி அதிகாரிவாய் நாடவும்; அப்போது செய்து முடிக்கக்கூடியவான். இதில் நமது கட்டளையை மீறி அவன் யாதொன்றுஞ் செய்யக்கூடாதவனாக செம்மையாய் வசப்பட்டிருப்பது அவசியம்.

## 2-வது வகை

அவனின் தலையை வடபுறமாயுங் காலைத்தென்புறமாயும் இருக்கும்படிக்குக்கிடத்தாட்டி (சின்னபாஸ்) மூலமாய்க் கண்களில் (பாஸ்) செய்து, காந்தத்தூக்கத்துக்குக் கொண்டு போகிறேனென்று சிந்தனை செய்யவும். அவன் தூங்கியபொழுது காந்தப் பிரகாசத்தை சிந்தனைசெய்து பிரகாசத்தை யேற்றுக் கொண்டபொழுது முன்போல் வினாக்களை வினவ ஆரம்பித்து வேலைவாங்கவும்.

## 3-வது வகை.

அவனை முன்போல் படுக்கவைத்து நெஞ்சுவரையில் (பாஸ்) செய்யவும். காந்தத் தூக்கத்துக்குக் கொண்டுபோகிறேனென்று முன்போல் சிந்தனை செய்து, தூங்கியபொழுது பிரகாசத்தைக் கொடுக்கவும். பிரகாசத்தை யேற்றுக்கொண்டபொழுது முன்போல் முந்தின சட்டப் பிரகாரங் கேள்விகளைக் கேட்டு வேலை வாங்கவும்.

## 4-வது வகை.

முந்தின விருப்பைப்போல் உட்காரவைத்து செய்கிறவன் தமது வலதுகைப் பெருவிரலையவனினிடது உள்ளங்கையின் மத்தியிலும், மற்றும் விரல்களைப் புறங்கையிலும் அவ்வாறே தமது இடதுகைப் பெருவிரலை யவனின் வலதுஉள்ளங்கையின் மத்தியிலும், மற்றும் விரல்களைப் புறங்கையிலும் வைத்துக்கொண்டு, இருவரும் ஒருவரை யொருவர் எதிராகக் கண்சிமிட்டாமல் பார்க்க வேண்டும். கண் பாரமாகும்பொழுது கண்ணை மூடிக்கொள்ளச் சொல்லவும். அவன் தன்பேரில் செயலின் றுணமுண்டாக வேண்டுமெனவும் விரும்பவும். அவன் சற்றுவேகமாய் சுவாசிக்க



கவே பூருவமத்தியாகிய இருதயஸ்தலத்தைப் பார்க்கவும். வலதுகையை யவனது தலையின்பேரிலும், இடதுகையை முன்வைத்திருந்தது போலும் வைத்துக் கொள்ளவும். எங்கிலும் அப்பொழுதும் பூருவமத்தியிலேயே பார்வையைவைத்துக் கொள்ளவும். சற்றுநேரத்துக்குப் பின்பு அவன்தலையின்பேரில் இருகையையும் வைத்து, அவனின் மூளையில் பிரகாசத்தையதிகப் படுத்திக் காந்தத் தூக்கத்திற்குக் கொண்டுபோகிறதாய் சிந்தனை செய்யவும், சற்று நேரத்துக்குப்பின் அவனின் முகத்தில் சின்னபாஸ் 10 15 செய்து பின்பு (Long Pass) பெரியபாஸினால் தேகம் அடங்கலிலும், ஒளியைவியாபிக்கச் செய்யவும். இப்[illegible] அவன் காந்தத் தூக்கத்திற்கு சென்று விடுவான். முன்போல் சற்றுக் குச் சற்றுப்பாஸ் செய்துக்கொண்டு வினாவி வேலை வாங்கவும்.

116709

## 5-வது வகை.

அவனை வடபுறமுகமாகும் தென்புறமுகமுமாய் நாற்காலியிலுட்காரவைத்து நாம் அவனுக்கெதிராய் சற்றுயரமான வேறு நாற்காலி அல்லது, பீடத்திலுட்கார்ந்து சிந்தையை யொன்றுபடுத்தி அவனின் கண்களை யிமைப்பையடிக்காமல் உற்று பார்வையாய்ப் பார்க்கவும். தமதுகைகளின் விரல்களையவனின் தேகத்தின் புறமாய்வைக்கவும். அதற்காக கைகளை வைத்துக்கொள்ள ஆதரவான விலாப்புறச் சட்டங்களுள்ள நாற்காலியவசியம். பின்புக் காந்தத் தூக்கத்திற்குக் கொண்டுபோவதாய் சிந்தனைசெய்யவும். அவன் கண்கள் தூங்க ஆரம்பிக்கும்பொழுது தூங்கச்செய்யவும். பிறகு முகத்தில் (வட்டப்பாஸ்) அல்லது வளைந்த பாஸ் செய்யவும். அப்படிச் செய்யும்பொழுது அவன் கண்களின் றெப்பைகள் மூடிக்கொண்டு இன்னம் தமது கைகள் சுற்றிக்கொண்டு வரும்பொழுது அவனிடமுண்டான அசைவு நின்றபொழுதே காந்தத் தூக்கத்திற்கு சென்றுவிட்டதாக அறியவும். பின்பு சின்னப்பாஸ் முதலியன செய்து தேகமடங்கலும் ஒளியைபரவவிட்டு முன்போல் வினாக்களை வினவிக்கொள்ளவும்.

## 6-வது வகை.

முன் சொன்னபடியவனை நாற்காலியி லுட்காரவைத்து நாம் அவனின் பின்புறம் நின்றுகொண்டு அவனின் கண்பட்டை (பொட்டின்) பேரிலிருகைகளையும் வைத்து; அதாவது விரல்கள் கண்ணையுமூடி நெற்றியிலு மிருக்கவேண்டும். உச்சியின்பேரில் கூர்மையான பார்வையாய்ப் பார்த்துக் கையாலும், பார்வையாலும், அவனின் மூளையில் ஒளியைச் சேகரஞ்செய்து தூங்கவைக்கிறேனென்று சிந்தனைசெய்யவும். அவன் காந்த உறக்கத்துக்குச் சென்றபொழுது பிரகாசத்தைக்கொடுத்து முன்போற் செய்து கொள்ளவும்.

## 7-வது வகை.

முன்போல் நாற்காலியில்லாமல் கீழே உட்காரவைத்து அவன் கால்களையிருபுறமும் நீட்டிவைத்து, அவனின் இருகால் முட்டுக்குமிடையில் தலைகாணியின்பேரி லுட்கார்ந்துகொண்டு; அவனுடைய இருகைப்பெருவிரலையும் பிடித்து முனபோல் பார்க்கவும். தூங்கியபொழுது சின்னப்பாஸ் செய்யவும். காந்த உறக்கத்துக்குச் சென்றபொழுது பிரகாசத்தைக்கொடுத்து முன்போற்செய்துகொள்ளவும்.

## 8-வது வகை.

முன்போலுட்காரவைத்து ஏதாவது ஓர் பிரகாசமுள்ளவஸ்துவைப்பார்க்கவைத்து நாமவனுக்குப் பின்னிலிருந்து உச்சியில் பார்த்து, சிந்தனைசெய்து காந்த உறக்கம் வந்தவுடன் பிரகாசத்தைக்கொடுத்து முன்போல் செய்யவும்.

இதைத்தான் (ஹேப்னாட்டிஸமென்று) சொல்லப்பட்டது செய்கிறவனில்லாமல் செய்யப்படுகிறவன் தானே ஒருவஸ்துவை நோட்டமிட்டு இந்நிலைமையையுண்டாக்கி கொள்ளலாய். ஆகையால் இதை (ஆட்டோ மெஸ்மெரிஸமென்று) ஞ்சொல்வார்கள். அநேகம்போல் கொற்றவைகள் இதைச் சேர்ந்ததுதான். இன்னமிதை (எலக்ட்ரோ பாலோஜி) அல்லது (எலக்டிரிக்கல்ஸைக் கோலாஜி) என்று சொல்லுகிறதுமுண்டு. ஆனால் பார்க்கிற வஸ்து அதிகக்கறுப்பாகவும், பளபளப்பாகவும், இருக்கவேண்டும்



அல்லது பளிங்குத்துண்டுபோல் அதிக பிரகாசமுள்ளவைகளாக இருக்கவேண்டும். அல்லது மையும் பிரயோகிக்கலாம். இவ்வாறு நாம் ஒருவஸ்துவைக் கூர்மையாக நோட்டமிடும்போது, நமது சித்தவலுவினாலும், ஆகாயத்தினாலும், நம்மைச் சுற்றிலுமிருக்கிற வஸ்துக்களினாலும் மெஸ்மரிஸஞ் செய்யப்படுகிறோம். இயற்கையாக ஒவ்வொருவஸ்துவும் நமதுபேரில் காந்தச் சத்தைச் செலுத்துகின்றது. நமதுசித்தவலுவினால் இரத்த ஓட்டந்தடைபட்டு இந்திரிய நரம்புகளின் உணர்வற்றுப் போனவுடன், மற்றவைகள் நமதுபேரில் தன்பவரைப் பூரணமாகப்போடுகின்றது. தலைமூளையிலும், நரையிரலிலும், மேற்படிசத்து நிறைந்துவிடுகின்றது. தன்னிஷ்டமாகிய மனதின் ஊசாட்டத்தினாலும், இரத்தஓட்டத்தினாலும், இந்திரிய நரம்புகளின் கூர்மையாலும், அது வெளிப்பட்டு விழிப்புண்டாகின்றது. இதில் கண்திறந்திருப்பதால் மேலானபதவிகள், உண்டாக காரணமில்லை. ஆதலால் தானேவிழித்துக்கொள்ளச் சக்தியுண்டாகின்றது. மேலான பதவிகளுக்குக் கண்மூடியிருப்பது அவசியம் இதில்தானே விழித்துக்கொள்ளவும் வலாது.

## 9-வது வகை

முன்போல் உட்காரவைத்து ஒருவரை யொருவர் எதிர்ப்பார்வையாய்ப்பார்க்க ஆரம்பிக்கவும். தேர்ந்த அப்பியாசிகளுக்கு சின்னப்பாஸ்மற்றும் கிட்டைகள் யாதொன்றும் அனுசரிக்க வேண்டியதில்லை. சிந்தையை ஒருமைப்படுத்தலும், கண்ணால் கூர்மையாகப்பார்த்தலுமே போதுமாகும். அவனின் தலைமூளையில் ஒளியைச் சேகரித்து காந்தஉறக்கத்துக்குக் கொண்டுபோகிறேனென்று வழக்கம்போல் சிந்தனைசெய்து காந்த உறக்கம் வந்தவுடன் பிரகாசத்தை கொடுத்து முன்போல் செய்யவும்.

## 10-வது வகை.

முன்போல் எதிரேஉட்கார்ந்து தமதுகையில் அவனின் கால்பெருவிரல்களைப் பிடித்துக்கொண்டு, பார்வைவிதிப்பிரகாரம் நாம் அவன்கண்களைப்பார்க்கவும், தூக்கம்வந்தவுடன் முன்

போல் செய்யவும். எங்ஙனும் முந்தியே அவனுக்கு நாம் கொடுத்த பிரகாசம் நன்றாய் வேலைகள் செய்யப் போதுமானதாய் இருக்கிறதாவென்று அவனை விசாரித்து தெரிந்துகொள்ளவும்.

## 11-வது வகை.

முன்போல் உட்காரவைத்து (கிறிஸ்டலை) அவனுக்கு மத்தியில் தொங்கவிட்டு அவனையதைப் பார்க்கச்சொல்லவும், இஷ்டமிருந்தால் அவனின் பெருவிரலை நாம்பிடித்துக்கொண்டு, அவனைப்பார்த்து காந்த உறக்கத்திற்குக்கொண்டுபோவதாய் சிந்தனை செய்யவும். தூங்கினபொழுது பிரகாசத்தைக்கொடுத்து முன்போல்செய்யவும். வேலைக்கு ஆரம்பிக்கும்பொழுதே எப்பொழுதும் (கிறிஸ்டலை) க்காந்தவொளியினால் நிறப்பிவைத்தே வேலைக்கு உபயோகப்படுத்தவும். அன்றி கோழிமுட்டைபோல் பளிங்கினால் செய்யப்பட்டவஸ்துக்கு (Magiecrystal) மேஜிக் கிறிஸ்டல் என்று சொல்லப்படும். இதையாவது காந்தத்தையாவது அவனுக்கெதிரே, பிடித்துக்கொண்டு முன்போல் உட்காரவைத்து அவன் கண்களைக் கூர்ந்துபார்க்கவும். அவனை காந்தத்தையல்லது கிறிஸ்டலைப் பார்க்கச்சொல்லவும். காந்தஉறக்கம் வந்தவுடன் பிரகாசத்தைக்கொடுத்து வேலைவாங்கிக் கொள்ளவும். இப்படிச்செய்வதினால் காந்தமும் கிறிஸ்டலும் அவன்பேரில் பிரகாசத்தைப்போடுகின்றது.

## 12-வது வகை.

முன்போலவன் உட்கார்ந்து காலை நீட்டிக்கொள்ளவும் நாம் அவனின் விலாப்புறமாய்ச் சமீபித்துட்கார்ந்து அவனைக் கிறிஸ்டலைப்பார்க்கச் சொல்லவும். அவனதுகண்களையும் கண்ணும்பட்டை (பொட்டு) களையும் நாம் பார்க்கவும். வழமைபோல் காந்த உறக்கத்துக்குக் கொண்டுபோவதாய் சிந்தனை செய்து அவ்வாறே தூங்கியபொழுது பிரகாசத்தைக் கொடுத்து முன்போல் செய்யவும் எங்ஙனும் இருவரினிருதய சிந்தனை ஒன்றாயிருத்தலவசியம். தவிர கிறிஸ்டல் போல்தோற்றப்பிரகாசமுள்ள வஸ்துக்களிலும் அதிகக் கறுப்பான அல்லது பளபளப்



பான வஸ்துக்களிலும், காந்தக்கல், பளிங்கு, ஆடித்துண்டுகளிலும் மற்றவஸ்துக்களைக்காண இந்தவொளி அதிகமாய் நிறைந்திருக்கும், அன்றி (எலக்டிரிக்கென்னும்) மின்தாருக்கும் (ஆனிமேல் மேக்னட்டிஸமென்னும்) ஜீவகாந்தத்திற்கும் வித்தியாசமென்னவெனில் மின்சாரமானது உலோகங்களில் மட்டும் எளிதாய்ப்பாயும், மற்றவஸ்துக்களில் எளிதாய் ஊடுருவாது. ஜீவகாந்தமானது சகலத்திலும் எளிதாய்ப்பாய்ந்து ஊடுருவிச்செல்லும் இவ்வித்தியாசத்தி நிமித்தமே பெயர் விதர்ப்பப்பட்டது. ஆக இந்த இரண்டின் சம்பந்தத்தைக் கொண்டே குணமுண்டாகின்றது.

## 13-வது வகை.

இருதய ஒர்மைப்படுதல் தமக்கு ஸ்திரப்பட்டபொழுது எவ்விதம் உட்கார்த்தினபோதிலும், எந்தப் புறமாயிருத்தினபோதிலும்சரியே அவனைக் காந்த உறக்கத்திற்கு கொண்டு போகிறேனென்று சிந்தனை செய்தல்போதுமாகும் அவனுறக்கத்தில் சென்றுவிடுவான்: அப்போது பெருவிரலைப்பிடித்தல் அவசியமில்லை இருதயத்தைக் கெட்டிப்படுத்தி, கண்களினால் கூர்ந்துபார்த்தலே போதுமாகும். தூங்கியபொழுது (பாஸ்) களினால் காந்த ஒளியை நிரேகமட்டுங்களும் பரவவிட்டு முன்போல்செய்யவும்.

## 14-வது வகை.

அவன் முன்னில்லாவிடினும் சரியே வேறுஅறையல்லது மாடியிலிருந்தபோதிலும் ஞானதிருஷ்டி செய்கிறேனென்று அவனுக்கு முன்னமே தெரிவிக்குதல் வேண்டும். இருதயத்தையொன்றுபடுத்தி சிந்தனையினால் ஒளியை அவனுடைய தேகத்தில் சேகரித்து, அவன் தூங்கவேண்டுமென்று சிந்திக்கவே அவன் தூங்கிவிடுவான். நாம் அந்தஸ்தலத்துக்குச் சென்று பாஸ்களினால் ஒளியை நிரேகமட்டங்களும் பரப்பி பிரகாசத்தை யேற்றுக் கொண்டபொழுது முன்போல் செய்யவும். நாம் இருந்த இடத்திலேயே யிருந்து கொண்டு எண்ணத்தினாலும் ஒளியைப் பரவச்செய்யலாம்.

## 15-வது வகை.

ஏதேனும் ஒருகடிதம் அல்லது வஸ்துவை அவன் சுரணையற்றுப்போவதற்காக அதில் காந்தத்தை நிறப்பி அனுப்பவும். அவனதைப் பெற்றுக் கொண்டவுடனே காந்த உறக்கத்துக்குச் சென்றுவிடுவான். அவனிடத்துக்கு நாம் சென்று பாஸ்முதலியவைகளால் ஒளியை திரேகமடங்கலும்பரப்பி பிரகாசத்தை யேற்றுக் கொண்டவுடன் முன்போல் செய்யவும். நாம் போகவில்லையானால் அவன்சுரணையற்று, எழுந்து நிற்பான். அதினால் ஒருபயமுமில்லை. நாமவனிடம் போகாமலும் சிந்தனையால் ஒளியைப்பரவச்செய்யலாம்.

## 16-வது வகை.

ஒரு காகிதத்துண்டில் கால்ரூபாயளவுக்கு வட்டமாய் ஒரு அழகான கறுப்படையாளமிட்டாவது, தண்ணீர் நிறைந்த கிளாஸ் அல்லது சீசாவகைகளுக்குள்ளிலாவது, அவனின் வலதுகைப்பெருவிரலின் நகத்தின்மேலில் ஒரு கறுப்படையாளஞ்செய்தாலது, காகிதத்தின்மேலில் ஒருதுளி யெண்ணெயைவிட்டு அதைப் பரவச்செய்து அதன்மேலில் அவ்வளவு அளவுக்குக் கறுப்புமையால் பொட்டிட்டாவது, அவனைக் கூர்ந்து பார்க்கும்படியாகக் கற்பிக்கவும். இந்நிலைமைகளில் அவனுக்குப் பிரகாசத்தை சிந்தனையினால் கொடுத்து இந்தக் கறுப்பு அடையாளமுதலியவைகளின் உள்ளால் பெரும்வனாந்தரங்கள் காணப்படுவதாய், உறுதிமொழி கூறவும். ஆகவே இவ்வனாந்தரங்களில் எந்தஸ்தலங்களையாவது, வஸ்துக்களையாவது மனிதர்களையாவது விரும்பினால் அவைகள் எங்கிருந்தபோதிலுஞ்சரியே அவனுக்குக் காணப்படும். அவைகளில் நின்றும் அவைகளுக்குச் சம்மந்தப்பட்டவைகளை விசாரித்தால் அவன் அவைகளைக்குறித்து விசாரித்து பிரதி யுத்தரமளிப்பான்.

## 17-வது வகை.

அவனைக்கட்டிலில் படுக்கவைத்து அவ்விடதுபுறம் நாம்



நாற்காலியிலிருந்து, அவனின் கண்களின் பக்கமாய் பார்வையின் விதிப்பிரகாரம் பார்க்கவும். தூங்கியபொழுது (long pass) நீளப்பாஸ் முதலியவைகளால் ஒளியை திரேகமடங்கலும் பரவச்செய்து முன்போல் செய்யவும்.

## 18வது வகை

அவனை சம்மணங்கூட்டியாவது முழங்கால் மடியிட்டாவது உட்காரச்செய்து, அவனது புருவமத்தியை கூர்மையாய்ப்பார்த்து, தாம் இருதயத்தை யொன்றுபடுத்தி ஞானதிருஷ்டியெனுது அவனை உணர்வின்மையாக்கவும். தூங்கியபொழுது பிரகாசத்தைப்பரவச்செய்து முன்போல் செய்யவும்.

## 19-வது வகை.

இரண்டு எண்ணை விளக்கைக்கொளுத்தி அதை 10 அங்குல உயரமுள்ள இரண்டு விளக்குத்தண்டின் மேல்வைத்து, அதை ஒரு பிரகாசமான செம்பு, அல்லது பித்தளைத் தாம்பாளத்தில் வைத்து அவனை யெதிரிலுட்காரவைத்து, இரண்டு விளக்குத்தண்டுக்கும் மத்தியில் அவனைக்கூர்ந்து பார்வையாய் இமைப்பைகளடிக்காமல் பார்க்கும்படிச்செய்து 5 நிமிஷத்திற்குப்பிறகு, ஏதோ ஒரு வனாந்தரங்காணப்படுகிறதே அதை நன்றாய்ப்பாருமென்று பார்க்கச்செய்து, வினவவேண்டியது. அப்போது அவனுக்கு ஒரு வெள்ளை மைதானங்காணப்படும்; ஒருவேளை காணப்படவில்லையென்று சொல்வானாகில் நாம் விளக்குத்தண்டினெதிரில் முன்னிலையாயிருந்துகொண்டு அவனுக்கு இதோ எனக்கு ஒரு வெள்ளைமைதானங் காணப்படுகிறதே நீர் அதை நன்றாய்ப்பாருமென்றுசொல்ல வேண்டியது. உடனே ஒரு வெள்ளைமைதானங் காணப்படும். அப்பொழுதும் காணப்படவில்லையென்று சொல்வானாகில் தாம்சிந்தையை யொன்றுபடுத்தி அதில் மைதானத்தைக்காட்ட முயர்ச்சிசெய்ய வேண்டியது அதாவது மைதானந்தெரிய வேண்டுமென்று சிந்திக்கவேண்டியது. சற்றுநேரத்துக்குப்பின்பு விளக்குத்தண்டுகளுக்கு மத்தியில் ஒரு விஸ்தீரண்மான மைதானங் காணப்படும். அதிலெங்

த மனிதன், அல்லது வஸ்து, அல்லது ஸ்தலம், அல்லது பட்டணமாயிருந்தபோதினுஞ்சரி சிந்தனை செய்வதால் உடனே அவைகள் அவனுக்கு அதில் காணப்படும். அப்பொழுது விசாரிக்க வேண்டியதெதுவோ அவைகளை முன் சட்டப்பிரகாரம் விசாரித்துத் தெரிந்துகொள்ள வேண்டியது.

---

(Note) 1வது. தண்ணீர் நிறைந்த ஒரு கிளாஸ் அல்லது சீசா, அல்லது திலதம்போல் கால்ரூபாயளவுக்கு ஒரு கறுப்புப் புள்ளி, அல்லது பொட்டு முதலியவைகளையவனின் கண் இரப்பைகளடிக்காமல் மிகக் கூர்மையாய்ப் பார்க்கும்படிக்குச் செயலையாரம்பிக்குமுன் அவனுக்குக் கட்டளை செய்யவேண்டியது. விடையளிக்கும்பொழுது பார்வை அந்த வஸ்துக்களை விட்டுத் திரும்பக்கூடாது. அப்படித் திரும்புவானாகில் செயலை முதலிலிருந்து ஆரம்பிக்கவேண்டும்.

2வது. தமது நினைப்பின் நெட்டியும், சித்தத்தை யொன்றுபடுத்தும் அப்பியாசமும், சித்தசத்துவத்தின் அபிவிர்த்தியும் எவ்வளவாகுமோ! அவ்வளவுக்கு வேலையிலுந் திறமையாவீர்கள்.

3வது. தம்முடைய உத்தரவுபிரகாரம் தூங்கிவிழித்தபின் நமக்குச்செய்தி அறிவிக்கிறதற்காக நாம் அவன்பேரில் யாதொருசெயலை யாரம்பிப்பதற்கு முந்தியோ, அல்லது பிந்தியோ அவன்தூங்க விரும்புவானாகில் அப்படியே அவனை தூங்கவிடவும். அப்படித் தூங்கவிட்டதின் பின்பு அவனை (Long Pass) நீளப்பாஸின் உதவியால் வேலைவாங்குவதற்குத் தகுதியாக்கவும். நமது உத்தரவின்றித்தானே தூங்கிவிட்டால் உடனே தூங்குவதற்கு நாமே உத்தரவளித்துவிட வேண்டும்.

4வது. மிருதமல்லது சிலவேளைகளில் செய்யப்படுகிறவன் செயலின் சிறந்தவிதிகளை விவரித்துக்காட்டுவான். இன்னம் நஷ்டமான செயல்களையும் விவரித்துக்காட்டுவான். அவ்வாறே நாமவனுக்குச் செய்யவேண்டியது அவசியமாகும்.



5வது. நாம் எப்பொழுதும் பெருமை செய்யக் கூடாது. நமது தத்துவத்தைக்காண மேலாக வாதாடக்கூடாது. தம்முடையவும் அவனுடையவும் மேலேயும் நிலைமைகளின் நலமோ கெடுதியோ அவன் அறியக்கூடுமாகிறான் (எச்சரிக்கையாவது) முதலில்தானே அவனிருதயப் பிரகாசத்துக்குச் சென்றுவிடுவானென்றும் வேலைசெய்ய் தகுதியுடையவனாவானென்றும் நாம் நம்பிக்கைகொள்ளக்கூடாது. மற்றப்படி இடைவிடாது செயலைச் செய்யவேண்டும். சில செய்யப்படுகிறவர்கள் சீக்கிரமாயும், சிலர் தாமதமாயும் இருதயப் பிரகாசத்தைபெற்றுக் கொள்ளுகிறார்கள். எத்தியபின் வேலை செய்யத்திறமையாகிறார்கள். சிலர் 40 தடவைக்குப்பின் இருதயப் பிரகாசத்தை பெற்றுக் கொள்ளக் கூடுகிறார்கள்.

6வது. செயலுடைய வேலையில் அவனிடம் சமீபித்தே கூர்ந்து பார்க்கவும். சமீபித்தே வாயால் தம்செய்து ஊதவும். விழிப்புக்குப் பின்பு அவன் வேதனையின் முறைப்பாட்டைச் சொல்வானாகில் சொஸ்தப்படுத்தவும்.

---

## செய்யப்படுகிறவன் பேரில் பூரணகுண முண்டாகிற பரீட்சை.

அவன்பேரில் பூரணகுணம் உண்டாயிருக்கில் மயிர்கள் நட்டமாய் நிற்கும். அல்லது தேகம் குளிர்ச்சியாகவாவது, அல்லது உஷ்ணமாகவாவது காணப்படும். அல்லது செய்கிறவனுடைய விரல்களிலிருந்து, உஷ்ணமல்லது குளிர்ச்சி, அல்லது ஒளிவெளிப்படுதல் காணப்படும். தேகத்திலெறும்பு கடிப்பது போலவாவது, ஊசிகுத்துவது போலவாவது காணப்படும். அவனின் தலை இன்னபுறமாய்த் திரும்பிக் கொள்ள வேண்டுமென்று சிந்தனைசெய்தால் அவ்வாறே திரும்பிக்கொள்ளும். செய்கிறவனைத்தவிர அன்னியர்களின் பேச்சுகளைக் கேள்க்கமாட்டான். மற்றவர்கள் அழைத்தாலும் விடையளியான். அவன்

திரேகத்தின் எந்தப்பாகத்தை யெந்தஸ்திதியில் வைத்தபோதிலும் அவ்வாறே இருக்கும். நாம் திரேகத்தை விறைத்துப்போகும்படி உத்தரவளித்தால் அவ்வாறே அவன்திரேகம் கட்டைபோல் விறைத்துப்போகும் தலையொரு வாங்கிலும் காலொரு வாங்கிலும் இருக்கும்படிச்செய்தால் அப்படியே கட்டைபோல் விறைத்தே இருக்கும். கண்திறக்காமல் பார்க்கக் கூடுமாகிறான். சிலர் வெளிப்படையாய் கண்ணைத் திறந்திருப்பார்களெனினும் கண்ணின் இமைப்பைகளடிக்கவாவது, கண்ணின் கருவிழிகள் அசையவாவது செய்யாது இன்னமவனின் கண் இலங்குதல், தாழ்ந்தகுரலாகுதல் முகமழகாகுதல், அன்றிமுன், பின்னிருக்கிற வஸ்துக்களையும், பெட்டி, துணி, திரை, முதலியவைகளினுள்ளிருக்கிற வஸ்துக்களையும் சரிசமானமாய்ப் பார்க்கக்கூடுமாகுதல் முதலியயாவிலும் அவன் காந்தத்தூக்கத்தில் பூரணமாயிருக்கிறானென்றறியவும்.

---

## செய்யப்படுகிறவன்பேரில் அன்னியர்களின் தொடர் அல்லது சம்மந்தத்தினால் சம்பாஷணை உண்டாக்குதலின் வழி.

நாம் ஒரு மனிதனின் பிடவியின்முந்தியை, அவனின் கையில் கொடுத்து இவனுடன் சரியாய் சம்பாஷணை நடத்தவேண்டுமென்று சிந்தனைசெய்வீரானால், அவன் சம்பாஷணையை நடத்துவான். இவ்வாறே நாம் தமது இருகைகளையும் அவனின்கைகளில் செயலின் சட்டப்பிரகாரம் வைத்து, நாம் நமது தத்துவத்தையிவனுக்குக் கொடுத்திருக்கிறோம். இவனை வேறொருசெய்யப்படுகிறவனைக் காந்தத்தூக்கத்துக்குக் கொண்டுவரக்கூடுமென்று சிந்தனைசெய்வீரானால் அவ்வாறே செய்வான். தமது செய்யப்படுகிறவன் காந்தத்தூக்க நிலைமையிலிருக்கும்போது, அவன் கையில் பிணியாளியல்லது சொல்லுவானாகிய மனிதர்களின் பிடவையையாவது, மயிரையாவது நகத்தையாவது, கடிதத்தையா



வது கொடுத்து அவர்களின் நிலைமைகளை விசாரிக்க விரும்பினால் விசாரித்தறியலாம். அவர்களின் காலநிலைமைகளையும் நாம் அவனால் விசாரித்துக்கொள்ளலாம்.

---

## காந்தத்தூக்கத்திலிருந்து செய்யப்படுகிறவனை விழிக்கச்செய்வதின் பொதுவிதிகள்.

உம்மை விழிப்பாக்குகிறேனென்று அறிக்கையிட்டு கால் விரல்களிலிருந்து தலையின்கடைசிவரையில் தலைகீழான பாஸ் செய்யவும். அப்பொழுது புகுத்தியிருந்த காந்த ஒளியைத்திரும்ப வாங்குகிறேனென்று சிந்தனைசெய்யவும். இந்தபாஸ் கால்களிலிருந்து நெஞ்சுக்குச் சரியாயுஞ்செய்யலாம். செய்யப்படுகிறவன் விழிக்கும்வரையில் செய்யும் ஒவ்வொருபாஸுக்குப்பின்னும் தமது கைகளை புதறி விடவேண்டும். இதனையினால் மட்டும் பிணியாளிக்கு விழிக்கக் கட்டளையிடவும். பிணியாளி தூங்க விரும்புவானாகில் உத்தரவளித்துத் தூங்கவைக்கவும். நாம் சற்றுதூரத்திலிருந்து பிணியாளிக்கு வாயினால் உத்தரவுதால் குணஞ்செய்யவிடும், ஆகையால் சற்றுதூரத்திலிருந்து பாகி, குணத்தைச்செலுத்தவைக்கவும். இளைப்பு அல்லது வேதனையை யவன்முறையிட்டால் அவைகளை (தொடப்பாஸினால்) சொஸ்தமாக்கவும். அதாவது பாஸ்செய்து, செய்கிறவன் தமது கைகளை புதறிவிடவும். இதின் பிரயோஜனமாவது: செய்யப்படுகிறவனின் பிணிசெய்கிறவனின்பேரில் அறவேதொத்தாது. செய்யப்படுகிறவன் உணர்வில்வரவில்லையானால், கண்கள், பிடரி, நெற்றி, கண்பட்டைபொட்டுமுதலியவைகளில் பலமாயூதி தலைகீழான பாஸினால் விழிப்பிக்கவும், தூங்கவிரும்பினால் தூங்கவிடவும். தானே உஜாரானவன் இவ்வாறுசெய்தும் உணர்வில்வரவில்லையானால் நாம் சந்தேகம். இந்தபக்ஷத்தில் கொள்ளவேண்டாம். வேறொருசெய்யப்படுகிறவன்பேரில் செயலைச்செய்து அவனின் ஆன்மாவைத்தேடச்செய்து திரும்பிவர அழைக்கவும். ஏனெனில் நிலைமைசெய்யப்படுகிறவனின் ஆன்மாவெகுதூரமான ஆன்

பலோகங்களிற்சென்று திரும்பிவரப்பிரியப்படுகிறதில்லை. ஆனால் செய்கிறவன் அறவேபயப்படவேண்டாம். அதற்காக விதேனும் அவிழ்த்தப்பரிமாற்றமும்வேண்டாம். செய்துக்குப்பின்பு காமுர். செய்யப்படுகிறவனும் குளித்து அல்லது கை, முகம், கால்கழுவி சபத்து அல்லது பால்குடித்துக்கொள்ளவும். சிந்தனைவிளைந்து அபிவிர்த்தியானதால் சிந்தனையினால் கண்டிரான பாஸ்செய்து விழிக்க உறுதிமொழிசொல்லி விழிப்பிக்கவும்; தமது பெருவிரலை அவனின் ஒருகண்ணிலும் அடுத்த இரண்டுவிரல்களை மறுகண்ணிலும் வைத்துக் காந்த ஒளியைத்திருப்பவாங்குகிறேனென்று சிந்தனைசெய்யவும். அவன் விழித்துக்கொள்வான். திருப்பவாங்கும் அந்தக்காந்த ஒளியின் சக்தி ஆன்மசக்தியாயிருந்தபோதிலும், சடசக்தியாயிருந்தபோதிலுஞ் சரியே, திரும்பவாங்கவேண்டும். ஏனெனில் ஆன்மசக்தியானால், காந்தத்துக்கத்திற்குச் செலவுகின்றான். சடசக்தியானால், அவனினவயவங்கள் வெளிவேலைகளை விட்டும் நீங்கியிருக்கும்.

(Note) செய்யப்படுகிறவனுக்கு விழிக்கத்திலும் விழிக்காவிடில் தாம் திகில்கொள்ளவேண்டாம். ஏனெனில் (32) மணிநேரம் வரையில் உணர்வின்மையாயிருப்பான் பின்பு தானே விழித்துக் கொள்வான். பிணிமுதலிய வேதனைகளை முறையிட்டானாகில் உலோகத்தினால் வட்டமான ஒரு ஆயுதம்செய்து அதைவாயில் வைத்து பற்களை நன்றாய் அமுக்கி அதைக்கடித்துக்கொண்டு சிந்தையை பொன்றுபடுத்தி அவனுடைய பிணி அல்லது வருத்தத்தை சிந்தனை செய்து அதில் இழுத்துக்கொள்ளவும், சொஸ்தமாகும். பின்பு அந்த ஆயுதத்தை வெயிலில் அல்லது நெருப்பில் காச்சி சுத்தி செய்து விளக்கி வைத்துக்கொள்ளவும்.

ஜீவவர்க்கங்களைச்செயலினால் அவைகளின் வருத்தங்களை
விட்டும், காப்பாற்றுதல் அல்லது தம்முடன் அவைகளின்
நேசம் அதிகப்படுதல் அல்லது அவைகளைத்தமது
இஷ்டப்பிரகாரம் வேலைவாங்குதல் முதலியவை

எந்த ஜீவனைத்தமக்கு வசப்படுத்த வேண்டுமோ அல்லது



அவைகளின் வருத்தத்தை விட்டும் காப்பாற்ற வேண்டுமோ, அல்லது அவைகளின் தீங்கை விட்டும் நாம் தப்பித்துக்கொள்ள வேண்டுமோ, அவைகளின் கண்களின் புறம் நன்றாய் கூர்ந்தும் கூர்மையான பார்வையாய்ப் பார்க்கவும். முதல் முதலில் கண் வரைப்பட்டதானால் உடனே அது நமது பாரிசம் நோக்கும். அப்பியாசத்தினால் தேர்ச்சியடைந்த பின் நாட்டப்பிரகாரம் வேலை வாங்கலாம். தமது அப்பியாசம் அபிவிர்த்தியாய் பூரணமாகிவிடுமானால் புலி, முதலிய மிருகங்கள் தமக்கு அதிசீக்கிரத்தில் வழிப்படும். மிகுந்த அப்பியாசம் அவசியம். இனி வர்க்கங்களில் இச்செயலைச்செய்து அவைகளுக்குத்தின்னக்கொடுத்தால் அதிகக் குணமுண்டாகிறது.

## மெஸ்மெரிஸ வித்தையின் பலவிதிகள்.

பார்வையின் சக்தியைக்கெட்டிப்படுத்திக்கொள்வதற்காக முகம் பார்க்கிற கண்ணாடியில் கால்ரூபாயளவு ஒருகறுப்புபொட்டிட்டு அதை நித்தியம் கால் மணிநேரம் வரையில் கண் இமைக்காமல் அந்தப் புள்ளியைச் சுற்றிலும், கண்ணாடியில் தெரிகிற நமது ரூபத்தைக்கிஞ்சித்தும் பாராமல் அந்தப்புள்ளியின் மையத்தை நோக்கிப்பார்க்க அப்பியாசிக்கவேண்டும். அப்புள்ளியின் சுற்றிலும் தெரிகிற நமது ரூபத்தைப்பாராமல், அந்தப்புள்ளியையேப்பார்க்க நமக்கு சக்தி உண்டாகிவிட்டால் நமது பார்வைக்கு எந்தப்பிராணிகளும் வசப்படாமல் போகாது. இதனால், சித்தவலுவும் உண்டாகின்றது.

ஒருவனைசீக்கிரம் காந்த உறக்கத்துக்குக் கொண்டுவருகிறதாயிருந்தால், அரைரூபாயளவு வட்டமாக ஒருதாந்தவில்லையும் அந்த அளவுக்கு ஒருதுத்தநாக வில்லையும், அந்த அளவுக்கு ஒரு வெள்ளிவில்லையும் எடுத்துக்கட்டிக்கொண்டு வில்லையை மத்தியில் வைத்து, அந்தப்புறமும் இந்தப்புறமும் வெள்ளிவில்லையும், துத்தநாகவில்லையும். வைத்து நடுமையத்தில் மூன்றுக்கும் துவாரமிட்டு ஒருசெம்பாணிப் போட்டுத்திரைத்து வைத்துக்கொள்ளவும். மயக்கப்படுகிறவன்கையில் கொடுத்து அதைப்பார்த்துக் கொண்டிருக்

கும்படிசெய்து, தாம்துலையிலிருந்து பாஸ்செய்யவும். உடனே சீக்கிறம்மயக்கிவிடுவான் வேண்டியகாரியங்களை விசாரித்துக்கொள்ளவும்.

சிலர் இவ்வித்தையினால் சுகப்படாதவியாதிகளை ஒருகோழி, அல்லது ஆடுமுதலியபிராணிகளில் அப்பிணியை இலேசாக இறக்கி விடுகிறார்கள். இதற்கு (இன்ஜிக் காலமெறலென்று சொல்லப்படும். அதாவது அப்பிராணியை அப்பிணியாளுக்கு முன் நிறுத்தி அப்பிணி, இப்பிராணியின்பேரில் தாவவேண்டுமென்று சிந்திப்பதால் அப்பிணி சுளுவாக அதில் தாவிக்கொள்ளும். இதனால் அப்பிராணி சுகமடையவும் ஜீவிக்கவுமாட்டாது. ஆதலால் இது மகாப்பாதகம் இதற்கு வேறுதந்திரஞ் செய்யவேண்டும். அதாவது ஒருபாத்திரத்தில் ஜலம்விட்டு அதை யவனுக்குமுன்வைத்தாவது அல்லது ஒருகல்லையல்லது ஒருகட்டைத்துண்டையாவது, அவன் முன்போட்டு அவ்வியாதியை முன்சொன்னபடி இறக்கவும். பின்பு அக்கட்டையல்லது கல்லு அல்லது ஜலத்தைப் பாத்திரமுள்பட மனிதர்கால் படாமல் புதைத்து, அல்லது மறைத்துவிடவும். இந்தவஸ்துக்களை இவ்வேலைசெய்கிறவனைத் தவிர மற்றவர்கள் தொட்டால் அவ்வியாதி ஒருசமயம் அவர்களுக்குத் தொத்தவுங் கூடும். இவ்வாறே ஒருகல்லு, அல்லது மரம், அல்லது இயந்திரம், அல்லது தகடு முதலியவஸ்துவில் இறந்துபோன மனிதர்களின் கெட்ட ஆவியையும், தேவதையையும் ஸ்தாபிப்பதுண்டு. தேவதையென்பது இன்னம் சரீரமெடுக்காத ஆவி, சிலஆவிகள் எந்தவகையான சரீரமும் எடுக்காமல் அப்படியே திரும்பிவிடுவதும், சிலது சீக்கிரமே மரித்துத்திரும்பி விடுவதும், மறுமையின் சாஸ்திரப்படி இயல்பாயிருக்கிறதென தெரியவருகிறது. தமக்குச்சரீரமெடுக்கப் போதுமான சித்த வலுவில்லாதத்தால் அப்படியாகின்றது, ஆதலால் சரீரமெடுத்தவஸ்துக்களுக்கு சித்தவலு அதிகமென்று இதனால் தெரியவரும்.

ஒருதாம்பாளம் அல்லது தேங்காய்க்குடுக்கை முதலியவஸ்துக்களில் நாள்தோறும் இடைவிடாமல் சுத்து ஒளியைச்செலுத்



தவும். அதில் பூரணமாக ஒளிநிறைந்தபின் அதை நகரும்படி சிந்தித்தால் அது அசைவில்வரும், அதைப்புதைக்கப்பட்ட பொருள்களையும், திருட்டுப்போன சாமான்களையும் காட்டும்படி ஏவினால் உடனே அது நகர்ந்து, இருக்கிற இடத்தைக்காட்டும். எப்போதும் அதில் ஒளியைநிறைந்திருக்கும்படி ஒளிநிறைத்தேவைக்க வேண்டும். சிலவான்போது சொற்பச்சிந்தனையினால் அதற்கு அசைவைக்கொடுத்து வேலைவாங்கவும். எப்போதும் அதில்பவர் தரித்திருக்கும்படி ஆக்பாயித்துவைக்கவும். அல்லது மரித்தவர்களின் ஆவியை, அல்லது இன்னம் சரீரமெடுக்காத ஓர் ஆவியைத்தரிபித்தும் வைக்கலாம். இதுபாதகமாதலால் நம்முடைய ஆவியையேத்தரிப்பித்துவைப்பது நலம். ஏனென்றால் அது அவர்களுக்கு ஒருசிறையைப்போலாயிருக்கும். நிற்கப்பாஸ்செய்வதின் விரிவான விபரமாவது.

## பாஸ்கள்.

### 1-வது குறில் பாஸ்

இதனை ஷார்ட்பாஸ் (Short-Fass) அல்லது குறில்பாஸென்று சொல்லப்படும். இதானது சரீரத்தின் யாதொருபாகம் அல்லது உறுப்பில், மேல் அல்லது கீழ் எந்தப்பாரிசமாவது சீக்கிரஞ் சீக்கிரமாகச் செய்யப்படுகின்றன. இதனை லோக்கல்பாஸ் (Local Pass) அல்லது முக்கியப்பாஸென்றுஞ் சொல்லப்படும். இவ்விதமானப்பாஸ் சரீரத்தின் யாதொருபாகம் அல்லது உறுப்பிலுள்ள வலி அல்லது வேதனை முதலிய ரோகங்களை நீக்கச்செய்யப்படும் போது; ஒவ்வொரு பாஸுக்குப்பின்னும் அதாவது:— கை சரீரத்தில் பட்டுக்கொண்டு அலக்காகும்போது ஏதோ கையில் ஒட்டிக்கொண்ட வஸ்துவை, நீக்குவதுபோல் உதறிவிடவேண்டும். உதாரணமாக ஒருவனுக்குக் கையில் தேள் கொட்டிவிட்டதாக வைத்துக்கொள்வோம் கொட்டின இடத்திலிருந்து பாஸையாரம்பித்து விரல்களின் தலைப்புறம் வரையில், கொண்டுவர வேண்டும். ஒவ்வொருதடவையுங் கையையுதறிவிடவேண்டும். அப்

படிப்பாஸ் செய்யும்போது வேதனை நீங்கவேண்டுமென்று மனதினால் அதிகவலுவாக சிந்தித்துக்கொண்டிருக்கவும் வேண்டும். பாஸையாரம்பிப்பதற்கு முன் எதுவரையில் விஷம் ஏறியிருக்கிறதென்று தெரிந்து எண்ணத்தைக்கொண்டும் கையினாலுந்தடை செய்துகொள்ளவேண்டும். அதாவது அந்த இடத்தைச்சுற்றிலும் இடதுகையினால் கை சரீரத்தில் பட்டுக்கொண்டிருக்கத்தக்கதாக சில தடவைப் பாஸ்செய்துக் கொள்ளவேண்டும். அப்படிச் செய்யும்போது மனதினால் இதற்குமேல் விஷம் ஏறக்கூடாதென்று வலுவாக சிந்திக்கவும் வேண்டும். இவ்விதமான வேதனை நீக்கக் காந்த நித்திரையுண்டாக்க வேண்டியதவசியமில்லை. பாஸ்செய்தபின்பு அந்த உறுப்பு உணர்வற்று அல்லது களைத்து சோர்ந்துவிடுமானால், கீழிருந்து மேல்பாரிசமே எதிரிட்டுப்பாஸ் செய்துவிடவேண்டும். இதற்குக் கை சரீரத்தில் படவேண்டியதவசியமில்லை. (தொடாமலும் பாஸ் செய்யலாம்) ஆனால் தொட்டுப் பாஸ்செய்வதில் சற்று குணம் அதிகமுண்டாகும். சிலவருடங்களுக்கு முன் நம்முடைய வைத்தியசாலைக்கு அப்புறத்திலுள்ள ஓர் தென்னந்தோப்பில் ஓர் கிழவிக்குக் கையில் தேள்கொட்டி விட்டது. அதை யிரண்டு மூன்று பெயர்வரையில் மந்திரித்தார்கள் விஷம் இறங்கவில்லை. அவள் பிரலாபிப்பதைப்பார்த்து அவள் கையைத்தொடாமல், பத்து பதினைந்து பாஸ்வரையில் செய்தேன் கொட்டுவாயில் கடுவலியில்லாமல் நீங்கிவிட்டது பின்பு அவள் தன்கையை உயர்த்தக்கூடவில்லை அப்படியே உணர்வற்று சோர்ந்து விட்டது. திரும்பக் கீழிருந்து மேல்பாரிசமாக எதிரிட்டுப் பாஸ் செய்தபின் கை உயர்த்தவந்தது. இவ்வாறாகப் பாஸ்செய்கிறவிடங்கள் கனத்து அல்லது அசைவற்றுப்போவது, அளவுக்குமிஞ்சிய காந்தசத்துப்பிரவேசித்து இரத்த ஓட்டத்தை நிறுத்திவிடுவதால் உண்டாகும். ஆகையால் கீழிருந்து மேல் பாரிசம்பாஸ்செய்தால் காந்தசத்து வெளிப்பட்டு இரத்த ஓட்டமுண்டாகும். இவ்வாறுணகுணபாடு அளவுக்கு மிஞ்சியதாக, எப்போதுமுண்டாகாது சிலசமயங்களில் உண்டாகும். அப்படி உண்டாவதற்குக் காரணம் யாதெனில்:— செய்யப்படுகிறவர்கள் மெஸ்மெரிஸ வித்தையின் தத்துவத்தை அதிகமாய் பேற்றுக்கொள்ளக்கூடிய



அபாவமுள்ளவர்களாயிருந்தாலும்; அல்லது செய்கிறவர்களுடைய கையில் காந்தசத்து அதிகமாயுண்டாயிருந்தாலும் அப்படியுண்டாகும். கையில் காந்தசத்தை அதிகப்படுத்திக்கொள்ளும்விதத்தைக் குறித்து, பின்னால் எழுதப்படும்: ஆனால் இப்போது நான் தேள்விஷம், வயிற்றுவலி, தலைநோய், வாய்வுப்பிடிப்பு, பல்வலி. முதலியவைகளுக்குப் பாஸ்செய்கிறதில்லை. ஒரு கூருள்ள எழுத்தாணி அல்லது ஆணியை யிரண்டு மூன்று விடுத்தம், பூமியில் வைத்து அழுத்தி அல்லது ஊன்றிக்கொண்டும், அதிகவலுவாக மனதைக்கொண்டு வலி நீங்கிவிடவேண்டுமென்று சிந்திப்பேன் இவ்வித சிகிட்சையினால் ஜூரமுதல் சுகப்பட்டிருக்கின்றன. பிணியாளிகள் நமக்குசமீபத்தில் அல்லது நமது கண்களுக்கு முன்னால், இருக்கவேண்டுமென்கிற அவசியமுமில்லை. அவர்கள் மறைவாக எங்கிருந்தபோதிலும் அல்லது எவ்வளவு தூரமிருந்த போதிலும் ஒருஆள் அல்லது ஸ்தம்பத்தை அவர்களென்று பாவித்து அதற்குப் பாஸ்செய்வதினாலும் சுகமுண்டாகும் ஆனால் இதற்குச்சற்று அப்பியாசமும், சித்தவலுவும் வேண்டும். இந்த உண்மையின் பேரில் விக்கிரக ஆராதனையேற்பட்டது.

முன்சொல்லப்பட்ட நெகேடிவ், பாஸிடிவ் அல்லது மூதுபித். மன்பியென்னும், உடன்பாடு, எதிர்மறையாகிய காந்தம் இரண்டுஞ்சரீரத்தில் சமமாக இருக்கிறவரையில் பிணியுண்டாகாது. இதில்பேதகப்பட்டால் பிணியுண்டாகும். இது இருதயமென்னும் மூலஸ்தானத்திலிருந்து சரீரமுழுமையும் பரவியிருக்கிறது. இதுவே நமது இரத்தம், மூளை, எலும்பு, நரம்பு, தசை முதலியவைகளுக்கு உயிராகவிருக்கிறது.

வலது கையால் பாஸ்செய்தால் வலதுகையிலிருக்கிற உடன்பாடாகிய காந்தம் பாஸ்செய்யப்படுகிற உறுப்பில் பாயும் பாஸ் செய்யப்படுகிற உறுப்பிலிருக்கிற எதிர்மறையாகிய காந்தத்தை வலதுகையிழுத்துக் கொள்ளும். அப்படியே யிடதுகையால் பாஸ்செய்தால் இடதுகையிலிருக்கிற எதிர்மறையாகிய காந்தம் பாஸ்செய்யப்படுகிற உறுப்பில்பாயும், பாஸ்செய்யப்படுகிற உறுப்பிலிருக்கிற உடன்பாடாகிய காந்தத்தை யிடதுகையிழுத்துக்

கொள்ளுர். ஆகையால் தொத்துவியாதிகளாயிருந்தால் நமக்குத் தொத்தாமலிருக்கவும், கெட்டகர்ந்தகுணம் நமது சரீரத்தில் சம்பந்தப்படாமலிருக்கவும், ஒவ்வொரு பாஸுக்குப்பின்னுங்கைகளை உதரும்படி சொல்லப்பட்டது. இல்லாவிட்டால் உதரவேண்டிய அவசியமில்லை. உதறுகிறதினால் பலன் குறைவுதான். எந்த பிணிக்கு எந்தக் காந்தம் அவசியமென்பதை, சமயோசிதமாய்த் தெரிந்துகொள்ளவேண்டும். உடன்பாடாகியக் காந்தம் உடன்பாடாகியக் காந்தத்தையும் எதிர்மறையாகியக் காந்தம் எதிர்மறையாகியக் காந்தத்தையும் விலக்கும். உடன்பாடாகியக் காந்தம் எதிர்மறையாகியக் காந்தத்தையும், எதிர்மறையாகியக் காந்தம் உடன்பாடாகியக் காந்தத்தையும் இழுத்துக்கொள்ளும். இவைகளின் விபரங்களைப் பற்றிப் பின்னால் அந்தந்தஸ்தானங்களில், இவைகளைக்குறித்துப் பேசும்போது தெளிவாய் விபரிக்கப்படும். ஒருவனுக்கு சர்ப்பந்தீண்டி விட்டதாகவைத்துக்கொள்வோம். அவனுக்குச்செய்யுஞ் சிகிச்சையாவது. சர்பந்தீண்டி சொற்பநேரமாயிருந்தால் தீண்டிய இடமாவது அல்லது பாகத்தை எதுவரையில் விஷம் ஏறியிருக்கிறதெனத் தெரிந்து அதற்குமேல் ஏறாமல் அந்தஸ்தலத்தைச் சுற்றிலும் இடைவெளியில்லாமல் கைசரீரத்தில் பட்டுக்கொண்டிருக்கும்படியாகக் கொட்டி சில தடவைப் பாஸ் செய்தால் மனதினால் விஷம் ஏறக்கூடாதென்று சித்திக்கத்தை செய்துகொள்ளவேண்டும். ஏனெனில் பாம்பு விஷமான அது குணத்தில் வாட்டியானக் குளிர்ச்சியாயிருக்கும். ஆகையால் அது சீக்கிரமாக இருதயத்தைத் தாக்குமென்று இரத்த ஓட்டத்தையும் திதித்துவிடுகின்றது. ஆகையால் மனுடன் மரித்துவிடுகிறான். ஆனதினால் இடது கையைக்கொண்டு பாஸ்செய்தால் குணமுண்டாகும் அப்படியே மந்திரிப்பவர்களும் இடதுகையால் மந்திரிப்பது நன்மையாகும். பின்பு முன்சொன்னபடி தடைசெய்துக் கொண்டால் விஷம் ஏறுகிறது நின்றுவிடும் பிறகு கடித்த இடத்திலிருந்து அந்த உறுப்பின் கடைசி முடிவுவரையில் அதாவது கையில் கடித்திருந்தால் கைவிரல்களின் தலைப்புரம்வரையில் காலில் கடித்திருந்தால் கால்விரல்களின் தலைப்புரம்வரையில்,



அரைமணிநேரம்வரையில் பாஸ்செய்ய வேண்டும். ஒவ்வொரு பாசுக்குப்பின்னுங் கையை யுதறிவிடவேண்டும். ஏனெனில் கெட்டகுணங்கள் அப்பொழுது தான் நீங்கும். கடித்து அதிக நேரமாய்விட்டால் அல்லது விஷம் மூளைக்கேறி மூர்ச்சையாகிவிட்டால் தலையிலிருந்து கால்விரல்களின் தலைப்புரம் வரையில் பாஸ் செய்யவேண்டும். அப்பொழுதுதான் சுகமுண்டாகும். அதிக அப்பியாச முள்ளவர்களும் அதிகவலுவான சித்தமுடையவர்களும், வாயால் விஷமிறங்கென்றால் போதும் உடனே யிறங்கிவிடும். தலையிலிருந்து கால்வரையில் பாஸ்செய்வதற்கு நீளப்பாஸென்று சொல்லப்படும். இதின் விபரம் பின்னால் வரும் அப்படிச்செய்யும்போது மூர்ச்சை தெளிந்து உணர்ச்சிவந்தால் நல்லது. இல்லாவிட்டால் சிலிர்த்தரோமங்கள் படிந்து விடவேண்டும், விஷம் இறங்காவிடில் உரோமம் படியாது உரோமங்கள் படிந்தும் உணர்ச்சி வராவிடில், புருவ மத்தியில் இரண்டு மூன்று விநாடிகள் வலுவாக ஊதவேண்டும். அப்படியும் உணர்ச்சிவராவிடில் அப்படியே விட்டு விடவேண்டும். அரைமணிநேரத்தில் தானே தெளிந்துவிடும். பாம்பு விஷங்களுக்குக் கீழிருந்து மேல்பாரிசமாகப் பாஸ்செய்யக்கூடாது. தலைகீழானப் பாஸ்செய்வதினாலும் புருவமத்தியில் ஊதுவதினாலும், எவ்விதமூர்ச்சைகளும் அல்லது ஆவேசம் வந்திருந்தபோதிலும் உடனே நீங்கிவிடும் கெர்பஸ்திரீகளுக்கு இடுப்புக்குக்கீழ் சாதாரணமானப் பாஸ்செய்யக்கூடாது அதனால் கெற்பம் விழுந்துவிடும். அப்படியே அவர்களுக்கு இடுப்புக்குமேல் தலைகீழானப் பாஸுஞ்செய்யக்கூடாது அதனால் கெற்பம் மேலே யேறிவிடும். கெற்பத்துக்குச் சேதமுண்டாகாத வழி யேதாவது மெஸ்மெரிஸ் சம்மந்தமாக புத்திக்கும் அனுபோகத்திற்கும் ஒத்திருந்தால், அவ்விதம்செய்யலாம். வயிற்றில் மரித்தபிண்டங்களை வெளியாக்க வயிற்றிலிருந்து, முழங்கால் வரையில் அரைமணிநேரம் பாஸ்செய்தால் வெளிப்படும். தொடாமல் சற்றுத்தூரத்தில் நிறைக்கு அப்புறமிருந்துகொண்டுஞ்செய்யலாம். அல்லது ஒருதாதிக்காவது செய்யலாம். தன்சொந்த மனைவியாயிருந்தால் தொட்டுஞ்செய்யலாம் எவ்விதஞ்செய்தபோதி

லும் அதோடு சித்தவலுவையும் பிரயோகிக்கவேண்டும். இல்லாவிட்டால் ஒன்றும் நடக்காது, சித்தவலுவே சகல்காரியத்துக்கும் உயிரென்றெண்ணிக் கொள்ளவும்.

சரீரத்தின் யாதொருபாகம் அல்லது உறுப்பில், கத்திப்பிரயோகஞ்செய்யவேண்டுமானால், அப்பியாசிகள் செய்யப்படுகிறவன்பேரில் காந்த உறக்கமுண்டாக்கவேண்டும். காந்த உறக்கமுண்டானவுடன் அந்தப் பாகம் அல்லது உறுப்பின்பேரில், சிலதடவை சிறியப் பாஸ் அதாவது குறில்பாஸ் சீக்கிரஞ்சீக்கிரமாக செய்யவேண்டும். ஆனால் முன்போல் கையை உதறக்கூடாது. இல்லாவிட்டால் குணம் அதிகமாகத் தாவாது பின்பு அவ்விடஞ் சேர்ந்து அசைவற்றும்போம். அதின்பேரில் கத்திப்பிரயோகஞ்செய்யலாம்! வருத்தமிராது ஆனால் அநுபோகசாலிகளுக்குச் செய்யப்படுகிறவன்பேரில் காந்த உறக்கமுண்டாக்கவேண்டிய அவசியமில்லை. அவர்கள் இரண்டு மூன்றுப்பாஸ்செய்தவுடன் பவனை சீக்கிரம் ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களா? அல்லவா? வென்று சீக்கிரந்தெரிந்துக்கொள்வார்கள் சீக்கிரம் பவனையேற்றுக் கொள்ளக்கூடிய வர்களாயிருந்தால், சிலதடவைப் பாஸ்செய்து அந்த உறுப்பை அசைவற்றுப்போகும்படிச் செய்துவிடுவார்கள். அதின்பேரில் கத்திப்பிரயோகஞ் செய்யலாம். சீக்கிரம் பவனையேற்றுக்கொள்ளாத வர்களுக்கு, இவர்களுக்கும் முக்கியமாகக் காந்த உறக்கஞ்செய்யவே வேண்டும். காந்த உறக்கமுண்டாக்கும் விதங்களை முன்னால் சொல்லப்பட்டிருக்கிறது ஒருதடவை பிரான்சிலுள்ளராயல் எக்டீ யென்பவர் ஓர் ஸ்திரியின் ஸ்தனத்தின்பேரில்மெஸ்மெரிஸஞ்செய்து அதை அசைவற்றுப்போகும்படிச்செய்து அதிலுள்ளக்கட்டியை அறுக்க உத்தரவுசெய்தார் அந்தவிடம் உணர்வற்றுப்போய்விட்டது. பிறகு அதின்பேரில் பன்னிரண்டு நிமிஷம்வரையில் கத்திப்பிரயோகம் நடந்தது அவளுக்கு யாதொருவலியுந்தோன்றவில்லை சாதாரணமாகப் பேசிக்கொண்டிருந்தாள். இவ்விதமாக ஸ்திரீகளின் புண்பட்ட ஸ்தனங்களை யெத்தனையோ அவர்கள் கண்களுக்குமுன்னால் அறுக்கப்பட்டிருக்கிறது அவர்களுக்கு யாதொரு வேதனையுந்தெரியவில்லை.



டாக்டர் எஸ்டேலென்பவர் கல்கத்தாவில் ஓர் ஆஸ்பத்திரி கட்டியிருந்தார் அதில் மெஸ்மெரிஸ வித்தையினால் மனிதர்களை மயக்கி அவர்கள் அவயவங்களில் கத்திப்பிரயோகஞ் செய்துக்கொண்டிருந்தார் அவர் அவர்களுக் குளோரபாரம் உபயோகிக்கவில்லை இதற்காகவே அந்த ஆஸ்பத்திரி கட்டப்பட்டிருந்தது அவர் செய்த இரணவைத்தியங்களுக்கெல்லாம் மெஸ்மெரிஸ வித்தையையே உபயோகித்து வந்தாராம்.

## 2-வது நெடிப்பாஸ்

இதனை லாங்பாஸ் (Long Pass) அல்லது நீவில்பாஸென்று சொல்லப்படும். நீளப்பாஸானது சிரசுதொடுத்து கால்வரையில், உட்காந்திருப்பவர்களின்பேரில் செய்யப்படுமானால் அதற்கு நீளப்பாஸ் அல்லது நெடில்பாஸென்று சொல்லப்படும். கட்டில் அல்லது தரையில் படுத்திருப்பவர்களின் பேரில் செய்யப்படுமானால் அதற்கு Horizontal ஹாரிஸண்டல் அல்லது உபக்கி அதாவது அருகுப்பாஸென்றும், (Oblique) ஆப்ளிக் அல்லதுக்கதி அதாவதுக் கோணல் பாஸென்றுஞ் சொல்லப்படும். இப்பாசுக்களைப் பெரும்பாலும் மேக்னடிக் (Magnetic) அல்லது மக்னத்தீஸீ அதாவதுக் காந்தப்பாசென்றுஞ் சொல்வதுண்டு ஏனெனில் இதின் மூலமாகச் செய்யப்படுகிறவன் அல்லது பிணியாளியின்பேரில், ஆழ்ந்த காந்த நித்திரையுண்டாக்கப்படுகின்றது. இவ்விதப் பாசுகள் மகாகுணமுள்ளதாயிருக்கின்றன. இன்னம் இவ்வாறானப் பாசுகள், வியாதிகளை யிழுத்துச் சுகப்படுவதற்காகச் செய்யப்படுமானால் கை சரீரத்தில் பட்டுக்கொண்டிருக்கவேண்டும். காந்த உறக்கமட்டுமுண்டாக்குவதற்காகச் செய்யப்படுமானால் கை சரீரத்தில் படாமல் அலக்காயிருக்கவேண்டும் எந்தவியாதிகளுக்கும் பொதுவாக சிரசிலிருந்து கால்வரையில் நீளப்பாஸ் செய்யலாம் ஒரு அங்கம் அல்லது ஒரு உறுப்பில் யாதொரு வியாதியிருக்குமானால் அந்த வியாதியிருக்கிற ஸ்தலத்துக்கு சற்று உயரத்திலிருந்து அந்த உறுப்பின் கடைசி முடிவுவரையில் சிறியப்பாசுஞ் செய்யலாம் வியாதிகளுக்காகச் செய்

கிறபாஸ் எத்தப்பாஸானாலும் ஒவ்வொருபாசுக்குப் பின்னுங்கையை யுதறிவிடவேண்டும் இல்லாவிட்டால் அவ்வியாதிகள் ஒரு சமயம் நமக்குத் தொத்திக்கொள்ளும் காந்த ஊறக்கமுண்டாகச் செய்கிறப் பாசுகளுக்குக் கையையுதறக்கூடாது.

### 3-வது இழுப்புப்பாஸ்

இதனை அட்ராக்டிவ் (Attractive) அல்லது கவிஷி அல்லது ஐதுபி யென்று சொல்லப்படும் இப்பாசுகளை உபயோகப்படுத்துவதற்கு அதிக சித்தவலுவேண்டும் இப்பாசுகளினால் செய்யப்படுகிறதாவது:— செய்யப்படுகிறவனுடைய மாமூல் தொலையிலிருப்பானாகில் செய்கிறவனுடைய ஆமீல் அவனைத் தன் பாரிசமிழுக்கிறதாயிருக்கும அதாவது செய்யப்படுகிறவன் முன்னால் தொலையிலிருப்பதாக நினைத்துக்கொள்வோம அவன் நெஞ்சுக்கும் செய்கிறவனுடைய நெஞ்சுக்கும் சிறுகயிற்றைப்போல் ஒரு ஒளியின் தொடர்ச்சியேற்பட்டிருக்கிறதாக சிந்தித்து செய்கிறவன் தன் இரண்டுகைகளையும் அவன் முன்னுக்கு நீட்டி அவ்வொளியான கயிற்றைப்பிடித்துக்கொண்டு அவனைத் தன் நெஞ்சின் பாரிசமிழுப்பதேயாம் அப்படிச்செய்யும்போதுக் கைவிரல்களை மூடியிருக்கக்கூடாது எங்கிலும் விரல்கள் சற்றுவளைந்ததாக விரித்திருக்கவேண்டும் இவ்விதப்பாசுகளினால் செய்கிறவனுடைய சித்தம், அதிகவலுவாகவுங் கெட்டியாகவுமிருக்குமேயானால் அல்லது செய்யப்படுகிறவன் மிகவுங் கூர்மையானப் புலனுடையவனாக இருப்பானேயானால் அல்லது மெஸ்மெரிஸவித்தையின் பலனை சீக்கிரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய சுபாவமுடையவனாக இருப்பானேயானால் இடையில் எத்தனைத்தடுப்புகளிருந்த போதிலும் அல்லது அவன் எவ்வளவுத் தொலையிலிருந்தபோதிலுஞ் சரியே அதிக குணமுண்டாகும் பெரும்பாலுஞ் செய்யப்படுகிறவர்கள் உடனே செய்கிறவனிடம் வந்துமுட்டிக்கொள்வார்கள் ஆகையால் முன்னையே யெச்சரிக்கையாயிருக்கவேண்டும். இவ்விதப் பாசுகள் சபையில் வேடிக்கைகாட்டுகிறவர்களுக்கு அதிக உபயோகப்படுகின்றன. இதைப்பற்றி வேறொரு அத்தியாயத்தில் சொல்லப்படும்.



இன்னொருவகையான இழுப்புப்பாஸ் யாதெனில்:— தன்னுடைய வலதுகையை செய்யப்படுகிறவன் பாரிசம் பந்தாடுகிறவர்கள் கையில் பந்தைவைத்துக்கொண்டு எறிவதுபோல் வெறுங்கையை யெறியவேண்டும். அப்படியெறியும்போது தன் வலது காலையும் முன்னுக்கு எடுத்துவைத்துவிடவேண்டும் இன்னம் நாம் செய்யப்படுகிறவன் பேரில் ஒளியின் கயிற்றை வீசிவிட்டோம் அது அவனைப் பேர்ய்ச் சுற்றிக்கொண்டதென்று சிந்திக்கவும் வேண்டும் பின்பு அவனை தமது பாரிசமிழுக்கவேண்டும். இது மிகவுங்குணமுடுள்ளவழி இக்குணமுள்ளவழிப்பாட்டை யெல்லாரும் அறியமாட்டார்கள் வேடிக்கைக்காட்டும்போது அநுபோகசாலிகள் சபையில் உட்கார்ந்திருப்பவர்களின் பேரில், யார்பேரில் குணம் அதிகமாகத் தாவுகின்றதென்று வெகு சுளுவாகத் தெரிந்துகொள்ளக் கூடும் ஆனால் எவர்களின்பேரில் குணம் அதிகமாகத்தாவுகின்றதோ அவர்கள் நமதுக்கை அசையும்போதெல்லாம் அவர்களும் அசைந்துவிடுவார்கள் இன்னம அவர்களின் சரீரம் நமதுபாரிசம் முன்னுக்கு இழுக்கப்படுகிறதாகத் தெரியவரும் ஆனால் சிலர்களின்பேரில் இவ்வளவு குணமுமுண்டாகும் அதாவது அவர்கள் செய்கிறவனுடைய நெஞ்சில் வந்து வெகுவேகமாக முட்டிக்கொள்வார்கள். அதனால் செய்யப்படுகிறவர்கள்பெரும்பாலும் பூமியில் விழுந்துவிடுவார்கள் இப்பயங்கரமான செயல்களை மறைப்புப்பாஸின் மூலமாகத் தடுத்துக்கொள்ளவேண்டும்.

### 4-வது மறைப்புப்பாஸ்

இதாவது இழுப்புப்பாசுக்கு நேர் மாற்றமாயிருக்கும் இதின் விபரமாவது:— நமது விரல்கள் சற்று வளைந்திருக்கும்படியாக நமது உள்ளங்கையை செய்யப்படுகிறவன் பாரிசந்திருப்பிக்கொண்டு நமதுகையை நீட்டி அவனை நம்மிடமிருந்து நமது உள்ளங்கையினால் முட்டித்தள்ளுவதுபோல் சைகைகாட்டவும் அப்படிச் செய்யும்போது நமது எண்ணத்தினால் தடுத்து நமது கையினால் அவனை முட்டித்தள்ளுகிறோமென்று, மனதினால் சிந்திக்கவும் வேண்டும்.

### 5-வது தலைகீழான நெடில்பாஸ்

இதனை மாற்றமான நீளப்பாஸென்று சொல்லப்படும் நீளப் பாஸினால் ஜீவகாந்தப் பவரைச் செலுத்தப்படுகின்றது மாற்றப் பாஸினால் வெளிப்படுத்தப்படுகின்றது இவ்விதப்பாசுகளினால் பெரும்பாலுஞ் சில நூதனங்கள் வெளிப்படுகின்றன. அதாவது இப்பாஸை முதுகெலும்புக்குக் கீழ்பாகத்திலிருந்து ஆரம்பித்து மேல்பாரிசமாக நமது கையைத் தலையின்மேல் பாகம் வரையில் கொண்டுபோகப்படுமானால் பெரும்பாலும் கூர்மையான புலன்களையுடையவர்களிற் சிலர் ஆகாயத்தில் தூக்கப்பட்டு விடுகிறார்கள். நாம் எச்சரிக்கையாயில்லாவிடில் பூமியில் கீழேவிழுந்து விடுவார்கள் நான் என் சகோதரனுக்குச் செய்யும்போது, எனக்கும் ஒருவிடுத்தம் இவ்விதஞ் சம்பவித்திருக்கிறது புஷ்டியாகத் தடித்திருப்பவர்களின் பேரில் இவ்விதப்பாஸ்செய்யக்கூடாது ஏனெனில் ஜீவகாந்த உஷ்ணம் அல்லது தத்துவமானது மேலே எழும்பும்போது நரம்புக்கோர்வைகள் அசைக்கப்பட்டு ஒருசமயம் சீக்காய்விடக்கூடும்.

### 6-வது தலைகீழானக்குறில்பாஸ்

இதனைத் தலைகீழான சிறியப்பாஸென்றுஞ் சொல்வார்கள் இதைப்படத்தில் காட்டப்பட்டிருக்கிறது, படத்தில் காட்டியபடி இரண்டுகைகளையுஞ் சேர்த்துக்கொண்டு செய்யப்படுகிறவன் முகத்தில் பாஸ் செய்கிறதாயிருக்கும் இவ்விதம்பாஸ்செய்து வருவாகச் செய்யப்படுகிறவன் முகத்தில் வாயினால் ஊதினால் ஜீவகாந்தகுணம் நீங்கிவிடும் அதிக அப்பியாசமுள்ள அனுபோகசாலிகளுக்கு இவ்விதப்பாஸ் செய்யவேண்டிய அவசியமில்லை குணம் நீங்கும்படிக்கு வாயினால் உத்தாலனித்தே குணத்தை நீக்கக் கூடும்.

### குற்றுப்பாஸ்

இது வாழத்தக்கவி அல்லது ஒரு கூருள்ள ஆணியை பூமியில் ஊன்றிக்கொண்டு பிணி வேதனை விதை முதலிய வைகளை இறக்கும்படி சிந்தித்தால் உடனே இறங்கிவிடும் இரண்டு மூன்று



விடுத்தம் செய்வதால் எவ்வித பிணிகளும் வருத்தங்களும் விஷங்களும் குணமாகாமல் போகாது இதற்கும் சற்று சித்த வலுக் கெட்டியாக இருப்பது அவசியமாகும்.

### 7-வது வட்டப்பாஸ்

அல்லது வளைவுப்பாஸ் இது ஞான திருஷ்டி செய்யும் போது அடிக்கடி நெற்றியிலிருந்து இரண்டு விலாப் புறங்களுக்கும் ஒளியைப் பரவ விடுவதற்காகச் செய்யப்படுகின்றன.

### 8-வது தட்டுப்பாஸ்

இது மிருகங்களைத் தன் சித்தத் திறத்துக் கீழ்படுத்திக் கொள்ளவும் பயத்தைத் தெளித்து தைரியத்தைக் கொடுக்கவும் வேதனைகளை நீக்கவும் முக்கியமாகச் செய்யப்படுகின்றன இதில் வெறுந் தட்டு மட்டும் பிரயோஜனப் படாது சித்த தத்துவத்தைப் பிரயோகிப்பது உடன் அம்மிருகத்தின் கண்களை கூர்ந்து பார்த்து மெதுவாக அதின் முகத்தையும் முதுகையுந் தடவிக் கொடுத்து பின்பு அம்மிருகத்தின் இரு காதுகளையும் நமது இரு கையினும் பிடித்து, கொஞ்சநேரம் சிந்தித்து மெள்ள செவியில் ஊதவும் பின்புத் தட்டிக்கொடுத்து நம்மோடு அழைக்கவும் உடனே வசப் பட்டுவிடும்.

### 9-வது சுட்டுப்பாஸ்

இது பிணியின் ஸ்தலத்தில் ஒளியை சேகரஞ் செய்ய செய்யப்படுகின்றது இது மூன்று வகைப்படும் இவைகளை ஆங்காங்கு படத்தின் மூலமாக விவரித்துக் காட்டப்படும் இதைப் பிரயோகிக்கும்போது கை சரீரத்தில் படக்கூடாது.

### 10-வது தொட்டுப்பாஸ்

அல்லது தடவுப்பாஸ் அதாவது தொட்டு அல்லது தடவிப்பாஸ் செய்தல் முதலியன.

### 11-வது சொடக்பாஸ்

அதாவது ஒவ்வொரு பாசுக்குப் பின்னும் நமது கைகளில் கெட்டகுணம் தாவாமல் அல்லது ஒட்டிக்கொள்ளாமலிருக்கும் பொருட்டுக் கையை உதறுவது இவைகளையும் அங்கங்கு விவரித்துக் காட்டப்படும்.

### 12-வது தோடாப்பாஸ்

அல்லது சமிக்கினைப்பாஸ் இதுவும் ஓர் ஸ்தலமல்லது அங்கத்தில் ஒளியை சேகரஞ் செய்துப்பரவ விடச் செய்யப்படுகின்றது இதில் கை சரீரத்தில் படக்கூடாது.

### 13-வது குறிப்புப்பாஸ்

அல்லது மறைவுப்பாஸ் இதுவானது ஒரு வஸ்துவுக்குச் செய்யவேண்டியப் பாஸை வேறொரு வஸ்துவுக்குச் செய்கிறது இதனாலும் அந்தவஸ்துவுக்குக் குணமுண்டாகின்றது,

### 14-வது சுடாபாஸ்

அல்லது தன்மைப்பாஸ் இதுவானது, தனக்குப் பலயீனமுண்டானால் அதை நீக்கிக் கொள்வதற்காகச் செய்யப் படுகின்றன அதாவது நமது வலது கையால் இடது தோளிலிருந்து கால்வரையில் பின்பு நமது இடதுகையால் வலதுதோளிலிருந்து கால்வரையில் பின்பு நமது இருகையாலும் முகத்திலிருந்து கால்வரையிலும் இரண்டு மூன்று விடுத்தம் பாஸ்செய்துக்கொள்ளுதல் இதனால் நமக்குப் புதிய சக்தியுமுண்டாகும்

### 15-வது சுற்றுப்பாஸ்

அல்லது கட்டுப்பாஸ் அதாவது நம்மை அல்லது செய்யப்படுகிறவனைச் சுற்றியும் அல்லது ஒரு அங்கத்தைச் சுற்றியும் காரமானத்திற்காகப் பாஸ்செய்தல் இதனால் அந்த அங்கத்தைச் சுற்றியும் அல்லது நம்மைச் சுற்றியும் அல்லது செய்யப்படுகிறவனைச்சுற்றியும் காரமானமாக ஒளி சூழ்ந்து நிற்கும் இதனால் நம்மையாவது செய்யப்படுகிறவனையாவது, வெளியிலிருந்து யாதொரு வஸ்து பயமுறுத் தாட்டவாவது யாதொரு தீங்கை விளைவிக்கவாவது முடியாது இதை உடல்கட்டு என்றும் சொல்லப்படும். இதின் விபரங்களை அந்தந்த ஸ்தலங்களில் படத்துடன் விபரமாய் 2 ம் பாகத்தில் விபரித்துக் காட்டப்படும். இனி மெஸ்மரேசத்துக்குரிய முக்கிய சித்திரப் படங்களைக் காட்டப் படுகின்றன அதனை அடுத்த பக்கங்களில் பார்க்குக.

786

# மெஸ்மரேஸப் படங்கள்

உடன்பாடு எதிர்மறை என்னும்ஜீவகாந்தஒளி. மனுசர்
சரீரத்தில் பரவி. இருக்கும்விதமும். உரோகங்களை
குறிப்பிட்ட இடங்களில் நிவர்த்திக்கும்தன்
மையும். காந்த உறக்கம். மிருகவசியம்.
கண். கை. அப்பியாசங்கள் விபர
மாய்ப் படங்களில் காட்
டப்பட்டிருக்கின்றன.

இஃது புத்தகம்,

..............................................................

..............................................................

..............................................................



உள் அவயவங்களைக்காட்டும் படம்



தலையின் மேல்புறம் காட்டிய படம்.



1. சுதேச இச்சை
2. தரிதம
3. யோக்கிதை
4. சாந்தம்
5. அந்தகாட்சி
6. காலதாமதம்
7. கண்டதுபோல்செய்தல்
8. மட்டுப்படுத்தல்
9. ஞாயம்
10. அமானிதகுணம்
11. கவலை



தலையின் பின்புறத்தைக் காட்டிய படம்



1. அன்பு
2. புகழ்
3. இரகசியம்
4. விசுவாசம்
5. விவேகம்.
6. அகங்காரம்
7. கஷ்டம்
8. கார்மானம்

ஜடத்தின் ஆசதாரங்களைக்காட்டும் படம்




1 சாக்கரம்
2 சொற்ப்னம்
3 சுழுத்தி
4 துரியம்
5 துரியாதீதம்
6 அதீதம்



காலின் நறம்பைக்காட்டும் படம்



கையின் நரம்பைக்காட்டும் படம்









[illegible] நரம்பு போகுமிடங்களையாவும் இதில் காட்டப்படுகிறது

தலையின் இடது புறங்காட்டியப் படம்.




| | | | |
|---|---|---|---|
| 1. | காமம் | 11. | ஆசாரம் |
| 2. | யுத்தம் | 12. | தர்மம் |
| 3. | சிநேகம் | 13. | பயம் |
| 4. | புத்திரவாஞ்சை | 14. | சிந்தனை |
| 5. | சுய இச்சை | 15. | ஆனந்தம் |
| 6. | எச்சரிக்கை | 16. | ஞாபகம் |
| 7. | அபிமானம் | 17. | ஒற்றுமை |
| 8. | கோபம் | 18. | ஒழுங்கு |
| 9. | அனியாயம் | 19 | அறிவு |
| 10. | தேட்டம் | 20. | கணக்கு |

திரேகத்தின் மன்பி இது பாத்தேன்னும் ஒளிகளைக்காட்டும் படம்.

முன்புறம்






குணத்தை இறக்கும் விதத்தைக் காட்டியபடம்



ஜலத்தில் பவர்செய்யும் விதத்தைக் காட்டிய படம்



கண்பார்வையின் அப்பியாசத்தைக் காட்டிய கண்ணாடிப்படம்



கண்ணாடி அல்லாமல் ஓர் அட்டையின்மிக் காகிதத்திலும் நடுமையம் கருப்புப்பொட்டிட்டும் பார்க்கலாம்.

---

கையின் காந்தத்தால் காந்த உறக்கம் செய்யும் விதத்தைக் காட்டியபடம்





மெஸ்மெரிஸம் செய்யும் வேரொரு வகை.

ஆமீல் மக்மூலைக் காந்த நித்திரைக்குக் கொண்டுபோகும் விதத்தைக் காட்டியபடம்



ரூலிட்ட்க்காகிதத்தில் கை அப்பியாசம் செய்யும் விதத்தைக் காட்டிய படம்



கையிலிருக்கும் மீடியன் அனரைக்காட்டியபடம்





திரேகத்தின் முன்பு இரு பாத்தேன்னும் ஒளிகளைக்காட்டும் படம்

பின்புறம்



தலையின் முன்புறத்தைக் காட்டியபடம்.




1. வார்த்தை
2. சாதுரியம்
3. சித்தம்
4. பகுத்தறிவு
5. நற்குணம்
6. கிரப்பத்தின் இச்சை
7. இராகத்தின் இச்சை
8. கட்டடம்கட்டும் இச்சை
9. நற்குணம்
10. அதிருப்திசந்தேகம்
11. நிறம்
12. நிறை
13. அளவு



தலை மூளையின் நரம்புகள் முதுகெலும்பு முதலிய வைகளைக்காட்டும் படம்




MADRAS

எலும்புகளின் பூட்டுகளைக்
காட்டியப்படம்.



கை அல்லது கால்களின் வழியாய்ஜீவகாந்தமீடியன் அல்லதுஎன்னும் காந்தப்பவருடைய நரம்புகள் தலை மூளைக்கு நேரே செல்வதைக் காட்டியபடம்.





சிங்கவசியத்தைக்காட்டியபடம்.

ஜீவகாந்தப்பவரால் கையின்காந்தத்தைச் செலுத்தி சிங்கத்தை வசியப்படுத்துதல்



நேயர்கள் சர்க்கஸ்களில்சிங்கம் புலி யானை முதலிய துஸ்டமிருகங்களை வசப்படுத்தி தனதிஷ்டப்படிநடத்துவதைப்பார்க்கலாம் இது வானது மெமண்டல்போர்ஸ் எனும் மனோசக்தியின்

நேயர்கள் எனதாசிரியராகிய அவரை கூறலுகின்றது பாலி
னல் காந்தசக்தியைக் கொண்டுபோகும் விதமும் மாக்களின்
வியாதிகளை மருந்தன்னியில் மெஸ்மரேஸத்தாற் தீர்க்கும்விதமும்
ஆகாரம் தண்ணீர் ஒளஷதம் முதலியவைகளுக்குக் காந்தப்பவர்
உண்டாக்கும்விதமும் தூரதிருஷ்டி மகிமையைக்கொண்டும் சூக்ஷ்
மத்தைத் திரிலோகங்களுக்கு அனுப்புவகை, பிறர் மனதிலுள்ள
தைத் தெரிந்து சொல்லும்வகை, மிருகம் பக்ஷிகளை வசப்படுத்
தும்விதம், பிணிகளைப் பலவைகளிலிறக்கும்வகை, மெஸ்மரேஸத்
தின் செய்கையைக்காட்டும் முக்கியபடங்களும், இன்னம் பல
விதமும் எழுதியாகிவிட்டன, இனி, மேற்கூறியவைகள் செய்ய
தம்பால் காந்தப்பவர், அவசியம் உண்டாக்கிக்கொள்ளவேண்
டும் அதாவது அவை, பழக்கத்தாலாகுகின்றன.

## மெஸ்மரேஸ யோக.

# அப்பியாஸமுறைகள்.

நவீன கண் அப்பியாசம் தீபத்தைப்பார்த்தல்

கண்ணுக்கு அப்பியாசஞ்செய்யும் விதத்தில் ஒருபாகம் முன்னடியே சொல்லியாகிவிட்டன, கட்புலனுக்கு இன்னொரு விதத்திலும் சுலபமாகப்பவர் உண்டாக்கலாம் அதாவது,

ஒரு சிறு விளக்கு ஒன்று தயார்செய்து அதிற்பசுவின் நெய் அல்லது ஆமணக்கெண்ணெயூற்றி பெருப்பமில்லாத [illegible] சன திரிபோட்டுவிடுத்து, நெருப்புப்பொருத்தி ஏகாந்தமான நிசப்தமில்லாத ஓர் அறைவீட்டின் கண், காற்று அதிகமில்லாது தான் தனிமையாக, அமர்ந்து புருவமத்திக்கு நேராக தீபத்தை (3) அடிக்கப்பால் வைத்து தாம் இமைபோகக் கண்ணுடன் தீபத்தைத் (15) நிமிஷம்வரை தீபம் அமர்ந்திடவேணுமென்ற உறுதியான எண்ணத்துடன் பார்த்துவரவும் இப்படியாகப்பார்க்க மேற்படி தீபத்தின் துளி (20) நாளைக்குள் நமதுபார்வையின் வன்மையாலும் மெண்டல்போர்ஸாலும் சிறிது சிறிதாக அதின்



பவர்க்கம்பியர்கீழ் அமர்ந்துவிடும் அப்போது கட்புலனுக்கும் மனதிற்கும் வன்மையாகிய ஜீவகாந்தப்பவர் உண்டாகிவிட்டது இதனால் அநேகமநேக சித்துகள் செய்யலாம். பார்வையினாலும் நினைப்பினாலும் மேற்கூறியபடி வியாதிகளைத்தீர்க்கவும் மிருகங்கள் பக்ஷிகள் தமதிஷ்டப்படி நடைபெறவுமாகுகின்றன இன்னம் கண்ணின் அப்பியாசம் பல இருக்கின்றன அவைகள் விரிவாக 2-ம் பாகத்தில் எழுதிவருகின்றன

# கை அப்பியாசம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 7 OCT 1913 MADRAS

காகிதத்தில் பாஸ்செய்தல்

நான்கு பக்கங்கொண்ட ஒருமுழுடிம்மிக் காகிதம்வாங்கிஒரு பக்கத்தில் மேலிருந்து கீழ்வரை $\frac{1}{2}$ அங்குலத்துக் கொருகோடாக பக்கம் பூராவும் போட்டு சமசசான ஒரு டேபுல் 3-அடி வரை உயரமுள்ளது தயார்செய்து அதில் மேற்படி காகிதத்தைவைத்துத் தான் தனிமையாக ஏகாந்தமான அறையில் நின்றுகொண்டாவது அல்லது மேற்படி காகித அளவுள்ள ஒரு பலகையில் ஒட்டிய காகிதத்தை வைத்துத்தான் குந்தியிருந்து கொண்டாவது அல்லது தனக்கிஷ்டமுள்ளபடி இருந்துகொண்டு தனதிருகரங்களையும் விரித்து விரற்களும் கைகளும் ஒன்றோடொன்று படாமற் காகித அளவிற்கையை ($\frac{1}{2}$) அங்குல உயரத்தில் கை காகிதத்திற் படாதிருத்தி மேல்பாரிசமாக ஆரம்பித்துக் கையை பறப்பினபடி நிறுத்திக்கும்பகம் செய்து கீழ்பாரிசமாக கடைசி வரை ஒவ்வொரு கோடாக மெதுவாகக் கையை இழுக்கவேண்டியது இத்துடன் மூச்சையும் மெதுவாக விடவேண்டியது பின்னர் கீழ்வரிசையில் கைவந்தவுடனே காகிதத்தில் கைபடாது கையை காகிதத்தின் ஓரத்தில் இருபக்கமும் நேராக தென்வடல் இழுத்து கையைமூடிக்கொண்டு ஓரப்பக்கமாக மேல்வரை உயர்த்தவும்,

அத்துடன் மூச்சையும் மெதுவாக உள்ளுக்கிழுக்கவும், காகிதத்தின்மேல் பக்கம் கைவைத்த உடன் கையைவிரித்து மேலிருந்து கீழும் கீழிருந்து மேலுமாக தினந்தினம் 30 மினிட்டாக ஒருமாசம்வரை பழக்கஞ்செய்து வந்தால் கைகளுக்கு அளவற்ற காந்தசக்தி மீடியன் ஆனரில் உண்டாகுகின்றன இதனால் ரோகங்களைச் சொஸ்தம் செய்யவும் ஔஷதம் தண்ணீர் சர்பத்து முதலானவைகளுக்கு வலுவிய காந்தசக்தியைக் கொடுக்கவுமாகுகின்றன.

# பிராணாயாமம்

## மூச்சின் அப்பியாஸம்.

மேற்கூறிய விதத்தின்கண் தான் தனிமையாகவிருந்து கொண்டு மெதுவாக ஒரு நிமிஷம் மூச்சையிழுத்து ஒரு நிமிஷம் மூச்சை நிறுத்தி ஒரு மினிட் மூச்சை விடவும் மறுநாள் $1\frac{1}{2}$ நிமிஷமாகவும் அதற்கு மறுநாள் 2 நிமிஷமாகவும் இப்படியாக நாள் ஒன்றுக்கு அரைமினிட்டு அதிகம் சேர்த்துக்கொண்டு கடைசியில் 12 நிமிஷம் ஒரே தடவையில் இழுக்கவும் 12 மினிட் நிறுத்தவும் நிறுத்தினபடி மெதுவாகவிடவும் பழகவேணும் இப்படியாக அப்பியாசம் பூர்ணமடைந்தவுடன் தேகத்தின் 72000 நாடி நரம்புகளிலும் ஜீவகாந்தசக்தி பூராயுண்டாகுகின்றன. இதனால் தமக்கு கேகால்ரா, பிளேக், விஷசுரம், பாண்டு, குன்மம், க்ஷயம், முதலிய கொடிய வியாதிகள் அறவே இல்லாமலும் தம் சரீரத்துக்கு மிகுந்த வலுவும் சித்தம் ஒரு நிலைப்படவும் இதர மாக்களின் பிணிகளை மெஸ்மெரிஸத்தின்படி நிவாரணை செய்யவுமாகுகின்றன.

# முக்கிய அறிவிப்பு

யோக அப்பியாசம் செய்யும் காலத்திலும் மற்றெப்பொழுதும் இணையில்லாதபிர்மமாகிய அல்லாசுபகானகுவத்தாலாவை

105



யே நாடி உண்மையுடன் மற்றொன்றையும் நினைக்காது தான் தானாகவே உறுதியுடன் அதாவது தன் நம்பிக்கையுடன் சாதனம் செய்வதுடன் அப்பியாசகாலத்துக்கு முன்னற ஒரு மணிக்கு முன் ஆகாராதி அருந்துதலும் சாம் சுத்தமாக விருத்தலும் ஆரம்ப அப்பியாசிகள் ஒரேஅறையில் ஒரேஜாகாவில் ஒரே டயத்தில் ஏகாந்தமாக மூளையை சாந்திசெய்யும் நேரமாகிய அதிகாலையில் 7-மணிமுதல் 8-மணிவரை பிராக்டிஸ் Practs செய்துவரவும்

இரண்டாவது பாகமாகிய ஹிப்னாடிஸமும், மூன்றாவது பாகமாகிய இஸ்பிரிச்சுவலிஸமும் இந்த இரண்டுபாகத்திலும் அனேக சங்கதிகள் பூரணமாக யாதொருகுறைவன்னியில் இந்தவித்தைபாளஞானப்பிரகாஸ கல்விஜமாகியோக முக்தியடையும் வழியுள்ள மர்மமும் பிராணாயாமத்தைப்பற்றிய ரகசிய விபரங்களும் இங்கிலீஷ் தமிழ் பூஞானிகளைத்திய ; ஔஷதங்களில் சிலது மகான்களால் முஸாகிதா வென்னும் ஞானயோகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட முறைகளும் இன்னம் மெஸ்மெரிஸ சித்திரப்படங்களுடன் ஆங்காங்கு அமைக்கப்பட்டும் அழகான எளியதமிழ் வசனநடையில்லனதாசிரியர்வழுக்கார் மௌலானா மவுலவி மஸாயிஹுல் A. முகமத்தாஹிர் ஷாஹ்காதிரிய்யி அவர்களாலும் அவர்களின் பூரண ஞான கடாட்ச உத்தரவைப்பெற்ற எம்மாலும் எழுதி வருகின்றமையால் மேற்படி புத்தகங்கள் கூடியசீக்கிரம் அச்சாகிவெளிவரும் இன்னம் முதற்பாகத்தில் சொல்லியபால வியாதி விபரங்களுக்கும் பாக்கிப்படங்கள் கொடுக்கப்பட்டு வருகிறது இதுவும் 2 ம் பாகத்தில் சேர்க்கப்படும் ஞானவிநோத அஷ்டமாசித்தியென்னும் முதற்பாகமாகிய மெஸ்மெரிஸம் முற்றுப்பெற்றது.

மனத்தின்ஸ்புலனமேமாயாலீலா

சங்கற்பமில்லா திருத்தலேசமாதி

P. K. மைதீன் பாஷா

11909